Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

Regd. No. 2 975.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் 191, 192

P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 5 ஜீவியச் சந்தா ரூ. 100.

பதினறாண்டு நிறைவு நினைவுமலர்.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

குரோதிஸு கார்த்திகை, மார்கழிமீ 1964ஸு நவம்பர், டிசம்பர்மீ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமாநுஜன் 191, 192

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சி P. B. அண்ணங்கராசாரியர்.

பதினாறாண்டு நிறைவு நினைவுமலர்.

ஸம்புடம் 16	1964ஆ நவம்பர், டிசம்பர்ீ குரோதி ஆ கார்த்திகை, மார்கழிீ	ஸஞ்சிகை 11, 12

திருவாய்மொழி நூற்றந்தாதி—78.

கண்ணிறைய வந்து கலந்தமா லிக்கலவி *
திண்ணிதா வேணுமெனச் சிந்தித்து—*தண்ணிதெனு
மாருயிரினேற்றமது காட்ட வாய்ந்துரைத்தான் *
காரிமாறன் கருத்து.

கண் நிறைய வந்து கலந்த மால்	கண்ணாரவந்து கலந்த எம்பெருமான்	ஆர் உயிரின்	அருமையான ஆத்மாவினுடைய
இக்கலவி திண்ணிலை ஆவேணும் என சிந்தித்து	இந்தக்கலவியானது சாச்வதமாயிருக்க வேணுமென்றெண்ணி	ஏற்றம் அது காட்ட	ஏற்றத்தைக் காட்டிக் கொடுக்க
தண்ணிது எனும்	கீழே சிறியதென்பதாக ஆழ்வார் பேசின	காரிமாறன் ஆய்ந்து	ஆழ்வார் ஆராய்ந்து
		தன் கருத்து உரைத்தான்	தமது திருவுள்ளத்தை அருளிச்செய்தார்.

.—இருத்தும் வியந்தென்கிற கீழ்த்திருவாய்மொழியிலே பெருவகையோடே எம்பெருமானை யநுபவிக்கிற வளவில் ஆழ்வார் "சிறியேனுடைச் சிந்தையுள்" என்று தம்முடைய சிறுமையை அநுஸந்தித்தார்; அதனால் இவர் நைச்யாநுஸந்தானம் பண்ணி அகலக்கூடுமென்றெண்ணின எம்பெருமான் இந்த ஸம்ச்லேஷம் இடையறாது செல்லவேணுமென்று கருதி; 'ஆழ்வீர்! மிகவுயர்ந்ததான ஆத்ம வஸ்துவை நீர் தண்ணிதாக நினைப்பது தகுதியன்று; இதன் ஏற்றத்தைக் காணீர்' என்று ஆத்ம ஸ்வரூப வைலக்ஷண்யத்தைக் காட்டிக் கொடுக்க, இனி நைச்யாநுஸந்தானம் பண்ணி அகலமாட்டாமையாகிற தமது திருவுள்ளத்தை வெளியிட்டாராழ்வார் *கண்கள்சிவந்து பதிகத்தில். இதில் "தெருளும் மருளும் மாய்த்தோமே" என்றதில் நோக்காக "காரிமாறன் தன் கருத்து ஆய்ந்துரைத்தான்" என்றது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமாநுஜன் ஜீவியச்சந்தா செலுத்தியவர்கள்.

ஸ்ரீமான் உ. வே. K. V. ராகவாச்சாரியர், டில்லி, உயர்திரு N. வேணுகோபால நாய்க்கர், B. A., B. L., புது டில்லி. இவ்விருமஹான்களும் ஜீவியச்சந்தாதாரராகச் சேர்ந்தார்கள்.

ஸாதாரணச் சந்தாசெலுத்தியவர்கள்.

121. ஸ்ரீ. உ. வே. பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமி, ஸத்யமங்கலம்.
122. „ T. N. மகரபூஷணமையங்கார், தென்திருப்பேரை.
123. „ V. S. வெங்கடாசாரியர் ஸ்வாமி, விட்டலாபுரம்.
124. „ வானமாமலை வெங்கட்ரங்காசாரியர் ஸ்வாமி, மாடுங்கா.
125. „ T. ராமஸ்வாமி ஐயங்கார், திருவல்லிக்கேணி.
126. „ R. துரைஸாமி ஐயங்கார், ஈரோடு.
127. „ C. R. ராமஸ்வாமி ஐயங்கார் B. A., B. L., கோயம்புத்தூர்.
128. „ K. S. ரங்கநாதையங்கார், கோப்பூர்.
129. ஸ்ரீமான் க. வெ. பெத்து செட்டியார், திருமங்கலக்குடி.
130. ஸ்ரீமதி A. B. முதலியார் மரகதவல்லியம்மா, கோனேரிகுப்பம்,
131. ஸ்ரீமான் M. வெங்கடபதியவர்கள், சென்னூர்.

ஸ்ரீராமாநுஜன் பதினாருண்டு நிறைவு நினைவுமலர்.

அன்பர்களே! நமது ஸ்ரீராமாநுஜனுக்கு நிகழும் மார்கழித்திங்களில் பதினாருண்டு பூர்த்தியாகி, வரும் தைத்திங்களில் பதினேழாமாண்டு தொடக்கமாகிறது. பதினாருண்டு கழிந்தால் பால்யதசை நீங்குகின்றதென்கிற நூற்கொள்கையின்படியும் பண்டைக்காலத்து மரபின்படியும் நம் ராமாநுஜனுக்கு இப்போது பால்யதசை நீங்கி யௌவனதசாப்ராதுர்ப்பாவம் தலைகாட்டவிருக்கின்றது. இந்த ஸமயவிசேஷத்தில் கார்த்திகை மார்கழி இரண்டு மாதங்களின் ஸஞ்சிகைகளைச் சேர்த்துப் பதினாருண்டு நிறைவு நினைவு மலராக இதனை வெளியிடுகின்றோம். பதினாறு பதினாருகச் சில சிறந்த விஷயங்களை விசேஷித்து வெளியிட உத்தேசிக்கிறோம். பதினாறென்கிற எண்ணிக்கையை நினைத்தவுடனே ஷோடசாயுத ஸ்தோத்ரமென்பது முந்துறமுன்னம் நினைவிலெட்டியது. இது ஸ்ரீமந்நிகமாந்த மஹாகுரு பணித்த ஸ்தோத்ரநூல்களிலொன்று. திருவாழியாழ்வான் தனது திருக்கரங்களிரண்டிலும் ஏந்தியுள்ள பதினாறு படைகளைப் புகழ்ந்தது. இதற்குச் சிறந்ததொரு வியாக்கியானமிட்டு இந்த ஸந்தர்ப்ப விசேஷத்தில் வெளியிடவேணுமென்று தோன்றி அப்படியே வெளியிடுகிறோம். தவிர பதினாறு நன்மொழிகள் பக்தர்களுக்கு மிகவுபயோகமானவையும் வெளியிடப்படுகின்றன. அன்றியும், விசதவாக் சிகாமணிகளென்ற விருதுபூண்ட மணவாளமாமுனிகளின் வியாக்கியான திவ்யஸூக்தி மாலையிலிருந்து பதினாறு விசதவாங்மணிகளைத் தேர்ந்தெடுத்து வெளியிடுகிறோம். இவற்றால் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களில் அவருடைய விமர்ஸஶக்தி விசேஷம் வித்யாபரிச்ராந்தர்களுக்கு விளங்கும். "ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தானமும்—தாதாசார்யகுடும்பமும்" என்கிற மகுடத்தின் கீழ்ப் பதினாறு விஷயங்கள் வெளியிடுகிறோம். இவை தவிர ஸ்ரீவரவரமுநிசதகவியாக்கியானமும் தயாசதக வியாக்கியானமும் ஸவிசேஷமாக வெளியிடப்படுகின்றன. இவை க்ரமேண ஸ்ரீராமாநுஜனிலேயே பூர்த்தியாகி வெளிவரும். ஸம்ஸ்க்ருத நூல்களின் வெளியீட்டில் விருப்பமில்லாதவர்கள் வியாக்கியானம் தமிழிலிருப்பதைக் கொண்டு த்ருப்தியடையக் கடவர்கள். .... (*)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

பேருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரிய ரெழுதிய

பரமார்த்தபூஷணம்

— இதிலடங்கிய வியாசங்கள் —

1 ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தானமும்—
தாததேசிக குடும்பமும்

2 ஷை ஆங்கில வியாஸம் (Sri T. A. S.)

3 விசதவாக் சிகாமணி வாக்வைசத்யம்

4 பதினாறு நன்மொழிகள்

5 பச்சைப் பசும்பொய்யைப்பற்றிப் பதினாறு

ஸ்ரீ ராமாநுஜன் வெளியீடு

கிடைக்குமிடம் :

P. B. ANNANGARACHARYA

L. KANCHEEPURAM

20-12-64] [விலை 1-50

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

P. B. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

விசதவாக்சிகாமணி வாக்வைசத்யம்.

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய தாஸன்.

1. மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்திகளுக்கு அநிதர ஸாதாரணமான ஒரு சிறப்புண்டு. பிள்ளைலோகாசார்யருடையவும் அவருடைய திருத்தம்பியாருடையவும் ஸ்ரீஸூக்திகளில் பரஸ்பர விரோதமோ பூர்வ ஸ்ரீஸூக்திவிரோதமோ, ஔசித்ய விரோதமோ ஆபாதத: தோன்றுவதற்கு ஸ்வல்ப ப்ரஸக்தி யிருந்தாலும் எடுத்துக் களையு மழகு மாமுனிகளின் வியாக்கியானங்களிலே அஸாதாரணமாக விளங்கும். அப்படிப்பட்ட அரிய பெரிய விமர்சங்களுள் சிலவற்றை இங்கெடுத்துக் காட்டுவோம்.

விச்லேஷத்தில் பிராட்டியின் புருஷகாரத்வம் தோற்றுவதெங்ஙனே?

1. ஸ்ரீவசநபூஷணத்தில் (3) "ஸம்ச்லேஷ விச்லேஷங்களிரண்டிலும் புருஷகாரத்வம் தோற்றும்" என்ற சூர்ணைக்கு வியாக்கியான மருளிச்செய்து தலைகட்டினபின்—

> "திருவடி ராக்ஷஸிகளை அபராதாநுகுணம் தண்டிக்கும்படி காட்டித்தரவேணுமென்றவளவில் பிராட்டி அவனுடனே மன்றாடி ரக்ஷித்தவித்தனையன்றோ? * மாதர்மைதிலி!* என்று பவநாத்மஜன் நிமித்தமாக ரக்ஷித்தாளென்றன்றோ பட்டருமருளிச் செய்தது. அவ்விடத்தில் புருஷகாரத்தமை எங்ஙனேயென்னில், பலாத்காரத்தாலன்றிக்கே அநு(நய)ஸாரத்தாலே அபராதங்களைப் பொறுப்பிக்கையாலே புருஷகாரத்வமென்கிறது."

என்றருளிச்செய்தது காண்க. ... . (*)

பிராட்டியின் ச்ராவயித்ருத்வம் சேதந விஷயத்தில் எங்ஙனே?

2. (11) "இருவரையும் திருத்துவது முபதேசத்தாலே" என்ற சூர்ணையில், "ச்ராவயித்ருத்வம் என்கிறவிது ஈச்வரவிஷயமாகவே பூருவர்களின் க்ரந்தங்கள் பலவற்றிலும் காணப்பட்டதாகிலும்......தத்வதீபத்திலே சேதந விஷயமாகவும் ஜீயருளிச் செய்கையாலே இவ்விடத்திலும் சேதநவிஷயமாகவும் சொல்லக்குறையில்லை"

என்றருளிச் செய்ததும் காண்க. .... (*)

அர்ஜுநனுக்கு தூத்ய ஸாரத்யாதிகள் பண்ணினது தோஷத்தைப் பச்சையாகக் கொண்டென்றது எங்ஙனே?

3. மேலே (22) "அர்ஜுநனுக்கு தூத்யஸாரத்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக" என்ற சூர்ணைக்கு வியாக்கியானமருளிச் செய்தபின்,

> "தூத்யஸாரத்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றுமிவளுக்காகவாகில், இவன் தோஷத்தைப் பச்சையாகக்கொண்டு அங்கீகரித்தானென்னுமது கூடாதியென்னில்; அதுக்குக் குறையில்லை. இவள்கார்யார்த்தமாக இவனைக் குறித்து இவையெல்லாம் செய்கிறவிடத்தில் இவன் தோஷங்களைப் பார்த்து முகம் சுளியாமல் உகப்போடே செய்கையாலே......"

என்றருளிச் செய்ததுங்காண்க. ... . (*)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"இப்படி சொல்லுகிறதும் ஸாற்றத்தைப் பற்ற" என்ற விடத்து ஸங்காபரிஹாரங்கள்.

4. மேலே (43) "அஜ்ஞானத்தாலே ப்ரபந்நர் ஜநகாதிகள்.........இப்படி சொல்லுகிறதும் ஸாற்றத்தைப்பற்ற." என்றவிடத்து வியாக்கியானத்தில்—

"இந்த யோஜனைக்கொரு குறையுண்டு; * மயர்வறமதிநலம் பெற்ற ஆழ்வார்களுக்கும் அஜ்ஞானம் சிறிது கிடக்கிறதுண்டென்று கொள்ளவேண்டி வருகையாலே; ஆனால் செய்வதென்னெனில்; (ஸாற்றத்தைப்பற்றி) என்கிறவித்தை அநுஸந்தானபரமாக்கி யோஜிக்குமளவில் இவ்விரோதமில்லை."

என்றருளிச்செய்து உடனே அதை வெகு விசதமாக விவரித்தருளி விரோத ஸமநம் செய்தருளியிருக்குமழகு காணத்தக்கது.

"இந்த ஸ்வபாவ விசேஷங்கள்......... காணலாம்" என்றவிடத்து ஸங்காபரிஹாரங்கள்

5. மேலே (53) "இந்த ஸ்வபாவவிசேஷங்கள் கல்யாணகுணங்களிலும் திருச்சரங்களிலும் திருநாமங்களிலும் திருக்குழலோசையிலுங் காணலாம்" என்றவிடத்து

"குணாதிகளை பாதகங்களாகவும் ஸாதகங்களாகவும் பேசுகிறவிடத்தில் இரண்டுமொருவர் பேச்சன்றிக்கே யிருந்ததே யாகிலும், ஆழ்வார்களெல்லாரும் ஏகப்ரக்ருதிகளாகையாலும், எல்லாருடைய பக்தியும் ஸமவத் ப்ரஸாதலப்தையான பரபக்தியாகையாலும் அந்த பக்தி ஸ்வபாவ விசேஷங்கள் காட்டுகிறமாத்ரமே இவ்விடத்தில் அபேக்ஷிதமாகையாலே விரோதமில்லை. * சரங்களே கொடிதாயடுகின்ற * என்றவிது பராஜிதரானவர் பாசுரமன்றோ? அத்தை * சரங்களாண்ட * என்கைக்கு ப்ரதிகோடியாகச் சொல்லலாமோ வென்னில், ராமவிஜயம் தமக்கு இஷ்டமாகையாலே அந்த விஜயத்துக்கு இலக்காய்த் தோற்ற ராக்ஷஸர் தசை பிறந்து, பிராட்டியார் தசைபிறந்து பேசுமாபோலே, தாமானதன்மை தோற்றுதே, தோற்ற ராக்ஷஸர் பாசுரத்தாலே விஜயத்தைப்பேசி யநுபவிக்கிறார்—என்றிறே அத்திருமொழிக்கு வியாக்கியானம் பண்ணியருளுகிற ஆசார்யர்களருளிச் செய்தது. ஆகையால் தம்முடைய ப்ரேமஸ்வபாவத்தாலே தசாவஸ்தரான பின்பு திருச்சரங்கள் பாதகமாயிற்றதும் தமக்கேயாய்த் தோற்றிப் பேசுகையாலே அப்படி சொல்லக்குறையில்லை."

என்றருளிச்செய்ததுங் காண்க. ... . (*)

"யத்யத் ஸாங்கம் தத்தத் ஸாதநம்" என்கிற நியாயத்தின் பரீக்ஷணம்;

6. மேலே (56.) "அங்கம் தன்னை யொழிந்தவற்றைப் பொருதொழிக" என்ற சூர்ணைக்கு அவதாரிகை இட்டருளுகிறவளவில்—

"சரமச்லோகத்தில் இத்தை ஸாங்கமாக விதிக்கையாலே 'யத்யத் ஸாங்கம் தத்தத் ஸாதநம்' என்கிற ந்யாயம் இதுக்கும் வாராதோ வென்ன, அங்க ஸ்வரூபத்தை சிக்ஷிப்பிக்கவே அந்ந்யாயம் இங்கு வாராதென்று பார்த்து அதுதன்னை யருளிச் செய்கிறார்"

என்று அவதாரிகையிட்டு, மேலே நிகமநம் செய்தருளுகிறபோது

"யத்யத் ஸாங்கம் தத்தத் ஸாதநமென்றவிடத்தில் ப்ரவ்ருத்திரூபமாய் ஸாங்கமாய் விஹிதமானவற்றையிறே ஸாதநமாகச் சொல்லுகிறது; அப்படியன்றிக்கே இதினுடைய அங்கம் நிவ்ருத்திரூபமாகையாலே இதுதானே இதினுடைய அநுபாயத்வ ஸூசகமென்று கருத்து."

என்றருளிச் செய்ததும் காண்க. இங்ஙனே பலவுண்டு ஸ்ரீவசநபூஷண வியாக்கியானத்தில். இனி தத்வத்ரய வியாக்கியானத்தில் சிறிது செல்வோம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பஞ்சீகரண மாமிடத்தில் பூதபேதவ்யவஹார மெங்ஙனே யென்று ஶங்கித்து ஸமர்த்தித்தல்.

7. தத்வத்ரய அசித்ப்ரகரணத்தில் (40) "குணவிஷமயம்-பஞ்சீகரணத்தாலே" என்று மூல ஸ்ரீஸூக்தியுள்ளது. பஞ்சீகரணமாவது என்னவென்றால், ஆகாசம் முதலான ஐந்து பூதங்களையும் தனித்தனியே இரண்டு கூறாகப் பிரித்து, அவற்றிலே ஒரு கூறை அப்படியே வைத்திட்டு, மற்றொரு கூறை நாலுகூறாக்கி அந்த கூறுகளை மற்ற நான்கு பூதங்களிலே கூட்டி எல்லா பூதங்களிலும் எல்லாக் குணங்களு முண்டாம்படி பண்ணுகை—என்று விவரணம் காட்டப்பட்டது. இப்படி பஞ்சீகரணத்தாலே எல்லா பூதங்களிலும் எல்லாமுமுண்டாயிருந்தால் ஆகாசம் வாயு தேஜஸ்ஸு அப்பு ப்ருதிவி யென்று பூதங்களை பேதப்படுத்தி வ்யவஹரிப்பது எங்ஙனே கூடுமென்று சங்கை யுதிக்கிறது. இதற்குப்பரிஹாரமாக மாமுனிகள் அருளிச் செய்வது பாரீர்—

"இப்படி பஞ்சீகரணமானாலும் அவிபக்தமான (ஸூக்ஷ்ம) அர்த்தங்கள் ப்ரதானங்களாய் நிற்கையாலே ஆகாசாதி பூத பேத வ்யவஹாரத்துக்கும் குறையில்லை—" என்று. இந்த ஸ்ரீஸூக்தியின் கருத்து யாதெனில், ஒவ்வொரு பூதத்தையும் இரண்டு கூறாக்கினபோது ஒரு கூறுமட்டுமே விபாகம் செய்யப்பட்டு இதர (நான்கு) பூதங்களில் கால் கால் பாகமாகச் சேர்க்கப்பட்டது. மற்றொரு கூறு அடியோடு விபாகம் செய்யப்படாமல் அப்படியே நிறுத்தப்பட்டிருப்பதால் அதனுடைய ப்ராசுர்யத்தைக் கொண்டு இது ஆகாசம், இது ப்ருதிவி…………………என்று பேத வ்யவஹாரம் செய்யப்பட்டு வருகிறதென்றதாயிற்று. … … …. ….(*)

சாந்தோக்யத்தில் பஞ்சீகரணத்தைச் சொல்லாதே த்ரிவ்ருத் கரணம் சொன்னதுக்கு நியாமகம் காட்டுதல்.

8. பஞ்சீகரணம் த்ரிவ்ருத்கரணம் என்று இரண்டுண்டு. சாந்தோக்யத்தில் த்ரிவ்ருத்கரணம் மட்டுமே சொல்லிற்று; பஞ்சீகரணம் சொல்லப்படவில்லை. இதைப் பற்றிச் சிலர் சங்கிக்கக் கூடுமென்று திருவுள்ளம் பற்றின மாமுனிகள் (41.) சூர்ணையின் வியாக்யானத்திலே அருளிச் செய்திருப்பதாவது—

"சாந்தோக்யத்தில் பஞ்சீகரணம் சொல்லாதே த்ரிவ்ருத் கரணத்தைச் சொல்லுவானென்னென்னில்; அங்கு தேஜோபந்நங்கள் மூன்றினுடையவும் உத்பத்தி மாத்ரமிறே சொல்லிற்று; ச்ருத்யந்தரத்திற் சொல்லுகிற ஆகாச வாயுக்களினுடையவும் அவ்யக்த மஹதஹங்காராதிகளினுடையவும் உத்பத்தி தானும் சொல்லிற்றில்லையிறே. ஆகையால் தேஜோபந்நமாத்ரகதநம் தத்வாந்தரங்களுக்கும் உபலக்ஷணமானாப் போலே த்ரிவ்ருத்கரண கதநமும் பஞ்சீகரணத்துக்கு முபலக்ஷணம்." என்று. …. …. (*)

"ஸவிக்ரஹனாய்க் கொண்டு ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணு" மென்றவிடத்து ஶங்காஸமாதானங்கள்.

9. மேலே ஈச்வர ப்ரகரணத்திலேயே (40) "இவன் தான் *முந்நீர் ஞாலம் படைத்த வெம்முகில் வண்ணனே* யென்கிறபடியே ஸவிக்ரஹனாய்க் கொண்டு ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணும்" என்று மூலத்திலருளிச் செய்யப்பட்டுள்ளது. ஈச்வரன் ஜகத்ஸ்ருஷ்டி பண்ணும்போது விக்ரஹ விசிஷ்டனாய்க் கொண்டே பண்ணுகிறானென்று திருவுள்ளம் பற்றின பிள்ளை லோகாசார்யர் இவ்விஷயத்திற்கு *முந்நீர் ஞாலம் படைத்த வெம்முகில் வண்ணனே* என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை ப்ரமாணமாகக் காட்டியருளினாராயிற்று. முகில்வண்ணனென்கிறதற்கு இங்ஙனே பூர்வாசார்யர்கள் வியாக்யானமிட்டிருந்தாலொழிய இவ்விட

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திற்கு இது ப்ரமாணமாகத் தகுதியில்லை. பூர்வாசார்ய வியாக்கியானமோ இப்படியில்லை; வேறுவிதமாகவுள்ளது; அப்படியிருக்க, இந்த சந்தை ஸூக்ஷ்ம விஷயத்திற்கு எங்ஙனே ப்ரமாணமாகும்? என்கிற சங்கை மணவாள மாமுனிகளின் திருவுள்ளத்திலே தோன்றிற்று; அதையும் அதன் பரிஹாரத்தையும் அருளிச் செய்திருப்பது பாரீர்; இங்கு வியாக்கியான ஸ்ரீஸூக்தி வருமாறு:—

"*முகில்வண்ணனென்கிற வித ஔதார்ய குணபரமாக வ்யாக்க்யாதாக்கள் பலரும் வ்யாக்க்யானம் பண்ணினார்களே யாகிலும், விக்ரஹ பரமாக இவரருளிச் செய்கையாலே இங்ஙனு மொரு யோஜனை யுண்டென்று கொள்ளவேணும்; ஒன்றுக்குப் பல யோஜனையு முண்டாயிறே யிருப்பது" என்று. .... (*)

" லக்ஷ்மீ பூமி நீளா நாயகனும் " என்றதை உபபாதித்தருளாமையைப் பற்றி.

10. அதற்குமேலே (3-42.)"ஈச்வர ஸ்வரூபந்தான் பரத்வம் வ்யூஹம் விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சாவதார மென்று அஞ்சு ப்ரகாரத்தோடே கூடியிருக்கும்" என்கிற சூர்ணைக்கு வியாக்கியான மருளிச் செய்தபின்,........"ஆகையால் விரோதமில்லை" யென்கிற ஸ்ரீஸூக்தி காணப்படுகிறது. அந்த ஈச்வர ப்ரகரணத்தின் முதல் சூர்ணையில் " ஈச்வரன் அகிலஹேய ப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபனாய் " என்று தொடங்கி எம்பெருமானுக்கு அநேக விசேஷணங்கள் ஸாதித்து வருமவர் "விலக்ஷண விக்ரஹயுக்தனாய் லக்ஷ்மீ பூமி நீளா நாயகனா யிருக்கும்" என்று (அந்த முதல் சூர்ணையைத்) தலைக்கட்டினார். உடனே முன்னம் தாமிட்ட விசேஷணங்களைத் தாமே முறையே விவரணம் செய்து வருகிறார். அதில் 'லக்ஷ்மீ பூமி நீளா நாயகனா யிருக்கும்' என்றது விவரிக்கப்படவேயில்லை. "விலக்ஷண விக்ரஹ யுக்தனாய்" என்ற ப்ரஸங்கத்திலே ஈச்வர ஸ்வரூபத்தை யெடுத்துக் கொண்டு அது பஞ்சப்ரகாரமென்று சொல்லி அந்த ஐந்து ப்ரகாரங்களை விவரித்து க்ரந்தத்தை ஸமாப்தி செய்துவிட்டார் பிள்ளைலோகாசார்யர்; லக்ஷ்மீ பூமி நீளா நாயகத்வமாகிற விசேஷணம் விவரிக்கப்படாமலே நின்றுபோயிற்று. இது குறையல்லவா வென்று சங்கித்துப் பரிஹாரமுணர்த்துகிறார் மாமுனிகள். இவ்விடத்து வியாக்கியான பங்க்திகளிவை—'லக்ஷ்மீ பூமி நீளா நாயகனா யென்றத்தையு முபபாதித்துவிட்டு பின்னை இது சொல்லாதொழிவானென்னென்னில், அதில் உபபாதிக்க வேண்டுவது பணியில்லாமையாலும் *வைகுண்டேது பரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்தந:, உபாப்யாம் பூமி நீளாப்யாம் ஸேவித: பரமேச்வர:*என்கையாலே மேல் சொல்லுகிற பரத்வத்திலே அர்த்தாத் உக்தமா மென்னு மத்தைப் பற்றவும் தனித்து உபபாதித்திலர்; ஆகையால் விரோதமில்லை" என்று. .... (*)

பரத்வாதி பஞ்சப்ரகாரவைசிஷ்ட்யம் ஈச்வர ஸ்வரூபத்திற்கா? விக்ரஹத்திற்கா?

11. மேலே எடுத்துக்காட்டினவிடத்திலேயே மற்றொருவிளக்கமுமுள்ளது. பரத்வாதி பஞ்சப்ரகார விசிஷ்டத்வம் ஈச்வரனுடைய ஸ்வரூபத்திற்கா? அல்லது திவ்யமங்கள விக்ரஹத்திற்கா? என்றொரு விசாரம் விளைந்தது. அதை விரிவாக நிரூபித்து விரோதம் தோன்றும்படியைக் காட்டிப் பரிஹாரம் செய்தருளுகிறார் மணவாள மாமுனிகள்; இவ்விடத்து ஸ்ரீஸூக்திகள் வருமாறு—"ஈச்வர ஸ்வரூப மென்கிற விடத்தில் ஸ்வரூப சப்தத்தாலே சொல்லுகிறது ஸ்வாஸாதாரண விக்ரஹத்தை யாதல்—விக்ரஹ விசிஷ்டமான ஸ்வரூபந்தன்னை யாதல். ஸங்க்ரஹேண இட்டருளின மற்றை யிரண்டு தத்வத்ரயப் படியிலும். ஒரு படியிலே "திருமேனியும் அஞ்சுபடியா யிருக்கும்–பரத்வமும் வ்யூஹமும் விபவமும் அந்தர்யாமித்வமும் அர்ச்சாவதாரமும்" என்றும், மற்றைப் படியிலே "ஈச்வர ஸ்வரூபமும் ஹேய ப்ரதி

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

படமாய்" என்று தொடங்கி "பத்நீ பரிஜந விசிஷ்டமா யிருக்கும்" என்றத்தை உபபாதித்த வனந்தரம் 'இதுதான் அஞ்சுபடியா யிருக்கும்' என்று இதம சப்தத்தாலே ப்ரக்ருதமான ஈச்வர ஸ்வரூபத்தைப் பராமர்சித்து, அதுதான் பரத்வாதி ரூபேண பஞ்ச ப்ரகாரமாயிருக்கு மென்றும் இவர் தாமே யருளிச்செய்கையாலே." என்று. இத்தால் விரோத சங்கா பரிஹாரம் செய்யப்பட்டபடி யென்னென்னில்; ஈச்வர ஸ்வரூப மென்றது—ஸ்வாஸாதாரண விக்ரஹத்தைச் சொன்னதாகவு மாகலாம், விக்ரஹ விசிஷ்டமான ஸ்வரூபத்தைச் சொன்னதாகவு மாகலாம் என்று.

வியூஹம் மூன்றா? நான்கா?

12. அவ்விடத்திலேயே அதற்குமேலே (44) "வ்யூஹபாவத்து ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரார்த்தமாகவும் ஸம்ஸாரி ஸம்ரக்ஷணார்த்தமாகவும் உபாஸகாநுக்ரஹார்த்தமாகவும் ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபேண நிற்கும் நிலை" என்கிற சூர்ணையினாலும் வ்யூஹம் மூன்று விதமென்று தெரிவிக்கப்பட்டது. மேலே (53) "நித்யோதித சாந்தோதிதாதி பேதமும்" என்றருளிச் செய்யுமிடத்தில் சாந்தோதித ஸம்ஜ்ஞகரா யிருக்கிற வ்யூஹ வாஸுதேவர் தெரிவிக்கப்பட்டாராகிறார். இதனால் வ்யூஹம் நான்கு வகை யென்றதாகத் தேறுகிறது. ஆக, ஓரிடத்தில் மூன்றுவகை யென்பதும், மற்றோரிடத்தில் நான்கு வகை யென்பதுமான விரோதம் காண்கிறது. மணவாளமாமுனிகள் இங்கே யருளிச் செய்வது பாரீர்;—வ்யூஹங்கள் நாலென்றும் மூன்றென்றும் சாஸ்த்ரங்களிலே சொல்லும்; நாலுமுண்டாயிருக்க மூன்றென்கிறது வ்யூஹ வாஸுதேவ ரூபத்துக்கு பரரூபத்திற் காட்டில அநுஸந்தேய குணபேதமில்லாமையாலே யென்று அபியுக்தர் சொல்லுகையாலே இவர் இங்கு வ்யூஹத்ரய மென்றருளிச் செய்ததுக்கும் இங்கு வ்யூஹ வாஸுதேவ ருண்டாக வருளிச் செய்ததுக்கும் விரோதமில்லை." இது (53) சூர்ணையின் வியாக்கியானத்தில் காணும் ஸ்ரீஸூக்தி. (44) சூர்ணையின் வியாக்கியானத்திலும் (முடிவில்)—"*சதுர்விதஸ் ஸ பகவான்* என்கிறவிடத்தில் சதுர்விதமாகச் சொல்லிற்று வாஸுதேவரையும் கூட்டுகையாலே" என்றருளிச் செய்துள்ளார்.

பத்மநாபாதிவிபவங்கள் முப்பத்தாறா? முப்பத்தோன்பதா?

13 கீழே உதாஹரித்த தத்வத்ரய (53)சூர்ணையிலேயே "ஷட்த்ரிம்சத்பேதபிந்நமான பத்மநாபாதி விபவமும்" என்றுள்ளது. இதனால் பத்மநாபாதி விபவங்கள் முப்பத்தாறென்று காட்டப்பட்டது, இது "ஷட்த்ரிம்சத்பேதபிந்நாஸ்தே பத்மநாபாதயஸ் ஸுரா:" என்ற ப்ரமாணத்திற்குச் சேர்ந்ததே. இங்கே மணவாளமாமுனிகளின் வியாக்கியானம்—

"விஹவாவஷநாஹாத்தா: த்ரிம்ஶது நவசைவஹி.... ... . த்ரிம்ஶது நவசைவஹி வஷநாஹாதயோ மதா:*" என்று முப்பத்தொன்பதாக அஹிர்புத்ந்ய ஸம்ஹிதாதிகளிலே சொல்லிற்றே யாகிலும், விஷ்வக்ஸேந ஸம்ஹிதையிலே முப்பத்தாறுச் சொல்லி யிருக்கையாலே இவர் ஷட்த்ரிம்சத்பேத பிந்நமென்றதில் குறையில்லை; இனி அந்த முப்பத்தொன்பதிலே மூன்றைக் குறைத்துக் கொள்ளுகையிறே யுள்ளது. அவை யாவன கபில தத்தாத்ரேய பரசுராம ரூபமான ஆவேசாவதாரங்கள்" என்று.

இத்தால் முப்பத்தாறென்றும் முப்பத்தொன்பதென்றும் சொன்னவற்றுக்கு ஸ்வாரஸ்யம் காட்டியருளினாராயிற்று. இனி ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்திலே சிறிது செல்வோம்.

அருளிச்செயலில் பாடபேதமும் அர்த்தபேதமும்.

14. ஆசார்ய ஹ்ருதயத்தில் (50) "இயற்பா மூன்றும் வேதத்ரயம்போலே; பண்ணார் பாடல் பண்புரை யிசைகொள் வேதம் போலே" என்ற சூர்ணையில் * பண்ணார் பாடலித்யாதி வாக்யத்தினால் திருவாய்மொழிக்கு ஸாமவேத ஸாம்யம் கூறப்படுகிறது. இங்கே மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்மின்:—

"வ்யாக்க்யானங்களில் * பண்புடை வேதம்* என்றெழுதிய * பண்புரை வேதமென்று பாடமும் * இசைகொள் வேத மென்கிறதுக்கு ஸாமவேத பரத்வமும் கண்டதில்லையே யாகிலும் ஆப்ததமரான விவர் இப் ப்ரபந்தத்திலே இப்படி யருளிச் செய்கையாலே இப்படியும் கொள்ளவேணும்." என்று.

மஹான்களின் ஸ்ரீஸூக்திகளில் பரஸ்பர விரோத சங்கை பண்ணலாகாதென்றவாறு.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆழ்வாருடைய யாத்ருச்சிக ஸுக்ருத விமர்சம்.

15. ஆசார்ய ஹ்ருதயம் இரண்டாம் ப்ரகரணத்தில் ஆழ்வார்க்கு விளைந்துள்ள பரம பக்தியானது பகவந் நிர்ஹேதுக க்ருபையினாலத்தனை யல்லது கர்மஜ்ஞான பக்திகளாகிற ஸாதனங்களின் அநுஷ்டானத்தினாலன்று என்பதைப்பல சூர்ணைகளினால் பரக்க உபபாதித்து வருகிறார் மூலகாரர்; யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகம் என்று சொல்லப்படுகிற ஸுக்ருதாபாஸங்கள்கூட ஆழ்வாரிடமில்லை யென்று பரக்க உபபாதித்தார். (107) "மூந்நீர் வாழ்ந்தார் சூட்டுங் கோவை யாழி யென்கிற ஸாக்ஷாத்க்ருத ஸ்வபர வ்ருத்தாந்தர்க்கு யாத்ருச்சிகாதிகள் உண்டாகில் தோன்றும்" என்னும் சூர்ணை முக்கியமாகக் காணத்தக்கது. ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் ஸாக்ஷாத்கரித்து அருளிச் செய்திருக்கிற ஆழ்வார்க்கு அஜ்ஞாதமான தொன்று மில்லாமையாலே தம்மை எம்பெருமான் அங்கீகரிப்பதற்கு மூலமான ஏதேனுமொரு ஸுக்ருதமுண்டாகில் அது ஆழ்வாருடைய புத்திக்கு எட்டாம லிராது; எட்டியே யிருக்கும். அதை அருளிச் செய்யாது விடமாட்டாராழ்வார்; அப்படி யருளிச் செய்யக் காணாமையாலும், கேவல நிர்ஹேதுக பகவத் ப்ரஸாதத்தையே வெளியிட வல்ல ஸ்ரீஸூக்திகளையே ஆழ்வாருளிச் செய்திருக்கக் காண்கையாலும் யாத்ருச்சிகம் முதலான ஆபாஸ ஸுக்ருதங்களும் இவர்க்கு இல்லையென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று. இதற்குமேல் மூன்று சூர்ணைகளுக்கு அப்பால் "மாதவன் மலை நீர் நிழலென்று எதிடுமது வ்யாவ்ருத்த்யுக்தி, அந்யார்த்தம் அபுத்திபூர்வம், அவிஹிதம், ஃபலவிஸத்ருசம் ஃபலாந்தரஹேது" என்ற சூர்ணை அருளிச்செய்யப்பட்டுள்ளது. இத்தால் என்ன தெரிவிக்கப் படுகிறதென்றால், ஆழ்வாருடைய இரண்டு பாசுரங்களை எடுத்துக் காட்டி இவர்க்கு யாத்ருச்சிகஸுக்ருத முண்டு என்று தெரிவிக்கப்படுகிறது. எங்ஙனே யென்னில்; திருவாய்மொழியில் (2-7-3) "மாதவனென்றதே கொண்டு என்னை யினி யிப்பாற் பட்டது, யாதவங்களும் சேர்கொடே னென்று என்னுள் புகுந்திருந்து" என்கிற பாசுரத்தினால் மாதவன் என்கிற திருநாமத்தைத் தாம் அஹ்ருதயமாகச் சொன்னதாகவும், அவ்வளவிலே இத்தையே பெரிய ஹேதுவாகக் கொண்டு எம்பெருமான் தம்மை விஷயீகரித்துத் தம்முள்ளே புகுந்திருந்து ஸகல கர்மங்களையும் போக்கினதாகவும் சொல்லப்படுகிறது. மேலே "திருமாலிருஞ் சோலைமலை யென்றே னென்னத் திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்" (10-7-1) என்கிற பாசுரத்தினாலே—திருமாலிருஞ்சோலைமலை யென்று அவனுடைய திவ்யதேசத்தின் பெயரை அஹ்ருதயமாகத் தாம் சொன்னதாகவும், அவ்வளவிலே அவன்தானுகந்து வர்த்திக்கிற திருமலையின் பெயரை விரும்பிச் சொன்னதாகக் கொண்டு பிராட்டியோடே கூடவந்து தம்முள்ளே பரிபூர்ணமாகப் புகுந்ததாகவும் சொல்லிற்று. ஆக இவ்விரண்டு பாசுரங்களையும் மூலகாரர் எடுத்துக் காட்டி இப்பாசுரங்களிற் சொன்ன மாதவன் மலையென்னு முக்திகளுக்கு அஹேதுத்வத்தை யருளிச்செய்கிறார். அது இருக்கட்டும். மேலே யெடுத்துக் காட்டிய இரண்டு பாசுரங்களினாலும் ஆழ்வார்க்கு யாத்ருச்சிகம் முதலான ஸுக்ருதமுண்டு என்று காட்டப் பட்டு விட்டதல்லவா? 107 சூர்ணையில் யாத்ருச்சிகாதிகள் இல்லையென்று ஸாதித்துவிட்டு 111 சூர்ணையில் அவை யிருப்பதாகக் காட்டினது பரஸ்பர வ்யாஹதமென்று சங்கிக்கக் கூடியது. இவ்விடத்து வியாக்கியானத்திலே மணவாளமாமுனிகள் இந்த சங்கையை உத்பாவனம் பண்ணிப் பரிஹாரம் காட்டியிருப்பதை இனி யுணர்த்துகிறோம். மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகள் இவை—

"கீழே 'யாத்ருச்சிகாதிகள் உண்டாகில் தோன்றும்' என்றதுவும் இங்கே, மாதவனித்யாதியாலே அவனேறிடத் தக்கவை சிலவுண்டாக இவர் தம்முடைய உக்தியாலே கண்டெடுத்துக் கழிக்கிறவிதுவும் தன்னில் சேரும்படி யெங்ஙனே யென்னில்; யாத்ருச்சிகாதிகள்தான் பலவுமுண்டாகையாலே அத்யுத்கடங்களாய் மஹா பலத்துக்கு உறுப்பாய் வந்து விழுமவையும் ஆபாஸங்களா யிருக்குமவையு முண்டாகையாலே அத்யுத்கடங்களாய் அவனுக்கு ஹேதுவாகக் கொள்ளலாம்படி யிருக்குமவற்றைக் கீழே சொல்லிற்றாக்கி, ஆபாஸங்களாய் அவனாரோபித்துக் கொள்ளத்தக்கவற்றை இங்கே சொல்லிற்றென்று விபஜித்துக் கொள்ளுமளவில் விரோதமில்லை" என்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இங்ஙனே நாமெடுத்துக் காட்டத்தக்க ஸ்ரீஸூக்திகள் மற்றும் பலபல. இத்தகைய ஸமன்வய ஸ்ரீஸூக்திகளை மணவாளமாமுனிகளின் வியாக்கியான திவ்யக்ரந்தங்களிலன்றி மற்ற எந்த க்ரந்தத்திலும் காணமுடியாதென்பது சிலாலிகிதம். "அல்லும் பகலும் பயிப்பார் தங்களுக்குச் சொல்லும் பொருளும் தொகுத்துரைத்தான் நல்ல மணவாளமாமுனிவன்" என்று முன்னோர்கள் திருவாய்மொழி நூற்றந்தாதிக்கு இட்ட தனியன் அந்த நூற்றந்தாதியைமட்டும் பற்றியதன்று; மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி ஸமுதாயத்தைப் பற்றினது. மாமுனிகளைப்போல் பொருளையும் விவரிக்க வறியாமல் சொற்களையும் அடுக்கத் தெரியாமல் க்ரந்த மெழுதினவர்கள் பலருளர். வியாக்கியான மெழுத எழுத்தாணியைக் கையிற் கொள்ளவேணுமானால் அதற்கு மணவாளமாமுனிகளொருவர் தவிர மற்றையோர் முன் வருவது மஹத்தான ஸாஹஸமென்றே அடியேன் அறுதியிட்டிருப்பது. மாமுனிகளின் ஸர்வதோமுகமான வைதுஷ்யமும் அவருடைய திவ்ய ஸூக்திகளின் காம்பீர்யமும் ஸ்ரீஸூக்தி ரசநாவைகரியும் கடல் சூழ்ந்த மண்ணுலகில் வேறொருவர்க்கு அமைந்திலது.

நித்யசத்ருவிசிந்தந விமர்சம்

16. ஆசார்யஹ்ருதயத்திலேயே (127.) நம்மாழ்வார்க்கு சத்ருக்நாழ்வானோடு ஸாம்யம நிர்வஹிக்கிற விடத்திலே "நித்ய சத்ரு விசிந்தநம்" என்று மூலத்திலுள்ளது. அங்கு மணவாள மாமுனிகள் வியாக்கியானத்திலே "*விசிந்தயன் என்கிறபடியே" இத்யாதி யருளிச் செய்து தலைக்கட்டி, பிறகு விமர்ச ரூபேண அருளிச் செய்திருப்பதாவது—

"விசிந்தந மென்கிறவிதுக்கு இப்படி வியாக்கியானம் பண்ணிற்று; இதின் பட்டோலையானதிலே 'உறுமோ வென்று நித்ய சத்ருவைவென்று புலன்கொள் வடிவை விசிந்தயனாயிருக்கும்' என்று விசிந்தயந் என்று ஒருவசன முண்டாகவு மெடுத்து இப்படி இவர் தாமே யருளிச் செய்து வைக்கையாலே. இவ்விடத்திலும் சிந்தன மென்னுமல் விசிந்தன மென்றது அவ்வசன ஸூசகமாகவிறே. 'விசிந்தயன்' என்கிற வசனம் இன்ன விடத்திலே யென்று த்ருஷ்டமாய்த்தில்லை; வந்த விடத்திலே கண்டு கொள்வது"...... ...என்று.

இங்கே மாமுனிகளின் பரம ப்ராமாணிகத்வம் விளங்கும் படியைச் சிறிது விவரிக்கிறோம். ஸ்ரீராமாயணத்தில் அயோத்யா காண்டத்தில் (89-3) *ஜாமபி-நாஹம்ஸ்வபிமி (நாஹம் ஸ்வபிமிஜாமபி = நாஹம் ஸ்வபிமி' ஜாகர்மி' தமேவார்யம் விசிந்தயன்* என்கிற சத்ருக்ந வசனம் ஸ்பஷ்டமாகக் காணப்படாநிற்க, "விசிந்தயந் என்கிற வசனம் இன்னவிடத்திலே யென்று த்ருஷ்டமாய்த் தில்லை" என்று ஸர்வஜ்ஞான மாமுனிகள் அருளிச் செய்யக் கூடுமோ வென்கிற சங்கை உதிக்கின்றது. இங்கே தத்துவமென்ன வென்னில், *நாஹம் ஸ்வபிமி ஜாகர்மி* என்று மேலெடுத்த ச்லோகத்தில் அடுத்த பாதத்தில் பாடபேதம் நெடு நாளாகவேயுள்ளதாகத் தெரிகிறது. *தமேவார்யம் விசிந்தயந்* என்பது ஒருசாரருடைய பாடம்; *ராமமேவாநு சிந்தயந்* என்பது மற்றொரு சாரருடைய பாடம். இங்ஙனே பாடபேத முண்டென்பதைக் கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியான அவதாரிகையின் அரும்பதவிளக்கத்தில் ஸ்பஷ்டமாகக் காணலாம். அங்கு "அதாகிறது பெருமாளைப் பற்றும் போதும்" என்கிற பெரிய வாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திக்கு அவதாரிகை யிடுகையில் "*சத்ருக்நச் சத்ரமாததே* என்றும் *ராமமேவாநு சிந்தயந்* என்றுமிருக்க" என்கிற பங்க்தியைக் காணலாம். இதனால் (தமேவார்யம் விசிந்தயந்) என்கிற பாடத்தின் ஸ்தானத்திலே (ராமமேவாநு சிந்தயந்) என்கிற பாடமும் ஆசார்ய கோஷ்டியில் வழங்கி வந்ததென்பதை நன்குணரலாம். ஆசார்ய ஹ்ருதயகாரரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்க்கு (தமேவார்யம் விசிந்தயந்) என்கிற பாடம் வந்திருப்பதால் அதைக் கொண்டு அவர் "விசிந்தயனாயிருக்கும்" என்று பட்டோலையிலும் விசிந்தன மென்று ஆசார்ய ஹ்ருதயத்திலும் அருளிச் செய்யலாயிற்று. மாமுனிகளுக்கு (ராமமேவாநு சிந்தயந்) என்கிறபாடமே கிடைத்திருந்ததனால் (விசிந்தயந்) என்பதற்கு (அநுசிந்தயந்) என்பதை யெடுத்துக் காட்ட ஔசித்ய மில்லையாயிற்று. இது மாமுனிகளுக்கே அஸாதாரணமான பத்ததி.

மாமுனிகள் தமது வியாக்கியானங்களில் பாட விசாரம் செய்தருள்வது முண்டு; அதைப்பற்றியும் இரண்டிடம் எடுத்துக் காட்டுதும். ஆசார்ய ஹ்ருதயத்திலே (55).

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"கல்பாதியில் தோற்றிற்று வர்ணிக்கும் சதுர் முகன் சந்தஸ்ஸும்" என்றவிடத்து வியாக்கியானத்தில்— "சந்தஸ்ஸென்கிற விது நினைவென்றே இவ்விடத்தில் கொள்ள வேணும்; சந்தமென்றே நினைவுக்கு வாசகம். சந்தஸ்ஸென்கிறவிதுவும் நினைவுக்கு வாசகமாக வந்தவிடங்களிலே கண்டுகொள்வது" என்றருளிச் செய்தார். 'இங்கு சதுர்முகன் அடிமும்' என்று தான் மூலமிருக்க வேண்டும். ஸ்வாமி தாராளமாகத் திருத்தியருளலாம். அது அவருடைய ஸரணியன்று. மேலே (224) *என்னையும் யாவர்க்கும் சுரர்க்காயிர்யாநிசூர்ணையில் "மெய்யமர் பக்தி பூமாபலமாகவும்" என்றே அக்காலத்தில் பலரும் பாடம் செய்து சொல்லிக் கொண்டிருந்தார்கள் போலும்; இது வியாகரண சாஸ்த்ர விருத்தமான பாடம்; இதைக் கண்டிக்காமல் ஒருவழியாலும் ஸமஞ்ஜஸமாக்க முடியாதாகையாலே ஸ்வாமி இங்கு அருளிச் செய்கிறார்— "ஸமாஸத்தில் பக்தி பூமபலமென்னவேணும்; பூமாபலமென்கிறது பாட ஸ்கலனத்தாலே வந்த தாமித்தனை" என்று தவறான பாடமென்று துணிந்து கண்டிக்கத் தேயாக வேண்டிய இடமாகையாலே கண்டிக்கப் பட்டது. நித்ய சத்ரு விசிந்தந மென்கிறவிடமும், சதுர் முகன் சந்தஸ்ஸுமென்கிறவிடமும் இப்படி அவசியம் கண்டித்தேயாக வேண்டிய இடங்களல்லாமையாலே அவ்விடங்களுக்குத் தக்கபடி யருளிச் செய்தாராயிற்று.

ஒரு சதுச்சாஸ்த்ரபண்டிதர் ஸ்ரீபாஷ்யப்ரவசநம் பண்ணுகின்றார். *லோகவத்து லீலா* என்கிற ஸூத்ரபாஷ்ய ப்ரவசனம் நடைபெறுகிறது. ஸ்ருஷ்டி ப்ரயோஜநம் கேவலா லீலைவ என்கிற ஸ்ரீபாஷ்யஸூக்தியை அவர் விசிகித்ஸாலேசமுமின்றிக்கே நிர்வஹித்துப் போராநின்றார். அவரைநோக்கி 'லீலையாவது என்ன?' என்று கேட்டோம். விளையாட்டு என்றார். சாஸ்த்ரஜ்ஞான நீர் ஸம்ஸ்க்ருத பாஷையாலே அதை நிர்வசிக்கலாகாதோ? என்றோம். தலைகாலில்லாதபடி எதையோ சொன்னார். அவர் மணவாள மாமுனிகள் திறத்து மாத்ஸர்யங்கொண்டிருந்தவர். அவர்க்கு நாம் தத்வத்ரயத்தில் (162) *ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் கேவல லீலையென்னுமிடத்து மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளையெடுத்துக் கையில் தந்தோம். திருப்பித் திருப்பிப் பார்க்கிறார்; ஒன்றும் விள்ளவில்லையவர்க்கு. பங்க்திகளின்மீது பொருளை உபபாதித்துக் காட்டினோம். "மணவாள மாமுனிகளைப்போல் மிகத் தெளிவுபட சாஸ்த்ரார்த்தங்களை நிரூபிக்கவல்லார் *நபூதோ நபவிஷ்யதி என்று கைகூப்பிச் சென்றார். பாஷ்யகாரர் எழுதியருளின ஸம்ஸ்க்ருதவாக்யமும், அதையடியொற்றிப் பிள்ளை லோகாசாரியர் அருளிய [மேலே காட்டிய] வாக்யமும் சிறிது திருத்தப்பட்டாலொழிய ஸமஞ்சிதமாகாதென்று மாமுனிகளின் உபாதகம். ஸ்ரீபாஷ்யத்தைப் பரிஷ்கரித்துக் காட்டியருளி, இங்ஙனேயாமிடத்து ஸ்ருஷ்டிரேவ லீலா ... என்று கூறினதாகத் தேறுகிறதென்றும், இது அஸங்கதமென்றும் காட்டியருளி, உபபந்நமாகும் வழியும் காட்டியுள்ளார்;

> "லீலையாவது தாதாத்விகரஸமொழிய காலாந்தரத்தில் வருவதொரு ஃபலத்தைக் கணிசியாமல் பண்ணும் வ்யாபாரமேயாகிலும் (மூலத்தில்) ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநமென்று ஸ்ருஷ்டிரூபவ்யாபாரத்துக்கு ப்ரயோஜநமாகச் சொல்லுகையாலே தாதாத்விகரஸமாத்ரத்தைச் சொல்லிற்றாகக்கடவது."

என்றுள்ள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திபோல் எங்கேனும் கண்டதுண்டோ? இங்கு சங்கையென்ன? ஸமாதானமென்ன? என்று கூட அறியமாட்டாத ப்ரவக்தாக்கள் எத்தனைவருளர்! ஸ்ருஷ்டி: பகவத: கேவலலீலா" என்னலாமே யொழிய "ஸ்ருஷ்டே: ப்ரயோஜநம் கேவல லீலா" என்னத்தகாது என்று இன்னமும் அறியப்பெறாதார் எத்தனைவருளர்! ஆழ்ந்து கூர்ந்து ஆராய்ந்து வியாக்கியானித்தருளும் பல்லாண்டு.

உபஸம்ஹாரம்;— ஸ்வாமியினுடைய வியாக்கியான ஸ்ரீஸூக்திகளை வாக்யந்தோறும் பதந்தோறும் எழுத்துத்தோறும் ஆழ்ந்து ஊன்றி நோக்குமளவில் *ஆசூஷவிஜ்ஞாநபவைசுயாசநி—ஆக்ருஷ்ட விஜ்ஞாநபலைகதாமநி* என்று ஆளவந்தாரால் கொண்டாடப்பட்ட திருவனந்தாழ்வானே ஸ்வாமி யென்னுமிடம் ஸர்வாத்மனா ஸம்ப்ரதிபந்நமாகும்......"

---

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பதிஞுறு நன்மொழிகள் P. B. A.

(உபந்யாஸக ஸௌபாக்யம் இருபத்தோராவது மலர்)

1. சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிற ஜ்யோதிஷ்டோமம் முதலிய கருமங்களுக்குப் பல நியமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புண்ணிய க்ஷேத்ரத்தில் செய்ய வேணும், வேறிடத்தில் செய்யலாகாது என்கிற தேசநியமமும், வஸந்தாதி காலங்களிலே செய்யவேணும், மற்ற காலங்களிலாகாது என்கிற காலநியமமும், ஸ்நாநம் பாதப்ரக்ஷாளநம் முதலியவற்றைச் செய்தபின் செய்யவேணும், வேறுபடியாகச் செய்யக்கூடாதென்கிற ப்ரகார நியமமும், த்ரைவர்ணிகரா யிருக்கவேணும், அத்ரைவர்ணிகர் கூடாதென்கிற அதிகாரி நியமமும், இன்ன பலனைத்தான் இது தரும், மற்ற பலனைத் தாராதென்கிற பல நியமமுமாகிற இந்த நியமங்களெல்லாம் ஜ்யோதிஷ்டோமம் முதலிய கருமங்களுக்கு உள்ளனவேயன்றி சரணுகதிக்கு இந்த நியமங்களொன்றுமில்லை; இன்ன விஷயத்திலே செய்யவேணுமென்கிற விஷய நியமமொன்று மாத்திரமே இதற்குள்ளது. அதாவது— பரத்வம் முதலிய ஐந்தினுள்ளும் ஸௌலப்யாதி குணங்கள் பூர்ணமாயிருக்கப்பெற்ற இடமே விஷயமாகை. ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனுன எம்பெருமான் தானே சொல்லப் புகுந்தாலும் சொல்லித் தலைக்கட்ட முடியாதபடி குணங்கள் பூர்த்தியாயிருப்பது அர்ச்சாவதாரத்திலே யாகையாலே ஆழ்வார்கள் சரணுகதியை அர்ச்சாவதாரத்தில் செய்தருளுகிறுர்கள்.

2. திருவாய்மொழி யாயிரத்தில் நூறு பதிகங்களன்றேவுள்ளன. அவற்றுள் ஒரு பதிகத்திற்கும் அமையாத அதிசயமொன்று *உலகமுண்ட பெருவாயா* என்னும் பதிகத் திற்கு அமைந்துள்ளது. அஃதாவது என்னென்னில்; ஒவ்வொரு பாட்டிலும் விடாமல் திருவடியைப்பற்றின சொல் அமைந்திருப்பது நோக்கத்தக்கது. முதற்பாட்டில் *குலதொ லடியே னுனபாதம் கூடுமாறு கூருயே. 2. *ஆருவன்பி னடியேன் உன்னடி சேர் வண்ண மருளாயே. 3 *அண்ணலே! உன்னடி சேர அடியேற்கு ஆவாவென்னுயே. 4. *பூவார் கழல்க ளருவினையேன் பொருந்துமாறு புணராயே. 5. *திணரார் சார்ங்கத் துனபாதம் சேர்வ தடியே னெந்நாளே. 6. *மெய்ந்நா னெய்தி யெந்நா ளுன்னடிக்க ளடியேன் மேவுவதே. 7. *னொடியார் பொழுது முனபாதங் காண நோலாதாற்றேனே. 8. *நோலா தாற்றே னுனபாதங் காண. 9. *அந்தோ! அடியே னுனபாதம் அகலகில்லே னிறையுமே. 10. *புகலொன்றில்லா வடியே னுன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே. 11. *அடிக்கீ ழமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின். ஆக இப்பதிகம் முழுவதும் திருவடி ஸம்பந்தம் இடையருது வரப்பெற்றதென்னு மதிசயம் குறிக்கொள்ளத்தக்கது. இதற்கொரு முக்கியமான கமகமுண்டு. அதாவது, "முமுக்ஷுவுக்கறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று" என்னப்பட்ட திருமந்த்ரம் த்வயம் சரம ச்லோகமாகிற மூன்று ரஹஸ்யங்களில், திருமந்த்ரத்திலும் சரம ச்லோகத்திலும் திருவடியைப்பற்றின ப்ரஸ்தாவமே கிடையாது; அஃதுள்ளது மந்த்ரரத்னமென்கிற த்வயத்தில் மட்டுமேயாம். அந்த த்வயத்தின் அர்த்தாநுஸந்தான பரமான *இவ்வுலகமுண்ட பதிகத்தில் திருவடியின்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ப்ராதாந்யத்தை ஆழ்வார் இங்ஙனே காட்டியருளினது சாலச் சிறக்கும். அன்றியும், மற்ற இரண்டு ரஹஸ்யங்களிலும் பிராட்டியின் ஸம்பந்தமும் ஸ்பஷ்டமாகத் தோற்றிற்றில்லை. அக்குறையும் தீர த்வயத்தில் இரண்டு கண்டங்களினுடையவும் தொடக்கத்தில் ஸ்ரீசப்த விந்யாஸமுள்ளது அதற்குச் சேர *அகலகில்லேன் இறையுமென் றலர்மேல் மங்கை யுறை மார்பா* என்றருளிச் செய்தா ராழ்வார். அதற்கிணங்கத் திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரத்திலும் "அலர்மகளை முன்னிட்டு" என்றருளிச் செய்யலாயிற்று.

3. வடமொழியில் வழங்கும் காலக்ஷேபமென்கிற சொல்லுக்குத் தமிழில் போதுபோக்கென்பது பொருள். ஸ்ரீபாஷ்யம் ஸேவித்தல் பகவத் விஷயம் ஸேவித்தல் என்று சொல்லவேண்டிய ஸ்தானத்தில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் பகவத் விஷய காலக்ஷேபம் என்றே தொன்றுதொட்டுப் பெரியார்கள் வழங்கிவருகிறார்கள். காலக்ஷேப மென்கிற சொல்லுக்கு 'ஸேவிப்பது' என்கிற பொருள் எப்படி கூடுமென்றும், இந்த ப்ரயோகம் எப்படி பொருந்துமென்றும் சில வ்யுத்பந்நர்கள் விமர்சிப்பதுண்டு. ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபமென்றால் ஸ்ரீபாஷ்யத்தைக்கொண்டு போதுபோக்குவது என்றுதான் பொருள். ஸ்ரீராமாயண காலக்ஷேபம் ஸ்ரீவசநபூஷண காலக்ஷேபம் இத்யாதிகளான ஸகல வ்யவஹாரங்களுக்கும் இதுதான் பொருள். இப்படி வ்யவஹரிக்கத் தொடங்கின பெரியார்களின் திருவுள்ளம் யாதெனில், விஷயங்களை க்ரஹிக்கிறோமோ இல்லையோ அது எப்படியாயினுமாகுக; நல்லபடியாகப் போதைப் போக்கினால் போதும்—என்பதேயாம். ஆர்த்தியில் "முன்னவராம் நம் குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம் முழுது நமக்கவை பொழுதுபோக்காகப் பெற்றோம்" என்று மணவாளமாமுனிகள் பணித்தபடியே பெரியோர்களுடைய ஸ்ரீஸூக்திகளால் போதுபோக்குவதென்பது ஜன்மாந்தர ஸஹஸ்ர நற்றவப் பயன்.

4. *காவ்ய சாஸ்த்ர விநோதேந காலோ கச்சதி தீமதாம். அந்யேஷாம் து மநுஷ்யாணாம் நித்ரயா கலஹேந வா* என்கிற ச்லோகமொன்று யாவருமறிந்ததே. ஆங்காங்கு அவரவர்கள் தம் தம் போதுகளை எப்படி போக்கி வருகிறார்களென்று நாற்புறமும் பார்ப்போமாயின், உத்யோகஸ்தர்கள் வியாபாரிகள், பயிர்த் தொழிலாளர்கள், வக்கீல்கள் முதலானோருடைய போதுபோக்குகள் ஒவ்வொருவிதமாக நிகழ்ந்துவருகின்றன. சிலபேர்கள் தேச வ்ருத்தாந்தப் பத்திரிகைகளைப் படித்தல், நாவல்களைப் படித்தல், சூது சதுரங்கமாடுதல்......முதலிய கார்யங்களிலே காலத்தைச் செலவிடுகிறார்கள். இது தவிர, நால்வர் ஐவர் பதின்மராகக் கூடி ஒரு காசுக்கு முதவாத வம்பு வார்த்தைகளை வெகு அட்டஹாஸங்களுடன் பேசிக் கொண்டும், தங்கள் திரளிலே அந்வயிக்கப் பெறாமல் சுவடிகளிலும் பகவத் பாகவத பரிசர்யைகளிலும் போதுபோக்கிவரும் மஹான்களைப்பற்றி ஏதேனும் பழிமொழிகளைப் பறைசாற்றிக்கொண்டும் பத்து மணி காலத்தைப் பத்து நிமிஷமாகக் கழிக்கின்றவர்கள் சிறிய கிராமம் முதல் பெரிய நகரம் வரையில் எங்குமுள்ளார்கள், அன்னவர்கள் பெறுமானந்தம் அளவுகடந்தது. அவர்களுக்கு உலகமெல்லாம் த்ருணம்.

5. ஆழ்வார்களுள் இரண்டு ஆழ்வார்கள் போதுபோக்கைப்பற்றி வெகு இன்பமாகப் பேசியுள்ளார்கள். திருமழிசை யாழ்வாரும் நம்மாழ்வாரும். இவ்விருவருடைய இரண்டு பாசுரங்களை எடுத்துக்காட்டுகிறோம் காண்மின். திருமழிசையாழ்வார் நான்முகன்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருவந்தாதியில் (63)* தரித்திருந்தே னாகவே......தெரித்தெழுதி வாசித்துங்கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது* என்றருளிய பாசுரம் ஒவ்வொருவரும் நிச்சலும் நினைக்கத்தக்கது. போதுபோக்கும் விதத்தை இவரைப்போல் எடுத்துரைத்தவர் மற்று யாருமில்லை. தெரித்தல், எழுதுதல், வாசித்தல், கேட்டல், வணங்குதல், வழிபடல், பூசித்தல் ஆகிய இவற்றினாலேயே தாம் போதைப் போக்கினதாகவும் இவையில்லையாயின் தம்மால் உயிர் தரிக்க முடியாதாகவும் வ்யக்தமாக விளம்பியுள்ளார். நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியின் முடிவில் (பா. 86) *கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான், பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான்—சீர்கலந்த சொல் நினைந்து போக்காரேல் சூழ்வினையி னாழ்துயரை, என்னினைந்து போக்குவரிப்போது* என்றுள்ள பாசுரம் சுவைமிக்க பொருளுடைத்து. எம்பெருமானுடைய திருக்குணங்கள் நிரம்பிய ஸ்ரீஸூக்திகளை யநுஸந்தித்தால் பாவங்களும் துன்பங்களும் தொலையுமென்று சில பெரியார் நினைப்பதும் சொல்லுவதுமுண்டு; ஆழ்வார் என்ன சொல்லுகிறாரென்றால், பாவங்களும் துன்பங்களும் தொலைந்தால் தொலையட்டும் வளர்ந்தாலும் வளரட்டும், அதைப்பற்றி என்ன கவலை? இவ்வுலகில் நாம் வாழ்கிறவரையில் நம்முடைய போது போகவேண்டுமே; போதை எப்படி போக்குவது? பகவத்குணங்கள் மலிந்த ஸ்ரீஸூக்திகளைக் கொண்டுதானே போதைப் போக்கவேண்டும்; வேறு எதைக்கொண்டு போதைப் போக்குவது! ஒவ்வொருவனும் போதைப் போக்கியாகவேண்டுமே, குணாநுபவம் தவிர வேறு எந்தக் காரியஞ்செய்தால் போதுபோகும்? வேறொன்றாலும் போதுபோக்க வரிதன்றோ. சீர்கலந்த சொல்நினைந்து சூழ்வினையி னாழ்துயரைப் போக்காரேல் போக்காதொழிக்; இப்போதை என்னினைந்து போக்குவர்! என்று அருளிச்செய்கிற அழகு என்னே! உலகத்தில் ஒவ்வொருவனும் பகவத் குணாநுபவம் பண்ணியா போதைப் போக்குகிறான்? இல்லையே. சூது சதுரங்கமாடியும் உண்டியே உடையே உகந்தோடியும் மாரனார் வரிவெஞ்சிலைக்கு ஆட்செய்தும் மற்றும் பல பல செய்துமன்றோ அவரவர்கள் போதுபோக்கி வருவது. குணாநுபவத்தால் போதுபோக்குவாராக ஒருவரையும் கண்டிலோமே; "ஸாக்ஷாத்க்ருத் ஸ்வபரவ்ருத்தாந்தர்க்கு" என்று ஆசார்ய ஹ்ருதயத்திலருளிச்செய்கிறபடி உலகியற்கையை ஒன்றுதப்பாம லுணர்ந்தவரான ஆழ்வார் "என்னினைந்து போக்குவ ரிப்போது" என்று குணாநுபவத்தாலன்றிப் போதுபோக்க முடியாதென்று ஏன் சொல்லுகிறார்? என்று கேட்கலாம்; *ஆத்மவத் ஸர்வபூதாநி ய: பச்யதி ஸ பச்யதி* என்றதைக்கண்டு தெளிக.

6. *நலத்தால் மிக்கார்* என்றும் *கலையிலங்குமொழியாளர்* என்றுமுள்ள ஸ்ரீஸூக்திகளுக்கு லக்ஷ்யபூதர்களாய் விளங்கும் மஹநீயர்களைக்குறித்து *அசக்தாஸ் தத்பதம் கந்தும் ததோ நிந்தாம் ப்ரகுர்வதே* என்கிறபடியே நிந்தனை மொழிகளைப் பலவகைகளாலும் பரவச்செய்துகொண்டு அதுவே போதுபோக்காக இருப்பவர்களைக் குறித்து இங்கு நாம் தெரிவிக்கவேண்டியதொன்றுமில்லை ஈச்வரனுடைய ஜகத் ஸ்ருஷ்டியானது மிக விசித்திரமானது. பொய் சொல்வது, களவு செய்வது, வஞ்சனை பண்ணுவது முதலான தீய குணங்களையும், அஹிம்ஸை இந்த்ரிய நிக்ரஹம் க்ஷமை ஸத்யம் முதலிய நற்குணங்களையும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் நாம் பார்த்துவருகிறோம். நற்குணங்களோ தீய குணங்களோ அவரவர்கட்கு இயற்கையாக அமைகின்றனவென்பதே

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பெரும்பான்மையான கொள்கை வேம்புக்குள்ள கசப்பும் மாதுளைக்குள்ள புளிப்பும் கரும்புக்குள்ள தித்திப்பும் முதலியன எப்படி ஒரு நாளும் மாறுவதில்லையோ அப்படியே மனிதர்களுக்கும் ஜன்ம ஸித்தங்களான குணங்கள் (நல்லவையோ தீயவையோ) பேர்க்கவும் பேரா என்றே பெரியார் கூறுவர். இளமையில் பொய் சொல்லியும் களவாடியும் வழக்கம் பெற்றவர்கள் அந்த வழக்கத்தை ஒருநாளும் விடமுடிகிறதில்லை யென்பதையும், இயற்கையாகவே ஸத்யம் முதலிய நல்ல குணங்கள் அமையப் பெற்றவர்கள் ஒருநாளும் அஸத்யவழியில் செல்கின்றிலர் என்பதையும் எந்தவூரிலும் எந்த ஜாதியிலும் எக்காலத்திலும் பார்க்கலாம்.

7. மாதவாரியாக அநுஸந்திப்பதற்குப் பாங்கான நன்மொழி கேளீர். ஐப்பசி மாதத்திலிருந்து புரட்டாசி மாதம்வரை வரிசையாக அநுபவிக்கவேண்டிய விஷயங்கள். ஐப்பசியில் பொய்கை பூதம் பேயாழ்வார்களெனும் முதலாழ்வார்கள் பிள்ளை லோகாசார்யர் மணவாளமாமுனிகள். (2) கார்த்திகையில்-திருமங்கையாழ்வார் திருப்பாணாழ்வார் அருளாளப் பெருமானெம்பெருமானார் நம்பிள்ளை. (3) மார்கழியில்-தொண்டரடிப்பொடியாழ்வார், திருவத்யயநோத்ஸவப் பெருமை. (4) தையில்-திருமழிசையாழ்வார், எம்பார். கூரத்தாழ்வான். (5) மாசியில் குலசேகராழ்வார் திருக்கச்சிநம்பிகள். (6) பங்குனியில்-பெரியபிராட்டியார்; நஞ்சீயர். (7) சித்திரையில்-மதுரகவியாழ்வார், எம்பெருமானார் முதலியாண்டான் அனந்தாழ்வான். (8) வைகாசியில்-நம்மாழ்வார், பட்டர். (9) ஆனியில்-பெரியாழ்வார், ஸ்ரீமந்நாதமுனிகள், வடக்குத் திருவீதிப்பிள்ளை (10) ஆடியில்-ஆண்டாள், ஆளவந்தார். (11) ஆவணியில்-கிதாசார்யன், பெரியவாச்சான்பிள்ளை. (12) புரட்டாசியில். வேதாந்தவாசிரியர்......ஆக இவர்களைப்பற்றி விசேஷமாகச் சிந்தனை செய்வது.

8 திருமாலையில் *வேதநூற் பிராயம் நூறு* என்கிற பாசுரத்தில் அருளிச்செய்யப் பட்ட விஷயம் இவ்விருள் தருமாஞாலத்திற் பிறந்து வருந்தும் அனைவர்க்கும் ஒக்குமாதலால் ஸாம்ஸாரிகரீதியில் கழியும் காலம்போக மிகுந்த காலத்தை ஒரு நொடிப்பொழுதும் பழுதாக்காமே "தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்று கீழே காட்டின திருமழிசைப்பிரான் கட்டளையிலேயே போக்கி வரவேணும். *யந் முஹூர்த்தம் க்ஷணம்வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே, ஸா ஹாநிஸ் தந்மஹச் சித்ரம் ஸா ப்ராந்திஸ் ஸா ச விக்ரியா* என்கிற ச்லோகத்தையும் *ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே, தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ந்ருணாம்* என்கிற ச்லோகத்தையும் பல பெரியார்களிடம் பல கால். கேட்டுத் தரித்து அடிக்கடி அவற்றையே சிந்திப்பதும் பிறர்க்குரைப்பதுமான இயல்புகொண்டிருக்க வேணும். இதில் ஆத்மானந்தமும் அதிகமாகும்.

9. ஆண்டாள் தமது திருத்தகப்பனாராகிய பெரியாழ்வாரையே பல படிகளிலும் பின்சென்றிருக்கின்றாள். சில படிகளை ஈண்டெடுத் துரைப்போம். பெரியாழ்வாருக்கு மங்களாசாஸநத்திலேயே பரிவு பொங்கியிருப்பது ப்ரஸித்தம். இது காரணமாகவே பெரியாழ்வாரென்னும் பெயர் அவர்க்கு நிகழ்ந்ததென்பதும் ப்ரஸித்தம். ஆண்டாளுக்கும் மங்களாசாஸநத்திலேயே ஊற்றமென்பது திருப்பாவையில் வெளிப்படை. "சீரிய சிங்காசனத்திருந்து யாம் வந்த காரிய மாராய்ந்தருள்" என்றவாறே 'வந்த காரியம் யாது?

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சொல்லவேணும்' என்று கண்ணபிரான் கேட்க; *அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி* என்று தொடங்கி மங்களாசாஸநமே தனக்கும் தொழில் என்னுமிடம் காட்டினுள் கோதை. ஸ்ரீவசநபூஷணத்தில் "ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாரும் திருமகளாரும் கோபஜந்மத்தை ஆஸ்தாநம் பண்ணினர்கள்" என்றருளிச்செய்தபடியே இடைத்தனத்தில் முறுசிநின்றமை இவ்விருவர்க்கும் அஸாதாரணம் ஸ்ரீவில்லிபுத்தூரைப் பாடினவர்கள் இவ்விருவரே. "மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்த வண்டு, இன்னிசைக்கும் வில்லிபுத்தூ ரினிதமர்ந்தாய்" என்கிற ஒரு பாசுரமே பெரியாழ்வாருடையது. ஆண்டாளுடையதும் ஒரு பாசுரமே; "மென்னடை யன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூருறைவான்றன்" இத்யாதி. திருமாலிருஞ் சோலையிலே அதிக ஈடுபாடு இவ்விருவர்க்குமாம் அங்குள்ள நூபுர கங்கை யென்னும் சிலம்பாற்றை இவ்விருவருமே பாடினர்; "சிலம்பாறு பாயுந்தென்திருமாலிருஞ் சோலையே" என்றார் பெரியாழ்வார். *சந்தொடு காரகிலுஞ் சுமந்து தடங்கள் பொருது, வந்திழியுஞ் சிலம்பாறுடை மாலிருஞ் சோலை* என்றாள் கோதை ("சிலம்பியலாறுடைய" என்று பிறகு கலியனும் பாடினர்.) இந்த்ரகோபம் என்னும் [வட சொல்லின் திரிபான] சொல்லை இவ்விருவருமே ப்ரயோகத்தில் கொண்டனர்; அதுதன்னையும் திருமாலிருஞ்சோலைப் பதிகங்களிலேயே இருவரும் கொண்டனர். "இந்திரகோபங்கள் எம்பெருமான் கனிவாயொப்பான் சிந்தும் புறவில் தென்திருமாலிருஞ்சோலை" என்றார் பெரியாழ்வார். "சிந்துரச் செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும் இந்திரகோபங்களே யெழுந்தும் பரந்திட்டனவால்" என்றாள் ஆண்டாள். இந்திரகோபமாவது பட்டுப்பூச்சி. அதனை எம்பெருமானுடைய திருவதரத்தில் பழுப்புக்கு உவமையாகவே பெரியாழ்வாரும் ஆண்டாளும் அநுஸந்தித்தார்கள்.

10. இன்னமும் கேளீர். தமிழில், பாணித்தல் என்று அபூர்வமாக ஒரு சொல் உண்டு; காலதாமதம் என்பது அதன் பொருள். இச்சொல்லை இவ்விருவருமே ப்ரயோகத்திற்கொண்டனர். "பாணிக்கவேண்டா நடமின் பண்டன்று பட்டினங்காப்பே" என்பது பெரியாழ்வார் ப்ரயோகம். "பாணியாது என்னை மருந்து செய்து பண்டுபண்டாக்க வுறுதிராகில்" என்பது ஆண்டாள் ப்ரயோகம். ஓட்டரா என்பது ஒரு சொல். (ஓட்டம், தரா) என்கிற இரண்டு சொற்கள் ஒன்று சேர்ந்து ஓட்டரா என மருவிற்று. ஓடிவந்து என்பது இதன்பொருள். [செய்யா வென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்.] இச்சொல்லை இவ்விருவருமே ப்ரயோகத்திற்கொண்டனர். "என்னிடைக்கு ஓட்டரா அச்சோ வச்சோ" என்பது பெரியாழ்வார் திருமொழி. "ஓட்டரா வந்து என் கைப்பற்றி" என்பது நாச்சியார் திருமொழி தமிழில் குப்பாயம் என்பது ஒரு அபூர்வமான சொல். சட்டையென்பது இதன் பொருள். பெரியாழ்வார்திருமொழியில் "குப்பாயமென நின்று காட்சிதருங்கோவர்த்தன மென்னுங் கொற்றக்குடையே" என்று ப்ரயோகம். நாச்சியார் திருமொழியில் "போர்த்த முத்தின் குப்பாயப் புகர்மால் யானைக்கன்றே போல்" என்று ஆண்டாளுடையவும் ப்ரயோகம். நாலாயிரத் திவ்யப் ப்ரபந்தத்தினுள் இவ்விரண்டிடங்கள் தவிர வேறெங்கும் இச்சொல் காணக்கிடைக்காது.

11. ஒருவரே இருவராக வடிவெடுத்துப் பாசுரம் பேசும் திறன் இவ்விருவர் பக்கலிற் காண்பதாம். ஆழ்வார், *என்னுதன் தேவிக்கு* என்னும் திருமொழியில் இரண்டு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கன்னிகைகளின் வடிவைத் தாமொருவர் பூண்டு. கண்ணபிரானைப்பற்றி ஒரு கன்னிகை புகழ்ந்து பேசுவதாகவும் இராமபிரானைப்பற்றி மற்றொரு கன்னிகை புகழ்ந்து பேசுவதாகவும் வைத்துப் பாடினர். *கதிராயிரமிரவி யென்னும் திருமொழியில் 'எம்பெருமானைக் கண்டவர்களுண்டோ?" என்று கேட்கிற வொருவருடைய பாசுரமாக முன்னடிகளும், 'இன்ன இடத்திலே கண்டதுண்டு' என்று விடை கூறுவார் பாசுரமாகப் பின்னடிகளும் அமையவைத்தார். ஆண்டாளும்* பட்டி மேய்ந்தோர் காரேறு* என்கிற திருமொழியில் *இங்கே போதக்கண்டீரே* என்று கேட்பார் பாசுரமாக முன்னடிகளையும்,* விருந்தாவனத்தே கண்டோமே* என்று விடை கூறுவார் பாசுரமாகப் பின்னடிகளையும் அமைத்திருப்பது காண்க. பிறகு திருமங்கையாழ்வாரும் இங்ஙனே தோழிமார் இருவரின் ஸம்வாதமாக *மானமரு மென்னோக்கி பதிகம் பாடினர்.

12. திருவாய்மொழியில் நம்மாழ்வார் அற்புதமாக ஒரு பாசுரம் அருளிச்செய்கிறார்; அதாவது (5—3—5) *கடியன் கொடியன் நெடியமால் உலகங்கொண்ட வடியன், அறிவரு மேனி மாயத்தன்* இத்யாதி. இதன் பொருளின்பத்தைச் சிறிது விவரிப்போம். ஆழ்வார் ஆண்மை தவிர்ந்து பெண்மையடைந்து பேசும் பாசுரமிது. பராங்குசநாயகியென்று இப்போது ஆழ்வார்க்குத் திருநாமம். இப் பெண்பிள்ளைக்கும் தோழிக்கும் பேச்சு நடந்துவருகிறது. தோழியானவள் இப்பெண்மணியை நோக்கி "பேதாய்! நீ பகவான் பகவானென்று எப்போதும் வாய் வெருவி வீணாக வருந்துகிறாயே; இந்த கஷ்டம் உனக்கு ஏதுக்காக? அவன் குணசாலியாயிருந்தால் அவனிடத்தில் நீ எவ்வளவும் ஈடுபடலாம்; குணஹீநனான அவனிடத்தில் நீ வீணாக ஆசைவைத்துத் தவிப்பது வேண்டாமே" என்று கூறினளாக, அதற்குப் பராங்குச நாயகி மறுமொழி கூறுகின்றாளிப்பாட்டினால். தோழீ! எம்பெருமானை நான் மஹா குணசாலியென்கிறேன், நீயோ அவனை குணஹீநனென்கிறாய் நான் சொல்லுகிறபடி யன்றிக்கே நீ சொல்லுகிறபடியே குணஹீநனானாலும் என் நெஞ்சம் அவனையல்லது அறியாது. அவனிடத்தில் நின்றும் என்னை மீட்பத்ற்காகவன்றோ நீ அவனை குணஹீநனென்பது. மிகவும் ஸந்தோஷம். குணஹீநனென்பதுபற்றியே அவனை நான் மேல் விழுந்து விரும்புகிறேனென்று திண்ணமாகக் கொள்ளவேணும் நீ; அவனிடத்தில் குணமில்லையென்பதைச் சொல்லவேண்டுமானாலும் தோழீ! நான் சொல்லவேணுமேயல்லாது நீ சொல்லலாகுமோ? அவனையும் என்னையும் கூட்டிவைத்தது மாத்திரமேயன்றோ உன் காரியம்; அவனோடு உள்கலந்து பரிமாறினவள் நானேயல்லது நீயல்லையே; அவனிடத்திலுள்ளது தோஷமோ குணமோ எதுவானாலும் எனக்குத் தெரிந்தனவு உனக்குத் தெரிய ப்ரஸக்தியில்லையே. ஆகையாலே குணமில்லாமையையும் தோஷமுடைமையையும் என் வாயால் நான் சொல்ல நீ கேளாய் என்று பீடிகை போட்டுக்கொண்டு *கடியன் கொடியனென்று தொடங்கி இரண்டடிகளாலே அவனுடைய குணக்கேட்டைச் சொல்லுகிறாள் பராங்குச நாயகி (ஆழ்வார்). சொல்லுகிற குணக்கேடுகள் எவையென்னில்; கேண்மின்;— [கடியன்] தன் காரியத்தை ஸாதித்துக்கொள்வதிலே கனவேகமுடையவன். அதாவது, தனக்கு விருப்பமுண்டானால் தானேவந்து மேல்விழுந்து விரைந்து கலக்குமவன் என்கை. [கொடியன்] எதிர்த்தலைபடுகிற கஷ்டம் பாராதே கல்நெஞ்சனாய்ப் பிரிந்துபோமவன், [நெடியமால்] மிகவும் பெரியவன் என்பது இச்சொல்லின் பொருள். இதன் கருத்தாவது,

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மேல்விழுந்து கலக்கும்போது பிரியவேணுமென்று நினைப்பன். அப்படி அவன் நினைத்ததை யறிந்து 'என்னையனே! பிரியலாகாது பிரியலாகாது' என்று கால்கட்டி விலக்கப் பார்க்கலாமே, அப்படி விலக்குவதற்குக் கூசி நடுங்கி அஞ்சியிருக்கவேண்டும்படி திடீரென்று பரத்துவம் பாராட்டி நிற்பவனென்கை [உலகங்கொண்ட வடியன்] பிறருடைமையைத் தனக்காக்கிக்கொள்ள நினைத்தால் பின்னை அவர்களுக்கு ஒன்றும் மிச்சப்படாதபடி பண்ணி அவர்களைப் பாதாளத்திலே தள்ளுமவன். [அறிவரு மேனி மாயத்தன்] வடிவைக் கண்டால் ஸர்வஸ்வதானம் பண்ணவிருக்கிறதோ? அன்றி ஸர்வஸ்வமும் கொள்ளை கொள்ளவிருக்கிறதோவென்று தெரிந்துகொள்ள முடியாதபடி ஆச்சரியமான தன்மையையுடையவன். அடியேன் குடியேனென்று சில சொல்லி மயக்கிக் கண்ணிலே மணலைத் தூவியோடிப்போமவன். இப்படிப்பட்ட குணக்கேடு களைக் கோடிக்கணக்காகச் சொல்லவேணுமானாலும் நானன்றோ சொல்லவேணும். எனக்கன்றோ மருமம் தெரியும். தோழீ! இவை உன்னாலும் சொல்லமுடியாது. இதற் கென்றே இட்டுப் பிறந்த சிசுபாலாதிகளாலும் சொல்லமுடியாது இவ்வளவு குணக் கேடுகளையும் நான் அறிந்துவைத்தேயன்றோ இவ்விஷயத்திலீடுபட்டுக் கிடக்கிறது. இவை தோஷங்களேயானாலும் அவனுடைய தோஷங்களாகையாலே அவன் ஸம்பந்தத்தையிட்டு இவை நமக்கு உபாதேயங்களேயென்று என்னெஞ்சு கொள்ளு கின்றது; (அல்லது) கீழ்ச்சொன்ன விசேஷண பூதங்களான குணக்கேடுகளில் நோக்கு இல்லாமே விசேஷ்ய பூதனான அவனை மாத்திரமே என்னெஞ்சு பற்றியிருக்கின்றது. மாயாவாதிகள் "நிர்விசேஷ சிந்மாத்ரம் ப்ரஹ்ம" என்று விசேஷண ஸம்பந்த கந்தமுமற்ற விசேஷ்ய அம்சத்தை மாத்திரமே அங்கீகரிக்கிறப்போலே குணமோ குணக்கேடோ ஆகிய விசேஷணாம்சத்தில் கண் செலுத்தாமல் வெறும் விசேஷ்யமான அவனளவில் மாத்திரமே என்னெஞ்சு ஊன்றியிருக்கின்றது என்பதாக [ஆகிலுங் கொடியவென்னெஞ்சம் அவனென்றே கிடக்கு மெல்லே] என்கிற மூன்றாமடி அமைந்தது

13. இவ்வுலகில் பிறக்கின்றவர்கள் யாவரும் தோஷமே நிரம்பியவர்கள் என்றாவது குணமே நிரம்பியவர்கள் என்றாவது யாரும் சொல்லமுடியாது. உயர்ந்த பதவியில் இருக்கின்ற மஹான்கள் முதற்கொண்டு மிகவும் தாழ்ந்திருப்பவர்கள் வரையில் யாரை யெடுத்துக்கொண்டாலும் ஒவ்வொருவரிடத்திலும் குணங்களும் தோஷங்களும் கலந்திருக்குமே யல்லது பரிபூர்ண குணசாலியாகவும் பரிபூர்ண துஷ்டனாகவும் ஒரு மனிதனையும் காட்டமுடியாது. எவரும் அயலாரை வஞ்சித்து விடலாமானாலும் தம்முடைய ஆத்துமாவைத்தாம் வஞ்சித்து விடமுடியா தாதலால் தம் தம்மிடத்திலுள்ள குணதோஷங்களை உள்ளபடி அவரவர்கள் கட்டாயம் அறிந்தேயிருப்பர்கள் அப்படி யறிந்திருந்தும், உள்ள குணங்களை மிகவும் அதிகப்படுத்திக் காட்டுவதற்கும், உள்ள தோஷங்களை அடியோடு மறைத்துக் கொள்வதற்குமே ஒவ்வொருவரும் முயற்சி செய்வது வழக்கம் அதில் ஸாமான்ய ஜனங்கள் ஏமாந்து போய்விடுவதும் நிபுணர்கள் உண்மையை அறிந்துகொள்வதும் இயல்பு.

14. பொதுவில் ஒவ்வொருவருடைய நோக்கமும் எப்படிப்பட்டதென்றால் நம்மிடத்தில் எல்லாருக்கும் நல்ல மதிப்பு உண்டாகவேணும்; நம்மை நல்ல குணசாலி யென்றே எல்லாரும் கொள்ளவேண்டும்; நம்மிடத்தில் தீமையிருப்பதாக யாரும் கருதக்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கூடாது' என்றே ஆசைகொண்டு அதற்கு ஏற்றாப்போல் நடந்துகொள்வதிலேயே பெரும்பாலும் ஜனங்களின் நோக்கம் காண்கிறது ஞானம், செல்வம், அழகு முதலானவை மிகச்சிறிதளவு இருந்தாலும் அவற்றை மிகவும் அதிகமாகவே காட்டிக் கொள்ள விரும்புவாரும் உண்டு. அவை அதிகமாகவே யிருந்தும் அவற்றை டம்பமாகக் காட்டிக்கொள்ள விரும்பாமல் வெகு அடக்கத்தோடு இருப்பவர்களும் உண்டு. சில பேர்கள் தங்களுடைய நிலைமையை நன்றாகத் தெரிந்துகொண்டு 'நாம் எப்படி குற்றங்களுக்குக் கொள்கலமாக இருக்கிறோமோ இப்படித்தான் உலகில் பலரும் இருக்க நேரிடும்; இவ்வுலகுக்கு இது ஆச்சரியமன்று; ஆதலால் பிறருடைய குற்றங்களைப் பற்றி நாம் கவனிப்பது வேண்டா' என்று கொண்டு பிறரது குற்றங்களில் சிறிதும் புத்தியைச் செலுத்தாமல் தங்கள் காரியத்தோடே நிற்பர்கள் இப்படிப்பட்ட அதிகாரிகள் அதிகமாகத் தேறமாட்டார்கள். நூற்றில் ஒருவர் தேறினால் விசேஷம். 99 பேர்களின் இயல்வு எப்படிப்பட்டதென்றால் தம்முடைய நிலைமையைத் தாம் அடியோடு மறந்து எப்போதும் பிறரைப் பற்றிய பழிப்புரையே போது போக்காக இருப்பதாம். அன்னவர்கள் வாய்கொண்டு பேசத் தொடங்கினாலும் கை கொண்டு எழுதத் தொடங்கினாலும், இன்னாரைப்பற்றி இன்னவிதமாகத்தான் பேசுவர்கள் என்கிற வரம்பு சிறிதும் இராது. ஒன்றுமறியாத மூடர்களை உயரத்தூக்கி வைத்திடவும் புகழ்பெற்ற பெரியோர்களைப் பாதாளத்திலே தள்ளிவிடவும் வல்லவர்களே.

15. சில நபர்களிடத்தில் தூஷிக்கவேண்டிய காரணம் பூர்த்தியாக இருந்தாலுங் கூட தூஷிக்கும் வழியைக் கனவிலுமறியாமல் பூஷிப்பதே செய்வார் நல்லோர். பூஷிக்க வேண்டிய காரணம் பூர்த்தியாக இருந்தாலுங்கூட தூஷிப்பதையே தொழிலாகக் கொள்வர் தீயோர். எங்கும் தூஷிப்பவர்கள், பலபல மஹான்களால் கொண்டாடப் படுகின்றவர்களைத்தான் தூஷிப்பர்கள். யோக்யதை யில்லாதவர்களை தூஷிப்பதனால் என்ன லாபம்? என்ன த்ருப்தி? அதை யார் கவனிப்பார்கள்? அது பயனற்ற பணியாகுமே. நிறையப்பழங்கள் பழுத்துத் தொங்கப்பெற்ற மரங்களின் மீது கல்லடி தடியடி விழுமேயல்லது மொட்டை மரத்தையும் மலட்டு மரத்தையும் அடிப்பாரார்? அதுபோல் ஞானானுட்டானங்கள் நிரம்பியும், பலவகைகளில் புகழ்பெற்றும், பலரால் வணங்கப் பட்டும் விளங்குகின்ற மஹான்கள்பேரில்தான் தூஷணைகள் ஏற்படுமேயல்லது, 'யாரோ வழிப்போக்கன்' என்னும்படியான ஸாமான்ய ஜனத்தின்மீது பைத்தியக்காரன்கூட தூஷணைகள் செய்ய மனங்கொள்ளமாட்டான். ஆகவே, எந்த நபரின்மீது விசேஷ தூஷணைகள் ஏற்படுகின்றனவோ அதுவே காரணமாக அந்த நபர் மிக்க பெருமை வாய்ந்தவர் என்பது உறுதியாகும். உண்மையில் அவர் பெருமை வாய்ந்தவராக இல்லா விடினும், தூஷணைகள் ஏற்படுவது காரணமாகவே அவர்க்குச் சிறந்த பெருமை அவசியம் ஒப்புக்கொள்ள வேண்டியதே. அமுதனார் அருளிய இராமாநுச நூற்றந்தாதியில் "**பழிக்கில் புகழ்**" என்றது காண்க. இப்பாசுரத்தை விவரித்தபடியே யிது.

16. மஹான்களைப் பிறர் தூஷிப்பதானது உண்மையில் பூஷிப்பதாகவே முடிவு பெறும். அவர்களுடைய கீர்த்தி எங்கும் நன்றாகப் பரவுவதற்கு தூஷணைகளே பெரிய கருவியாகும். பூஷிப்பது ஒரு மூலையில் அடங்கிப்போகும். தூஷிப்பதுதான் உலக மெல்லாம் பரவும். பாகவத தூஷணையாக ஒரு புத்தகம் வெளிவந்தால் அது எத்தனை பக்கமாயிருந்தாலும் எவ்வளவு வேலையிருந்தாலும் விட்டிட்டு வெகுரஸமாக வாசிக்க ருசியுண்டாகும், மெய்ஞ்ஞான விளக்கம்' என்று ஒன்று வெளிவந்தால் அது நாலே பக்கமாயிருந்தாலும் வாசிக்கத் தொடங்கும்போதே கண்ணுறக்கமதாகும். உலகப் போக்கு இது. ... ...

பதினாறு நன்மொழிகள் முற்றுப்பெற்றன.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ காஞ்சீபுரியும் விஷ்ணுவாலயங்களும்

[காஞ்சீபுரம் மஹா வித்வான் ஸ்ரீ வே. P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள்]

"காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனியருளாளர் கச்சிக் கொவ்வா" என்றும், "முத்தி தரும் நகரேழில் முக்கியமாங் கச்சி" என்றும் ஆன்றோரால் புகழ்பெற்ற காஞ்சி மஹாபுரியில் விளங்கும் விஷ்ணுவாலயங்களைப் பற்றியும், அவற்றிற்கு அமைந்துள்ள ஆழ்வார் பாடல்கள் பற்றியும் ஸாரமாக ஈண்டெழுதப்படுகிறது. சின்ன காஞ்சீபுரியிலும் பெரிய காஞ்சீபுரியிலும் சேர்ந்து பதினெட்டு விஷ்ணு க்ஷேத்திரங்கள் விளங்குவதாகப் பிரசித்தியுள்ளது. ஆனால் ஆழ்வார்களின் பாடல் பெற்ற தலங்கள் பதினான்கேயென்றும். மற்றைய நான்கும் புராண ஸ்தலங்களே யென்றும் பெரியார் கூறுவார். அந்த நான்கு தலங்களைப் பற்றி முடிவில் தெரிவிக்கப்படும்.

ஆழ்வார் பாடல் பெற்ற பதினான்கு தலங்கள்:

1. திருக்கச்சியத்திகிரி.
2. திருவெஃகா.
3. அட்டபுயகரம்.
4. வேளுக்கை,
5. திருத்தண்கா.
6. ஊரகம்.
7. நீரகம்.
8. காரகம்.
9. கார்வானம்.
10. பரமேச்சுரவிண்ணகரம்.
11. பவளவண்ணம்.
12. நிலாத்திங்கள் துண்டம்.
13. கள்வனூர்.
14. பாடகம்.

இனி, இப்பதினான்கு தலங்களுக்கும் பாடல் விசேஷங்களும் மற்றுஞ் சில முக்கியமான விவரங்களும் தெரிவிப்போம்.

I. திருக்கச்சியத்திகிரி

தேவப் பெருமாள் ஸன்னிதி யென்றும் ஸ்ரீ வரதராஜஸ்வாமி கோவிலென்றும் வழங்கப் பெறுவது இத்தலமேயாகும். அருளாளன், பேரருளாளன், வரதன், வரதராஜர், தேவராஜர், பெருந்தேவி மணவாளன் என்றிங்ஙனே பல திருநாமங்கள் கொண்டவர் இத்தலத் தெம்பெருமான். நான்முகக் கடவுள் திருமாலை ஸாக்ஷாத்கரிக்க ஆவல் கொண்டு புஷ்கர க்ஷேத்திரத்தில் தவம்புரிய, அங்கே தீர்த்த ரூபியாகக் காட்சி தர, அதில் த்ருப்தி பெறுமல் மீண்டும் நைமிசாரணியத்தில் தவம் புரிய, அங்கே அரண்ய ரூபியாகக் காட்சி தர, சங்கும் சக்கரமும் சிரித்த முகமுமான நிஜ ரூபத்தையே காண விரும்பி, 'ஸத்ய விரத க்ஷேத்திரத்திலே அயமேத வேள்வி புரிந்து காணப் பெறுக' என்னுமாகாயவாணியைப் பெற்று அங்ஙனமே அசுவமேதயாகம் நிகழ்த்திப் புண்ணிய கோடி விமானத்தோடு ஓமத்தீயினின்றும் தேவப் பெருமாள் ஆவிர்ப்பவித்துக் கிதயுகம் முதலாகக் காட்சி தந்தருள்வதாகப் புராண வரலாறு. பூதத்தாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடினதலம்.

பூதத்தார் தமது இரண்டாந் திருவந்தாதியில் (95, பா.) *என்னெஞ்சமேயானென் சென்னியான்-- உலகேத்து மாழியான் அத்தியூரான்* என்றும், திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் (2-9-3.,* உரந்தரு மெல்லணைப் பள்ளிகொண்டான்-- வரந்தரு மாமணி வண்ணனிடம் மணிமாடங்கள் சூழ்ந்தழகாயகச்சி* என்னும் பாசுரத்தினுற் பாடியருளினர்.

வடமொழியில் காஞ்சீ என்று பெயர்; அது தென்மொழியில் கச்சி யெனத் திரிந்தது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"க இதி ப்ரஹ்மணோ நாமதேந தத்ராஞ்சிதோ
ஹரி:, தஸ்மாத் காஞ்சீதி விக்க்யாதா புரீ புண்ய
விவர்த்திநீ" என்கிற ஸ்தலபுராண சுலோகத்
தின்படி, பிரமன் ஆராதித்தவிடம் என்பதே
வடமொழிப் பெயர்க்கும் தென்மொழிப் பெயர்க்
கும் பொருளாதலால், ஆழ்வார் பாசுரங்களில்,
கச்சியென வருமிடங்க ளெல்லாம் தேவப் பெரு
மாளெழுந்தருளியிருக்கும் திருப்பதிக்கே மங்
களா சாஸனமென்று கொள்ளக் குறையில்லை.
ஆசாரியர்களில் ஆளவந்தார் ஒரு முக்தக
ச்லோகமும், திருக்கச்சி நம்பிகள் எட்டு சுலோ
கமும், கூரத்தாழ்வான் நூறு சுலோகமும்,
வேதாந்த தேசிகர் ஐம்பது சுலோகமும்,
மணவாள மாமுனிகள் பத்துச் சுலோகமும்
அருளிச்செய்து இப்பெருமானை வாழ்த்தினர்.

2. திருவெஃகா
(ஸ்ரீ யதோக்தகாரிஸன்னிதி)

இத்தலத் தெம்பெருமானுக்கு வேகா ஸேது
வென்று வடமொழித் திருநாமம். வேகவதிக்கு
அணையாய்க் கிடந்தவர் என்பது அதன்
பொருள். வேகாஸேது வென்னும் பதத்தின்
ஏகதேசமாகிய வேகா என்பது வெஃகா என்ரு
யிற்று. 'வெஃகணை' என்கிற திருப்பெயரு
முள்ளது முந்தின தலத்தெம்பெருமானாகிய
தேவப் பெருமானை, ஸாக்ஷாத்கரிக்க வேண்
டின பிரமன் அசுவமேத யாகம் தொடங்கிய
போழ்து, ஒரு காரண விசேடத்தினால் தன்
மனைவியான ஸரஸ்வதியைத் துணைகொள்ளா
மலே வேள்வி புரிய நேர்ந்தது. அப்போது
அசுரர்களின் தூண்டுதலால் ஸரஸ்வதியான
வள் வேகவதியென்னும் நதி வடிவமெடுத்துப்
பெருகி வந்து வேள்விக்கு இடையூறு விளைக்கத்
தேடினவளவிலே, பிரமனுடையவும் மற்றும்
அமரர் முனிவர் முதலானோருடையவும் வேண்டு
கோளுக்கிரங்கி எம்பெருமான் பேரருள்
கொண்டு "சதுர்முகனார் வேள்விதனைச் சதிர்
கெடுக்கச் செறிந்தோடுங் கதியுடைய வேக
வதிக்கு அணையாக வந்துதித்தோய்!" என்
றும், "அணியான வேகவதி அலையோடு
கொண்டோடி யாலிக்க அணையாக் கிடந்த
பெருமாள்!" என்றும் போற்றுமாறு குறுக்கே
சயனிக்க, ஸரஸ்வதி நாணமுற்று அந்தர்
வாஹினியாய்ச் சென்றிட்டாளென்று புராணங்
கூறும். இப் பெருமானுக்கு வடமொழியில்
யதோக்தகாரி யென்றும், தென் மொழியில்
சொன்ன வண்ணஞ் செய்த பெருமாளென்றும்
திருநாமம் வழங்கும். இத்தலத்தின் வடபுறத்தி
லுள்ள திருப்பொய்கையிலே, தாமரை மலரில்,
பொய்கையாழ்வார் திருவவதாரம் செய்
தருளினர். திருமழிசையாழ்வார் இத் திருப்
பதியில் சில பலவாண்டுகள் எழுந்தருளி
யிருந்து இப்பெருமாளுடைய பரம ஸௌலப்ய
குணத்தைக் கணி கண்ணனென்னும் சிஷ்ய
னோடுங் கூட அனுபவித்த வரலாறு குரு
பரம்பராப்ரபாவாதிகளில் மிகப் பிரசித்தம்.
ஸ்ரீமந் நிகமாந்த மஹாகுரு இத்தலத்தெம்
பெருமானைப் பத்து சுலோகங்கள் கொண்ட
வேகா ஸேது ஸ்துதியினால் தோத்தரித்தனர்.
மணவாள மாமுனிகள் . ஆச்ரம ஸ்வீகாரம்
செய்தருள்வதற்கு முன்பு [க்ருஹஸ்தாச்ர
மத்தில்] ஒரு ஸம்வத்ஸரம் இத்தலத்தி
லெழுந்தருளியிருந்து ஸ்ரீ பாஷ்யப் பிரவசனம்
செய்தருளினர். அதனால் இத் திருப்பதியில்
மட்டும் மாமுனிகளின் திருக்கோலம் ஞானமுத்
திரையோடு திகழும். பொய்கையார், பேயார்,
திருமழிசைப்பிரான், நம்மாழ்வார், திருமங்கை
யாழ்வார் ஆகிய ஐவர் பாடல் பெற்ற தலம் இது.

1. பொய்கையார் முதல் திருவந்தாதி 77. *வேங்
கடமும் விண்ணகரும் வெஃகாவும்.*

2. பேயார் 26.* சிறந்த வென் சிந்தையும்...
வெஃகாவும்.* 34.* அன்றிவ்வுலகம்-கிடந்தானை.*
62.* விண்ணகரம் வெஃகா* 64.* இசைந்தவரவ
மும்...கச்சி வெஃகாவில் * 76.* பொருப்பிடையே
...விருப்புடைய வெஃகாவே சேர்ந்தானை*

3. திருமழிசைப் பிரான், திருச்சந்த விருத்தத்
தில். 63* நன்றிருந்து...வெஃகணைக் கிடந்தது.
64* நின்றதெந்தை...வெஃகணைக் கிடந்து.* நான்
முகன் திருவந்தாதி. 36.* நாகத்தணைக் குடந்தை
வெஃகா*-நம்மாழ்வார் திருவிருத்தம் 26.* நானிலம்
வாய்க்கொண்டு......கண்ணன் வெஃகாவுது.* திரு
மங்கையாழ்வார், பெரிய திருமொழி 2-6-5.* பிச்சச்
சிறுபீலி......கச்சிக் கிடந்தவன்.* ஷை 10-1-7.*
கூந்தலார் மகிழ்...பாந்தள் பாழியில் பள்ளி விரும்
பிய வேந்தனைச் சென்று காண்டும் வெஃகாவுளே.*
சிறிய திருமடல்.* பேராமருதிறுத்தான் வெள்ள
றையே வெஃகாவே* பெரிய திருமடல்.* வெஃகாவி
லுன்னிய யோகத் துறக்கத்தை* திருநெடுந்தாண்
டகம் 8.* நீரகத்தாய்...வெஃகாவுள்ளாய்.* ஷை 9.
வங்கத்தால்...மதிட்கச்சியூராய் ஷை 13*. கல்
லெடுத்து...வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே. ஷை
14.* முளைக்கதிரை...வெஃகாவில் திருமாலை*.

3. அட்டபுயகரம் (அஷ்டபுஜம்)

எட்டுத் திருக்கரங்களிலும் எட்டு ஆயுதங்
களை ஏந்தியுள்ளதனால் அஷ்டபுஜனென்று

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருநாமம். அவனெழுந்தருளியிருக்குமிடம் அட்டபுயவகரம்; அஃது அட்டபுயகரமென மருவிற்று. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் அட்டபுயங்க மென்ருர் பிள்ளைப் பெருமாளையங்கார். பேயாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும் பாடின தலம்.

பேயாழ்வார் திருவந்தாதியில் 99. * தொட்ட படையெட்டும் தோலாத வென்றியான் அட்ட புயகரத்தான். திருமங்கையாழ்வார், பெரிய திரு மொழியில் (2—8) * திரிபுரமூன்றெரித்தானு மென்று தொடங்ய ஒரு பதிகம் பாடினர். இதில் மூன்ரும் பாசுரத்தில் * செம்பொனிலங்கு வலங்கை வாளி திண்சிலை தண்டொடு சங்கமொள்வாள், உம் பரிருசுடராழியோடு கேடக மொண் மலர் பற்றி * என்று எட்டுத் திருக்கைகளிலும் தரிக்கும் எட்டு ஆயுதங்களையும் கூறினராழ்வார்.

1. வாளி. 2. சிலை. 3. தண்டு. 4. சங்கம். 5. வாள். 6. ஆழி. 7. கேடகம். 8. மலர் என்பன. மலர் ஆயுதமன்ருகிலும் அழகுக் குடலாக ஏந்தின தாம். வேதாந்த தேசிகர் அஷ்டபுஜாஷ்டகம் பாடியுள்ளார்.

4. வேளுக்கை (காமாஸிகா)

அஷ்டபுஜஸன்னிதிக்கும் தீபப்ரகாச ஸன்னிதிக்கு மிடையில் விளங்குமித்தலம். சிங்கப் பெருமாள் கோயிலென்றும் ஆளழகிய சிங்கர் ஸன்னிதியென்றும் இத்தலத்திற்குப் பிரஸித்தி. காமாஸிகா என்று ஸ்தல புராண ஸித்தமான திருநாமம். வேளுக்கை யென்று ஆழ்வார் பாடல். 'வேள் இருக்கை' என்னு மிரண்டு சொற்கள் கூடி வேளுக்கையென மருவிற்று. வேள் - காமம்; அதாவது இச்சை; அதனுலெழுந்தருளி யிருக்குமிடம் வேளி ருக்கை. காமாஸிகா என்னும் வடமொழிப் பெயர்க்கும் இதுவே பொருள். காமேந ஆஸிகா-காமாஸிகா. இத்தலத்தைப் பற்றி ஸ்ரீ நிகமாந்த மஹாகுரு பணித்த காமாஸிகாஷ்டகத்தில் "காமாத் அதிவஸந் ஜீயாத் கச்சி தத்புத கேஸரீ" என்னும் சுலோகத்திறல் இப்பொருள் விளங்கக் காண்க. பேயாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடின தலமிது.

பெயார் திருவாந்தாதியில் 26 * சிறந்த வென் சிந்தையும்....வேளுக்கைப் பாடியுமே * திருமங்கை யாழ்வார் பெரிய திருமடலில் * மன்னுமதிட்கச்சி வேளுக்கையாளரியை. *

5. திருத்தண்கா விளக்கொளி கோயில்

தீபப்பிரகாசர் ஸன்னிதியென்றும் விளக் கொளி கோயிலென்றும் வழங்கப் பெறும் இத்தலம். ஆழ்வார் பாடலில் திருத்தண்கா என்றுள்ளது. குளிர்ந்த சோலையென்பது இதன் பொருள். இத்தலத்திற்கு வேதாந்த வாசிரியர் இட்டருளின சரணுகதி தீபிகை யென்னும் துதியில் தண்கா என்னுந் திரு நாமமே ஹிமோபவன மென்றும் சிசிரோப வன மென்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் திருவவதாரம் இத்திருப்பதியின் பரிஸரத்திலேயாயிற்று. இஃதே இத்தலத் திற்குத் தன்னேற்றம். திருமங்கையாழ்வா ரொருவருடைய பாடலேயுள்ளது.

பெரிய திருமொழியில் 10-1-2 *பொன்னை மாமணியை...யாம் சென்று காண்டும் தண்கா விலே* திருநெடுந்தாண்டகம் 14. *முளைக் கதிரை...விளக்கொளியை மரகதத்தைத் திருத் தண்காவில்*

6. ஊரகம். 7. நீரகம். 8 காரகம். 9. கார்வானம்.

இந்நான்கு திவ்யதேசங்களும் உலகளந்த பெருமாள் ஸன்னிதியென்கிற ஒரு தலத்தி லேயே காட்சி தருவன. உரகம் என்னும் வட சொல் ஊரகமென நீண்டது. உரக மென்று ஆதிசேஷனுக்கு வடமொழிப் பெயர். ஆதிசேஷ ரூபியான எம்பெருமானும் இங்கே மஹா வரப்ரஸாதியாக ஸேவை ஸாதித்தருள் வதால் ஊரகத்தான் ஸன்னிதியென்றே இத் தலம் வழங்கப் பெறும். இப்பெருமாள் மட்டும் மூவர் பாடல் பெற்றவர்; பேயார், திருமழிசைப் பிரான், திருமங்கையாழ்வார்.

பேயார் திருவந்தாதி 64.* இசைந்த வரமும்...கச்சி நின்றது* திருமழிசைப்பிரான். திருச்சந்த விருத்தம் 63. *நன்றிருந்து யோக நீதி...ஊரகத்து நின்று. *திருமங்கையாழ்வார். பெரிய திருமொழி 1-5-4. *ஊரான். *திரு நெடுந்தாண்டகம் 8. *நிறைந்த கச்சியூரகத் தாய். *13. *கல்லெடுத்து...கச்சியூரகத்தாய். *சிறிய திருமடல். *மதிள்கச்சியூரகமே. *பெரிய திருமடல். *ஊரகத்துளன்னவனை.

நீரகம், காரகம், கார்வானம் இம்மூன்று தலங்களையும் திருமங்கையாழ்வார் திருநெடுந் தாண்டகத்தில் (8.) ஒரே பாசுரத்தில் பாடினர்; * நீரகத்தாய்...உலக மேத்துங் காரகத்தாய்! கார்வானத்துள்ளாய். *

10. பரமேச்சுரவிண்ணகரம்

வைகுண்ட பெருமாள் ஸன்னிதியென்று வழங்கப் பெறுமித்தலம். திருமங்கையாழ்வார்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஒருவரே பதிகம் பாடினர். பெரிய திரு மொழியில் 2—9 * சொல்லுவன் சொற்பொருள். * காஞ்சி புரியில் பதிகம் பாடப் பெற்ற தலம் இரண்டே; இத்தலமும் திருவட்ட புயகரமும்.

11. பவளவண்ணம். 12. நிலாத்திங்கள் துண்டம். 13. கள்வனூர்

இம்மூன்று தலங்களையும் திருமங்கை யாழ்வாரொருவரே திருநெடுந்தாண்டகத்தில் பாடினர். அதில் 9. * பவளவண்ணா! * 8 நீர கத்தாய்...நிலாத்திங்கள் துண்டத்தாய்-கள்வா! * நிலாத்திங்கள் துண்டப்பெருமாள் ஏகாம்பர நாதர் ஸன்னிதியிலும், கள்வப்பெருமாள் காமாக்ஷியம்மன் ஸன்னிதியிலும் காட்சி தருகின்றனர்.

“ உள்ளுவாருள்ளத்தாய் ” என்கிற திரு மங்கையாழ்வார் பாசுரத்தைக் கொண்டு உள்ளுவாருள்ளமென்கிற திருத்தலமு முண்டென்பர், சிலர். ஆனால் பிள்ளைப் பெருமாளையங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந் தாதியில் இத்தலத்திற்குப் பாசுரம் பாடவில்லை யாதலால் கைகூப்பி நிற்கிறோம்.

14. திருப்பாடகம்

பாண்டவதூதர் ஸன்னிதி. வீற்றிருந்த திருக்கோலத்தில் இவ்வளவு திருவளர்த்தியான திருமூர்த்தி எங்குமில்லை. பாடு—அகம், பாட கம்; பாடு என்பது பெருமை. பெருமை தோற்ற எழுந்தருளியிருக்கும் தலம் என்று பொருள். ஸ்ரீக்ருஷ்ணபகவான் பாண்டவ தூதனாய்த் துரியோதன ஸபைக்கு எழுந்தரு ளின காலத்தில் அவன் செய்த சூழ்ச்சிக்கு விசுவருபமெடுத்த வரலாறு மஹாபாரதப் பிரசித்தம். திருமங்கையாழ்வார் அவ்வரலாற் றினைப் பெரிய திருமொழியில் (9-1-8) “ அரவு நீள் கொடியோன் அவையுள், சனத்தை அஞ்சிடாதேயிட, அதற்குப் பெரிய மாமேனி அண்ட மூடுருவப் பெருந்திசையடங்கிட நிமிர்ந்தோன் ” என்கிற பாசுரத்தினுற் பாடியுள்ளார். இத்தலம் நால்வர் பாடல் பெற்றது. பூதத்தார், பேயார் திருமழிசைப் பிரான், திருமங்கையார்.

பூதத்தார். திருவந்தாதி. 64 * உற்று வணங்கி ... பூம் பாடகத்துளிருந்தானை. * பேயார் திருவந்தாதி. 30. * சேர்ந்த திருமால்...வாய்ந்த மறை பாடகம். * 64. * இசைந்த வரவமும் ... கச்சியிருந்து. * திருமழிசைப் பிரான். திருச்சந்த விருத்தம் 63. * நன்றிருந்து யோகநீதி...குன்றிருந்த மாடநீடு பாடகத்தும். * 64. நின்ற தெந்தை யூரகத்து இருந்ததெந்தை பாடகத்து. திருமங்கையாழ்வார். பெரிய திருமொழி. 6.10.4. * கல்லார் மதிள்சூழ் கச்சி நகருள் நச்சிப் பாடகத்துள். * திருநெடுந்தாண்டகம். 15. * கல்லுயர்ந்த...கச்சிமேய களிறு. *

ஆக இப்பதினுன்கு திவ்யதேசங்களும் ஆழ்வார் பாடல் பெற்றவை. முகுந்தப் பெருமாள், நரசிங்கப் பெருமாள், உள்ளு வாருள்ளத்தான், பச்சைவண்ணர் இந்நால் வரின் தலங்கள் புராணப்ரசம்ஸை பெற்றவை.

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர்
திருவடிகளே சரணம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தானமும்-தாதாசார்ய குடும்பமும்

29-11-64 ஹிண்டுவில் வெளிவந்த ஸ்ரீ தாத தேசிகன் விஷயமான வியாஸத்தின் ஆராய்ச்சி

ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரியர்

தாததேசிகனைப்பற்றிய வரலாறுகளின் பொய்ம்மை

1. ஸ்ரீ தாத தேசிகன் என்பவர் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ பிரமுகர் என்பது உண்மை. இவர் பலபல கோவில்களைக் கட்டி வைத்தாரென்பது ஆதாரமற்ற வார்த்தை. இவர் கும்பகோணத்தில் தோன்றினரென்பது புதிதான வார்த்தை. ஏடூரிம்மடி யென்று பிரசித்தமாக வழங்கும் உபாதத்தினல் ஏடூர் என்கிற விடத்தில் அவதரித்தாரென்பது உண்மை. அந்த வூர் இன்னமும் விளங்குகின்றது. தாத தேசிகனுடைய சிஷ்யரொருவர் எழுதிய ப்ரபந்நாம்ருத மென்கிற பெரிய நூலில் தாததேசிகனுடைய வைபவமும் முடிவாக எழுதப்பட்டுள்ளது. அதில் ஏடூரில் அவர் அவதரித்தாரென்றதே யுள்ளது. சடமர்ஷணரென்கிற முனிவரே சடகோபராக அவதரித்தாரென்கிற பேச்சு இதுவரையில் ஒரு ஆசாரியராலும் ஒரு புத்தகத்திலும் கூறப்படவில்லை. இது ஸம்பாவிதமுமல்ல. திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருமலை நம்பியின் குமாரரென்பது விவாதாஸ்பதமான பேச்சு. திருமலை நம்பிக்குத் தோழப்பரென்றும் திருநாமம். இப் பெயரே இன்றைக்கும் வழங்கிவருவது. இவர்க்கு இரு குமார்த்திகள் மட்டுமே யிருந்ததாக வேதாந்த தேசிகர் குருபரம்பராஸார மென்கிற நூலில் நிஸ்ஸந்தேஹமாக எழுதியுள்ளார். ஸ்ரீராமாநுஜர் பிள்ளானுக்கு உத்தரவிட்டதாவது திருவாய்மொழிக்கு ஒரு சிறிய வியாக்கியானம் இயற்றும்படிக்கே யொழிய ஸ்ரீ பாஷ்யத்தைப்பற்றின கட்டளையைக் கூரத்தாழ்வான் பரம்பரையிலேயே செய்தார். தாத தேசிகர் பேச்சில் பிள்ளான் ஸம்பந்தம் வருவதற்கு ப்ரமேயமே கிடையாது. திருமலை ஸ்ரீநிவாஸாசாரியரென்பவர் பிள்ளானுடைய வம்சத்தில் தோன்றியவர் என்பதும், அவர் வேதாந்த தேசிகருக்கு அந்தரங்கரா யிருந்தாரென்பதும் புதிய கற்பனை. தேசிகர் சரித்திரத்தில் திருமலை ஸ்ரீநிவாஸாசாரிய ரென்கிற நபரை யாரும் எழுதியிருக்கவில்லை. இந்த திருமலை ஸ்ரீநிவாஸாசாரியரை வேதாந்த தேசிகரே ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தானத்திற்கு ஸ்ரீ கார்யகர்த்தாவாக நியமித்தாரென்பது மிகவும் கற்பனை. 1842 ஆம் வருஷத்தில்தான் தாததேசிகனுக்கு கலெக்டர் மூலமாக இந்த தேவஸ்தான ஸ்ரீகார்யம் கிடைத்தது. அதுவும் இந்த பரம்பரையினர் செய்த அநீதிகளால் ஹைகோர்ட்டாரால் பறிமுதல் செய்யப்பட்டதென்கிற விஷயம் மேலே ரிகார்டுகளுடன் விவரிக்கப்படும். தேவப்பெருமாள் தேவஸ்தானத்தில் மண்டபங்கள் முதலிய அதிக கைங்கரியங்களைச் செய்தருளியவர் ஸ்ரீ அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமிகளென்பது பல சாஸனங்களினால் நிர்ணயமான விஷயம், தாததேசிகன் செய்த கைங்கரியம் மிகவும் ஸ்வல்பம், அதுவும் அவர் தம்முடைய சிஷ்யருக்குக் கட்டளையிட்டுச் செய்வித்தது. காஞ்சிபுரத்திலேயே உலகளந்த பெருமாள் ஸந்நிதிக்கு தருமகர்த்தாவாக இருந்த போரேற்று பட்டர் ஸ்ரீநிவாஸ ராகவாசாரியர் ஸ்வாமிகள் லக்ஷக்கணக்கான ரூபாயில் அக்ரஹாரப்ரதிஷ்டை செய்தது,தடாக

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ப்ரதிஷ்டை செய்தது, நீரகம் காரகம் கார்வானம் என்கிற திவ்யதேசங்களைப் புநருத்தாரம் செய்தது இந்த நூற்ருண்டிலென்பதை நாம் கட்கூடாகப் பார்த்திருக்கிரேம். இதைவிட அதிசயமான காரியம் இந்த தேவஸ்தானத்தில் தாததேசிகர் யாதொன்றும் செய்யவில்லை. நூற்றுக்கால் மண்டபமும் அழகிய மணவாள ஜீயர் கைங்கர்யமென்பது சாஸநாரூடம். இந்த மண்டபத்தில் அனேக தென்கலைத் திருமண் காப்புகள் விளங்குவதால் அது வடகலையாருடைய திருப்பணியா யிருக்க நியாயமில்லை. அல்லது, 'தாததேசிகர் ஆதிகாலத்தில் தென்கலை ஸம்பிரதாயஸ்தர்' என்கிற தத்துவமாவது ஒப்புக்கொள்ளப்படவேண்டும். அய்யங்கார் குளத்தில் அநுமார்கோவில்மட்டுமே யுள்ளது. ஸ்ரீராமர் கோவிலுமுள்ளதாகச் சொல்லுவது ப்ரத்யக்ஷமான அபத்தம். தேவப்பெருமாள் அணிந்துகொண்டிருக்கும் விலையுயர்ந்த திருவாபரணங்களெல்லாம் ஸ்ரீ ஆத்தான்ஜீயர், அழகிய மணவாள ஜீயர், வேங்கடாத்ரிஸ்வாமி, காரணை பிரதிவாதி பயங்கரம் பெரிய அனந்தாசார்யஸ்வாமி முதலான தென்கலை ஸம்பிரதாயஸ்தர்களால்தான் செய்வித்துச் சாத்தப்பட்டவை. நாலைக்கும் அனந்தாசார் மகரகண்டியென்றே வழங்கப்பட்டுவரும் திருவாபரணம் விலைமதிக்க முடியாததென்பது ப்ரஸித்தம். வெங்கடாத்ரி கொண்டையென்பதும் அப்படியே. இப்படி தாததேசிகர் பெயரால் ஒரு திருவாபரணமாவது வழங்குவதுண்டோ? இல்லாதது எப்படி யிருக்க முடியும்?

கி. பி. 1711 ல்தான் தாதாசாரியர்க்கு இத்தலத்தில் தொடர்பு ஏற்பட்டது.

2. இனி, தாதாசாரியர்களுக்கு இந்த தேவஸ்தானத்தில் தொடர்பு ஏற்பட்டதைப் பற்றி விரிவாக விளக்குவோம். ஆதிகாலத்தில் இந்த தேவஸ்தான நிர்வாஹம் அர்ச்சகர், பரிசாரகர் முதலிய "ஸ்தலத்தாரின்" அதீனமாயிருந்தது. இதில் தாதாசாரியர்கள் சேரவில்லை. பிறகு ஒருகாலத்தில் யவநர் உபத்ரவத்தால் கோவில் சீர்கெட்டிருந்தது. அப்பொழுது ஆத்தான்ஜீயர் என்பவர் தமது சிஷ்யன் தோன்றமல் என்கிறவன் உதவியால் பெருமாளை உடையார் பாளையத்திலிருந்து மீட்டுக்கொண்டுவந்து கோயிலைச் சீர்படுத்திவைத்தார். இந்த உபகாரத்திற்காக ஷெ ஸ்தலத்தார் ஸன்னிதி நிர்வாஹத்தை ஷெ தோன்றமல்லிடம் ஒப்புவித்தார்கள்; அவன் அதை தனது ஆசார்யரான ஆத்தான்ஜீயருக்குத் தந்துவிட்டான். ஆக ஆத்தான் ஜீயரும், அவருடைய பரம்பரையில் சேர்ந்த பலரும் தர்மகர்த்தாக்களாக இருந்துவந்தார்கள். 1711ல் லக்ஷ்மீகுமார தாதாசாரியர் என்பவர் பெரிய வித்வானும் விஜயநகர ராஜகுருவாயும் இருந்தபடியால், அவரால் ஸன்னிதிக்குப் பல நன்மைகளுண்டாகக் கூடுமென்றெண்ணி அவருக்கு முதல் தீர்த்தம் அளிக்கப்பட்டது. இதற்காக அவர் ஸன்னிதியின் மாமூலான தென்கலை ஆசாரங்களையும், தென்கலைத்தனியன் முதலியவற்றையும் காப்பாற்றி வருவதாக உடன்படிக்கை எழுதிக்கொடுக்க வேண்டியதாயிற்று. அப்பொழுதும் அவர் முதல் தீர்த்தகாரராகமட்டு மிருந்தாரேயன்றி தர்மகர்த்தாவாக இல்லை. அப்பொழுது மற்றும் பல தென்கலை தீர்த்தகாரர்கள் இருந்தார்கள். இதில் பலர் வெகுகாலமாகவே தீர்த்தகாரரா யிருந்தார்கள். சிறிதுகாலம் கழித்து அரசாங்கமே தேவஸ்தான நிர்வாஹத்தை விரும்பி ஏற்றுக்கொண்டது. பிறகு 1842ல் அப்பொழுது இருந்த முதல் தீர்த்தகாரரும், வித்வானுமான ஒரு தாதாசாரியரிடம் தர்மகர்த்த பதவி ஒப்புவிக்கப்பட்டது. இப்பதவி 65 ஆண்டுகள் இவர்கள் பரம்பரையிலேயே இருந்தது. பிறகு ஸ்கீம்ஸூட் போடப்பட்டு 1917ல் ரிஸீவர் ஏற்படுத்தப்பட்டார். இந்த முறையும் பலவாருக மாறி தற்சமயம் ஸ்ரீ வைஷ்ணவரல்லாத ப்ராமணர் ஒருவர் எக். ட்ரஸ்டியாகவும், 2 தாதாசாரியர் ஆனரரி ட்ரஸ்டிகளாகவும் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்.

ஹிண்டுவில் வியாஸ மெழுதியவரின் உள்ளத்திலுண்மை.

3. ப்ரக்ருதம் ஹிண்டுவில் வெளிவந்த வியாஸ மெழுதியவர் ஆழ்வார்கள், திவ்ய ப்ரபந்தம், உபயவேதாந்தம் என்று பெரிய பெரிய பேச்சுக்களைப் புகுத்தியிருப்பதைப் பார்க்க மிகவும் வேடிக்கையா யிருக்கிறது. ஏனென்ருல் இவர்களுக்கு உள்ளத்தில் இவைகள் விஷய

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மான பகையும் வெறுப்புமேயுள்ளது. இதே வரத தாதாசாரியென்பவர் செங்கல்பட்டு ஸப் ஜட்ஜி முன் ஓர் ஸ்டேட்மெண்டு எழுதிக்கொடுத்திருக்கிறுர். செங்கல்பட்டு ஸப் ஜட்ஜு கோர்டு O. S. No. 7.—1945ல் தமிழ் ப்ரபந்தங்கள், வேதத்தில் பிரவேசமில்லாத பெண்களுக்கும், ப்ராமணர் அல்லாதவர்களுக்குமே எழுதப்பட்டன. ஆகையால் வடகலை தாதாசாரிகள் இது விஷயமான தங்கள் பாத்யதையை தென்கலை ஆத்தான் ஜீயர் என்பவருக்கு விட்டுக் கொடுத்துவிட்டார்கள்." என்று. இதைக்காட்டி அந்த ஜட்ஜு என்ன சொல்லுகிருரென்ருல், "இதனுல் வடகலையாருக்கு ப்ரபந்தங்கள் விஷயத்தில் எவ்வளவு அலக்ஷியம் இருக்கிறதென்பதை நாம் அறியலாம். இப்படியிருந்தும், இவர்கள் தாங்களும் தமிழ் ப்ரபந்தம் சொல்ல வேண்டுமென்று ஆக்ரஹம் கொள்வதுதான் மிகவும் வேடிக்கையா யிருக்கிறது." என்றெழுதியுள்ளார்.

இத்தலத்தில் தாதாசாரியர்கள் செய்த அநீதிச் செயல்கள்

4. காஞ்சீபுரம் தேவஸ்தானத்திலும் இவர்கள் ஆழ்வார்களையும் திவ்வியப் பிரபந்தங்களையும் மிகவும் கேவலப்படுத்தி யுள்ளார்கள். ஆழ்வார்களின் உத்ஸவங்களையும் ஸ்ரீ வைஷ்ணவ ஆலயத்திற்கு அஸாதாரணமான அத்யயந உத்ஸவத்தையும் இவர்கள் நிறுத்திவிட்டார்கள். வில்லியம்பாக்கம் பைபாகண்ணு தாதாசாரியர் திருவாடிப்பூரத்தன்று பெரியாழ்வார்க்கு பஹுமானமாகக் கட்டிவைத்த திருப்பரி வட்டத்தைத் தன் கையால் தொட்டுக் களைந்து விசிறி யெறிந்தார்; இப்படியே திருக்கார்த்திகை யன்றிரவு திருப்பாணுழ்வார் விஷயத்திலும் அபசாரப்பட்டார். இவற்றுக்கு என்ன காரணமென்ருல் இந்த தாதாசாரியர் ஒரு ஸமயம் கோர்ட்டில் வாக்குமூலம் கொடுக்கையில் "இந்த தேவஸ்தானத்தில் எந்த ஆழ்வாருக்கும் எந்த ஆசாரியருக்கும் எந்த ஸந்தர்ப்பத்திலும் யாதொரு மரியாதையும் செய்கிற வழக்கமில்லை" என்று கூசாமல் சொல்லியிருந்ததேயாம். இதெல்லாம் ரிகார்டில் ஏறிக்கிடக்கிறது.

ஸ்ரீபெரும்பூதூர் வியாஜ்ஜியத்தின் பரிஷ்காரம்

5. ப்ரஸங்காத் முக்கியமான விஷயம் கேண்மின். கடைசியாக ஸ்ரீபெரும்பூதூர் ஜட்ஜ்மெண்டில்தான் தாதாசாரியர்களின் பிரபாவம் மிக விளங்கிற்று. அவ்விடத்தில் ஒருவிதமான கலஹமுமில்லாமல் நடந்துவந்துகொண்டிருக்கையில் வெகுநாள் கழித்து தாதாசாரிகள் சண்டைகளைக் கிளப்ப அபரிமிதமான வியவஹாரங்கள் நடந்தன, ப்ரஹ்மஸ்ரீ V. கிருஷ்ணஸாமி ஐயர் என்கிறவொரு பிரபல அட்வகேட் அங்கு வடகலையார்களுக்கு வக்கீலாக இருந்தார். அப்போது ஸ்ரீபெரும்பூதூர் வியாஜ்ஜியம் கடைசியாக ஹைகோர்ட்டில் இருந்தது. அந்த ஸமயத்தில்,மேலேசொன்ன வடகலையாரின் வக்கீலான ஸ்ரீகிருஷ்ணசாமி ஐயரவர்கள் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்தானத்தில் அமர்ந்தார். அப்போது ஹைகோர்ட்டிலிருந்த ஸ்ரீபெரும்பூதூர் ஸன்னிதி வ்யவஹாரத்தின் அப்பீல் அந்த கிருஷ்ணஸாமி ஐயருடைய பெஞ்சில் வந்தது. ஏற்கெனவே பல வருஷங்கள் வடகலையார்க்கு வக்கீலாயிருந்த இவருடைய பெஞ்சில் இந்த அப்பீல் நடக்கத்தகாதென்றும், இவரிடம் நடந்தால் நியாயம் தேருதென்றும் தென்கலையார் ஆக்ஷேபிக்கத் தீவிரமான முயற்சிகள் செய்தும் பலிக்கவில்லை. அவரே விசாரிப்பதாகக் கேஸை எடுத்துக்கொண்டார். வடகலையார் நமக்கே வெற்றியென்று நிச்சயித்து ஆனந்தமாயிருக்கிறுர்கள்; தென்கலையார் கவிழ்தலையிட்டு வருந்திக்கிடக்கிறுர்கள். ஜட்ஜ் கிருஷ்ணஸாமி ஐயரவர்கள் கேஸை யெடுத்துக் கொண்டு அன்றே அலப்பிக் கவிழ்த்துவிட்டார். அவர் நெடுநாள் வடகலையார்களுக்கு வக்கீலாயிருந்தபடியால் எல்லா ரிகார்டுகளையும் ஒன்று விடாமல் முற்றிலும் பார்த்தவராகையாலே ப்ராமாணிகராய் மனச்சாட்சியை மீறமாட்டாமல் எழுதினுர் :—

"தாதாசார்ய குடும்பஸ்தர்கள் தங்களுக்குக் குலபரம்பரையாக வந்த ஸ்ரீசைலேச மந்த்ரத்தை விட்டு வடகலை மந்த்ரத்தை ஆதரிக்கத் தொடங்கியதுதான் இவ்வளவுக்கும் காரணம்; இதிலிருந்தே தாதாசாரியர்கள் தங்கள் கௌரவங்களை இழக்க நேர்ந்தது" என்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இந்த விஷயத்தை இதுகாறும் நாம் பல புத்தகங்களில் பல தடவை எழுதியிருக்கிறோம்? மேலே குறித்த வாசகம் போன்ற பலபல வாசகங்களை த்விபாந்தரஸ்தர்களான பெரிய பெரிய ஜட்ஜிகள் திருமலை திருப்பதி ப்ரிவிகவுன்ஸில் தீர்ப்பு முதலியவைகளில் அபரிமிதமாக எழுதியிருந்தாலும் அதைவிட மேலே உதாஹரித்த ஸ்ரீ. கிருஷ்ணஸாமி ஐயர் திருவாசகத்திற்கு மஹத்தான கௌரவமுண்டு. எதனால்? அவர் பத்தெட்டு வருஷகாலம் வடகலையார்களுக்கு அந்தரங்க வக்கீலாயிருந்து, அவர்களிடம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பெற்றிருந்து ரிகார்டுகளை எழுத்தெழுத்தாகப் பார்த்திருந்தவராகையாலே உள்ளதை உள்ளபடி தெரிந்து கொண்டு எழுதினார்; இது அவராகவா எழுதினது? தெய்வமன்றோ எழுதுவித்தது. இதைக் கண்டுவைத்தும், அந்த தாதாசார்ய குடும்பஸ்தர்களுக்கு மணவாளமாமுனிகளின் திருவடிகளில் அபசாரபுத்தி இன்னமும் நீங்கவில்லை. நீங்காததோடு வளர்ந்தும் செல்லுகிறது.

தாதாசாரியர்களின் மேல் ஸ்கீம்ஸூட் தொடுக்கப்பட்ட விவரம்

6. தேவராஜஸ்வாமி தேவஸ்தானத்தில் சிலகாலம் ஏகதேசமாக தர்மகர்த்ரு பதவியை வஹித்து வந்த தாதாசார்ய வம்சஸ்தர்கள் தர்ம பரிபாலனங்களை ஒழுங்குபடாகச் செய்வதில்லையென்றும் அவர்களை விலக்கி நியாயம் செலுத்தவேண்டுமென்றும் சுமார் 52 வருஷங்களுக்கு முன் வியவஹாரம் (ஸ்கீம்ஸூட்) ஆரம்பமாயிற்று. இந்த ஸ்கீம்ஸூட் போட்டவர்கள் ஷெ தேவஸ்தானத்தில் கைங்கர்ய பரர்கள் பலர் எனினும் தென்கலையார்களே முக்கியமாக நின்றார்கள். அப்போது தேவஸ்தான நிர்வாஹம் ஒரு ரிசீவர் மூலமாக நடந்துவந்தது. நல்ல புகழ்பெற்ற தோணுங்குளம் ராமாநுஜாசாரியாரென்பவரே அப்போது பல வருஷங்கள் ரிஸீவராயிருந்தவர். அந்த ஸ்கீம் வியாஜ்ஜியம் சென்னை ஹைகோர்ட்டாரவர்களால் ஒருவாறு முடிவு செய்யப்பட்டது. தாதாசார்ய வம்சஸ்தர்களில் ஐந்து பேர்கள் தர்மகர்த்தாக்களாயிருக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு வருஷத்தில் ஒவ்வொருவர் எக்ஸிக்யூடிவ் டிரஸ்டியாக இருந்து அதிகாரம் செலுத்தி வரவேண்டியதென்றும், இவர்கள் அநீதியாக நடந்துகொண்டால் அதைப் பரிசிலனை செய்து நியாயம் செலுத்துவதற்காக அவர்களுக்கு மேல் ஒரு ட்ரஸ்டு போர்டு இருக்கவேண்டியதென்றும், அந்த டிரஸ்டு போர்டில் ஒரு தென்கலை ஸ்ரீ வைஷ்ணவர், (தாதாசார்யரல்லாத) ஒரு வடகலை ஸ்ரீ வைஷ்ணவர், ஸ்ரீ வைஷ்ணவரல்லாத ஒரு ப்ராஹ்மணர் ஆக மூவர் அதிகாரிகளாக இருந்து தணிக்கை செய்யவேண்டியதென்றும்; அவசியம் நேருங்காலங்களில் இந்த ஸ்கீமை மாறுதல் (மாடிபிகேஷன்) செய்யலாமென்றும் முடிக்கப்பட்டது. அவ்விதமே சுமார் இருபது வருஷகாலம் நடந்து வந்தது. அதிலும் தரும நிர்வாஹங்கள் மிகவும் சீர்கேடாகவேயிருந்ததனால் ஸ்கீம் மாடிபிகேஷன் செய்யப்படவேணுமென்று மறுபடியும் தென்கலை ஸம்ப்ரதாயஸ்தர்களால் வியாஜ்ஜியம் தொடுக்கப்பட்டது. அப்போது ஐந்தாறு வருஷகாலம் ஷெ தாதாசார்ய வம்சஸ்த தர்மகர்த்தாக்கள் விலக்கப்பட்டு ஸ்மார்த்த ப்ராஹ்மணரொருவர் ரெஸீவராக ஜில்லா கோர்ட்டாரால் நியமிக்கப் பெற்று தேவஸ்தான பரிபாலனம் நடந்து வந்தது, அந்த வியவஹாரமானது விசேஷபலனைப் பெறவியாமலே முடிந்திட்டதனால் மறுபடியும் ஷெ தாதாசார்ய வம்சஸ்தர்களே ஐந்து பேர்கள் தர்மகர்த்தாக்களாக இருந்துவர நேர்ந்தது. வாதிகளான தென்கலையார்களால் சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளப்பட்டிருந்தது. அந்த அப்பீல் 17-1—1941 தேதியில் கனம் ஜட்ஜ் வார்ட்ஸ்வொர்த் துரையவர்களாலும் ப்ரஹ்மஸ்ரீ. கனம் ஜட்ஜ் பதஞ்சலிசாஸ்திரியவர்களாலும் பரிஷ்காரமாக முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவின் ஸாராம்சங்களை மேலே விளக்கிக் காட்டுகிறேன். (இடையில்)

தாதாசாரியர்களுக்குப் பரம்பரை மிராசு கிடையாதென்று முடிந்ததும், தற்காலமுள்ள பரிஸ்திதியும்

7. ஷெ தாதாசாரியர்களுக்குண்டான இந்த தர்மகர்த்ருத்வஹக்கானது பரம்பரை மிராசா? அன்றா? என்கிற ஒரு வியாஜ்ஜியமும் தனிப்பட நடந்தது. பரம்பரை மிராசுதான் என்று முன்னம் ஜில்லாகோர்ட்டில் முடிந்திருந்தது. அதன் பேரில் தென்கலையார் ஹை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கோர்ட்டில் அப்பில் செய்துகொள்ள, பரம்பரை மிராசு அல்ல என்று தீர்மானிக்கப்பட்டுக் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பு வலிதாக மறுக்கப்பட்டது.

கடைசியான முடிவு என்னவென்றால்: "ஸ்ரீவைஷ்ணவரல்லாத ஒரு ப்ராஹ்மணர் (ஸ்மார்த்தர் அல்லது மாத்வர்)ஸர்வாதிகார ஸம்பந்நரான மேனேஜிங் டிரஸ்டியாக நூறு ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப்படவேண்டும். தேவஸ்தான ஸம்பந்தமான லௌகிக வைதிக ஸகல அதிகாரங்களும் அவரொருவர்க்கே அதீனம். தாதாசார்ய வம்சஸ்தர்களில் கீழண்டை வகுப்பிலும் மேலண்டை வகுப்பிலுமாக இரண்டு பேர்கள் ஒருவிதமான அதிகாரமுமின்றிக்கே நாமமாத்ரமான (ஹானரரி) டிரஸ்டிகளாக இருக்கவேண்டியது. மேனேஜிங் டிரஸ்டியின் நடவடிக்கைகளின் மீது தணிக்கை பார்க்கவேண்டிய அதிகாரம் முழுவதும் ரிலிஜியஸ் எண்டோமெண்டு போர்டைச் சேர்ந்தது. ஷை ஸ்கீம் கேஸ் அப்பில் வாதிகளான ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரியர் ஆகிய அடியேன் முதலான எழு தென்கலையார்களுக்கு கோர்ட்டு காஸ்டு சுமார் ரூ. 450 வரையில் தேவஸ்தானத்திலிருந்து செலுத்தவேண்டியது" என்பது தீர்ப்பின் ஸாராம்சம். இது இப்படியே நிறைவேற்றப்பட்டது. ஷை தீர்ப்பை கோர்ட்டார் வெளியிட்டவளவில் அப்போது தர்மகர்த்தாக்களாக இருந்து வந்த தாதாசாரியர்கள் "நாளது வைகாசி மாதத்தில் நடைபெற வேண்டிய ப்ரஹ்மோத்ஸவம் வரையில் நாங்களே யிருந்து அநுபவித்துவிட்டு உடனே விலகிப் போய் விடுகிறோம்; கோர்ட்டார் தயவு செய்து அந்தப் படிக்கு உத்தரவு அளிக்கவேணும்" என்று கேட்டுக்கொண்டார்கள். அதைக் கோர்ட்டார் சிறிதும் அநுமதிக்கவில்லை. "நாளது மார்ச்சு மாதம் 17உக்குள் இந்த ஆர்டர் ஆசாரத்திற்கு வரவேண்டியது அவசியம்" என்று முடிவு செய்திட்டார்கள். அப்படியே அன்று முதலாகவே ஆசாரத்திற்கு வந்து விட்டது. ஸ்கீம்கேஸ் ஓய்ந்தபாடில்லை, இன்னமுமுள்ளது.

மணவாளமாமுனிகளிடத்து நிஷ்காரணமாச்சரியத்தினுல் தாதாசாரியர்களடைந்த பங்கங்கள்

8. ஆதியில் தாதாசார்ய வம்சத்தவர்களுக்கு ஏற்பட்ட பெருமைகளெல்லாம் மணவாள மாமுனிகளிடத்தில் பக்தி ஸம்பத்தினுலேயே என்பது பிஷ்டபேஷணம். என்றைக்கு இவர்கள் மணவாள மாமுனிகளிடத்தில் பகைகொண்டு நடக்க ஆரம்பித்தார்களோ அன்றைக்கே இவர்களுடைய ஸ்ரீ க்ஷயிக்கத் தொடங்கிற்று. ஸ்ரீ பெரும்பூதூர் எம்பெருமானுர் ஸந்நிதியில் இவர்களுக்கு எப்படிப்பட்ட மரியாதைகள் இருந்தன! காஞ்சீ க்ஷேத்திரத்து ஸகல தேவாலயங்களிலும் எப்படிப்பட்ட மரியாதைகள் இருந்தன! அந்தோ! எல்லா மழிந்தன. இதற்கு என்னகாரணமென்பது இவர்களுக்குத் தெரியாமலா இருக்கிறது? எல்லாம் ரிகார்டுகளிலன்றோ ஏறிவிளங்குகின்றது. இதர ஸந்நிதிகளில் இவர்களுக்கு தர்மகர்த்த ஊக்கு இல்லாமல் போனாலும் ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தொடங்கி அதற்கு மரியாதையாக முதல் தீர்த்தமநுபவிக்கிறமிராசு இருந்தது. தொடங்குவதில் விபரீதம் செய்து மரியாதைகளை இழந்தார்கள். அதற்குப்ரதிக்ரியை பண்ணமாட்டாமல் தங்களுக்கு தர்மகர்த்த ஹோதாவுள்ள இந்த தேவஸ்தானத்தில் தென்கலையார்களுடைய தீர்த்தமரியாதைகளை யெல்லாம் நிறுத்தினுர்கள். ஒவ்வொரு தீர்த்தகாரரும் வியாஜ்ஜியமாடி ஸ்தாபித்துக் கொண்டார்கள். தென்கலையான சாத்துப்படி மிராசுதாரரை விலக்கினுர்கள்; அவரும் வியாஜ்ஜியமாடி ஸ்தாபித்துக்கொண்டார். இப்படிப்பட்ட விஷமங்கள் பல பல. வடகலை நாமம் போட்டுக்கொண்டால்தான் உங்கள் மிராசுகளையநுபவிக்கலாமென்று சிலமிராசுதாரர்களை நிர்ப்பந்தித்தார்கள்; அதற்கு முதலியார்கள் கணக்குப் பிள்ளைகள் முதலானுர் சிலர் இசைந்தார்கள். ஆழ்வார் ஸன்னிதிக்காரரையும் இப்படி நிர்ப்பந்தித்தார்கள்; இசையாமற்போகவே பட்டம் பகலில் பகற்கொள்ளைக்காரர்களைப்போல் வாயில் துணியை யடைத்து ஹிம்ஸைகளைப் பண்ணி மூன்று கோர்ட்டுவரை இதற்காக வியாஜ்ஜியம் நடந்து வாசாமகோசரமாக பங்கமடைந்தார்கள். இப்படிப்பட்ட தப்பு வியாஜ்ஜியங்களை அநாவச்யகமாகக் கிளப்பி அவற்றுக்குச் செலவுசெய்ய தேவஸ்தானப் பணம் அப்போது இவர்களுக்கு ஸ்வாதீனமாயிருந்தபடியால் அந்தப் பணத்திற்கு இப்படிப்பட்ட விநியோகங்களே செய்துவந்தார்கள்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கி. பி. 1842ல் தர்மகர்த்தம் பெற்ற தாதாசாரியர்கள் அடைந்த பராஜய பரம்பரைகள்

9. இன்னமும் கேண்மின்; 1842-ஆம் வருஷத்தில் தாதாசாரியர்கள் இந்த தேவஸ்தான நிர்வாஹத்தை ஒப்புக்கொண்டபின் இரண்டு மூன்று வருஷகாலம் ஸாத்விகர்களாயிருந்தார்கள் போலும். பிறகு முதற்காரியம் ஆழ்வார்களின் ஸன்னிதிகளை யெல்லாம் பாழ்படுத்தியது. அதற்கடுத்த காரியம் நம்மாழ்வார் ஸன்னிதிக்காரர்களோடு வியாஜ்ஜியம் தொடங்கியது. [அது 1850-ஆம் வருஷத்தில்.] அதுதான் தாதாசாரியர்கள் ஆரம்பித்த முதன் முதலான வியாஜ்ஜியம். "ஆழ்வாரைத் தொட்டுத் திருவாராதனம் செய்ய உங்களுக்கு அதிகாரமில்லை; நீங்கள் வெறும் பரிசாரகர்களே யொழிய அர்ச்சகர்களல்ல; தேவஸ்தான அர்ச்சகர்களே அங்கும் பூஜை செய்ய வேண்டும்" என்று வியாஜ்ஜியம் தொடங்கி ஆழ்வார் ஸன்னிதி திட்டங்களை யெல்லாம் நிறுத்தி மூன்று கோர்ட்டு வரை நீண்டகாலம் வழக்காடித் தோல்வி யடைந்து நின்றார்கள். பிறகு பல வருஷங்கள் கழித்து, அந்த ஆழ்வார் ஸன்னிதிக்காரர்களுள் ஒருவரான (Late) திருமணி ராகவசாரிய ரென்பவரை வதம் செய்வதாகவும் துணிந்து, யானைக்கு மதம் பிடித்திருப்பதாக ஒரு பொய்யான ப்ரவாதத்தைக் கிளப்பி இரண்டு கோபுர வாசற்கதவுகளையும் பகலிலேயே அடைத்து, அந்த ராகவாசாரியர் ஆழ்வாருக்குக் காலைத் திருவாராதனம் செய்துகொண்டிருக்கையில் அவரை வெளியில் தள்ளிக் கைகால்களைக் கட்டி வாயிலும் துணியை யடைத்து ஆழ்வார் மதுரகவிகள் நாத முனிகள் மூவரையும் திருமலைமேல் கொண்டு சேர்த்துத் திருமணை மாற்றுவதாக இருக்கையில் போலீஸ் ப்ருந்தம் நூற்றுக்கணக்காக மலைமேல் வந்து சேர்ந்து பிறகு கிரிமினல் கோர்ட்டுகளிலும் ஸிவில் கோர்ட்டுகளிலும் நடந்த நடவடிக்கைகள் பாரத ராமாயணாதிகளைப் போலே அச்சாகி யிருக்கின்றனவென்பதை உலகமறியும். இவற்றில் இவர்களுக்கு நேர்ந்த பராஜயங்கள் பேச்சுக்கு நிலமன்று.

பெருங்கட்டூர் குமாரதாதாசாரியரின் அதர்க்கணச் செயலின் பலன்

10. இந்த தேவஸ்தானத்தில் அனேக வருஷகாலம் ஏகதேசமாக தர்மகர்த்தம் பார்த்து வந்த தாதாசாரிய குடும்பஸ்தர்கள் அதிகாரத்திலிருந்து அறவே நீக்கப்பட்டது ஹைகோர்ட்டு அதிகாரிகளாலென்று உலகம் நினைத்திருக்கிறது; நாமும் அவ்விதமாகவே எழுதினோம். ஆனால் உள்ளபடி சொல்லுமளவில், மணவாளமாமுனிகளே நீக்கிவைத்தாரென்பது ஸத்யம். "யதநந்தரம் யத்பவதி தத் தஸ்ய காரணம்" என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் கூறுவர்கள். அதன்படி பார்த்தால் நாம் தெரிவிக்கின்ற உண்மை ஒவ்வொருவருடைய வுள்ளத்திலும் நன்கு பதியும். இவர்கள் தர்ம கர்த்ரு பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு நெருங்கின முன்னாட்களில் நடந்த இவர்களது நடத்தைகளைச் சுருக்கமாக நிரூபிப்போம். உலகமறிந்தவற்றையே இப்போது நினைப்பூட்டுகிறோமத்தனை. களம் ஹைகோர்ட்டு ஜட்ஜ் (Late) ஸ்ரீ. ஸுந்தரமையரவர்கள் ஒரு வருஷத்தில் ஐப்பசி மாதத்தில் ஏதோ கார்யவசமாகக் காஞ்சீபுரம் வந்திருந்து அன்றிரவு 7-மணிக்குத் தேவப்பெருமானை ஸேவிக்க வந்திருந்தார், உபயகலையாரும் அவரை வரவேற்று உபசாரங்கள் செய்து பெருமாள் தாயார் ஸேவைகளைச் சிறப்பாகச் செய்வித்தார்கள். அவரும் ஆனந்தமாக ஸேவித்துத் திரும்புகையில், அப்போது மணவாள மாமுனிகளுத்ஸவம் நடந்து கொண்டிருந்தபடியால் வெளிப்புறப்பாட்டுக்காக அதிர்வெடிபோட, அதுகேட்ட ஜட்ஜ் அவர்கள் என்ன விசேஷமிப்போது? என்று கேட்க, மணவாள மாமுனிகளுத்ஸவம் நடந்து கொண்டிருக்கிறது; வெளியில் பந்தலில் பத்தியுலாத்தப் புறப்பாடு ஆரம்பமாகிறது; அதற்காக அதிர்வெடி" என்று சொல்லிவிட்டு "தாங்களும் அங்கே ஐந்து நிமிஷம் விஜயம் செய்தால் நன்றாயிருக்கும்" என்று தென்கலைத் தலைவர்கள் சொல்ல, அவரும் "அதற்கென்ன? அவசியம் வருகிறேன்" என்று சொல்லி பெருந்திரளுடனே மணவாளமாமுனிகள் ஸன்னிதி பக்கமாகத் திரும்பினவாறே அப்போது தேவஸ்தானத்தில் தர்மகர்த்தாவாயிருந்த பெருங்கட்டூர் குமாரதாதாசாரியரென்பவர் அப்பெருங் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு முன்னே ஓடிவந்து ஸத்யோவைதவ்யமடைந்தவளைப்போல் சரேலென்று நிலத்தில் விழுந்து வாயிலும்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வயிற்றிலுமடித்துக்கொண்டு "ஐயோ! தங்களை சாக்ஷிபோடுவதற்கென்றே இன்று புதிதாக இந்த புறப்பாட்டை ஆரம்பிக்கின்றார்கள், நீங்கள் அங்கே சென்றால் ப்ரேதங்கள் விழுகிற வேடிக்கையைத்தான் பார்க்கவேண்டும்" என்று கத்தினார். ஜட்ஜ் அவர்கள் திகைத்துப் போய் உடனே திரும்பிப்போய்விட்டார், அந்த குமாரதாதாசாரியருடைய சாதுர்யத்தை வடகலையார்கள் மிகவும் மெச்சி உடனே அவரைத் தேவப்பெருமாளிடம் கொண்டுபோய் மாலை மரியாதைகள் செய்வித்து பேஷ்! பேஷ்! என்று குணுலமடித்தார்கள். பிறகு அந்த குமாரதாதாசாரியருக்கு நேர்ந்த கதியைக்கேளுங்கள், இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளே உடலெல்லாம் புழுத்து நடமாட்டமுமிழந்திருந்து துன்பக்கடலுள் துவண்டு இப்படி நாலைந்து வருஷம் யாதனைகள் பட்டு, சரமகாலத்திலே வேஷ்டியால் ஏணைகட்டி அதிலே தன்னைக் கொண்டுபோய் திருமலையிலே பெரிய பெருமாளைத் தாம் ஸேவிக்கும்படி செய்விக்கவேணுமென்று சிலரை வேண்டிக்கொண்டு அப்படியே ஏணையிலே தூக்கிக்கொண்டு போகப்பட்டு, திருமலையிலே சேவித்துத் திரும்புகையில் ஆழ்வார் திருவீதிவலமாக அந்த ஏணையைக்கொண்டு போகச்சொல்லி மணவாள மாமுனிகள் ஸன்னிதிவாசலில் வந்தவாறே அங்கு இறக்கச்சொல்லி "ஸ்வாமிந்! முன்பு திருப்புட்குழி ஸ்வாமியின் அபசாரங்களை க்ஷமித்தருளினதுபோல அடியேனுடைய அபசாரங்களையும் க்ஷமித்தருளவேணும்" என்று கதறிக்கதறிக் கத்திக்கத்தி யழுது க்ருஹம் வந்துசேர்ந்து அன்று மாலையே பரலோகம் சென்று சேர்ந்தாரென்பது ஜகத் ப்ரஸித்தம். [இங்கே திருப்புட்குழி ஸ்வாமிப்ரஸ்தாவம் வந்திருக்கிறது; அந்த விஷயம் மேலே விளங்கும்.]

மேல்பாக்கம் குமாரதாதாசாரியர் மஹிமை

11. மேல்பாக்கம் குமாரதாதாசாரியாரென்பவர் ஸ்வல்பகாலம் தர்மகர்த்த நடனமாடினார் பதவிக்கு வந்தவுடனே தென்கலையார்களை வரவழைத்து "உங்களில் நாலாயிர அத்யாபகர்கள் எத்தனை பேர்கள்? சில நிலபாகம் தெரிந்த அத்யாபகர்கள் எத்தனை பேர்கள்? எல்லாம் விலை வாரியாக எழுதிக் கொடுத்துவிட்டே கைங்கர்யம் பார்க்கவேணும்" என்று சில அட்டஹாஸங்கள் செய்தார், அடுத்த வாரத்தில் கைசிகத்வாதசி ப்ராப்தமாக, அன்று அந்த குமாரதாதாசார் புராணம் வாசிப்பதாக வந்து பரிவட்டங்கட்டிக்கொண்டு கோலப்படி பக்கத்திலேயே போலீஸ் பந்தோபஸ்துடன் பகல் 12 மணி வரை நாற்றிசையும் நோக்கி விழித்திருந்து பரிவட்டத்தைத் தாமே களைந்து கொடுத்துவிட்டு வீடுசேர்ந்து ட்ரஸ்டி பதவிக்கு ராஜிநாமா கொடுத்துவிட்டு அன்றிரவே சென்னைமாநகர் போய்ச் சேர்ந்து நாளடைவில் அங்கிருந்தே பெரியபரஞ்சோதி புக்கார்.

சாமா திருமலை தாதாசாரியர் பிரபாவம்

12. சாமா திருமலை தாதாசாரியரென்பவர் மணவாள மாமுனிகளையும் அவரடியார்களையும் வாசாமகோசரமாக நிந்தித்து சிவசன பூஷணச் சீர்கேடு என்று சில அபத்த பஞ்சாங்கங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார்; அதே ஸமயத்தில் தர்மகர்த்த பதவிக்கும் பிரபல முயற்சி செய்து நிற்க, "இந்த ஸ்தானத்திற்கு இவர் வந்தால் கோவிலே குட்டிச்சுவராய்விடும்" என்று தாயாதிகளே வெளிப்படையாகவந்து ஆக்ஷேபிக்கும்படியாகி அந்த பதவி கிடைக்காததோடு பலவகைப்பட்ட பங்கங்களையடைந்து பரிதாபநிலைகளை யெய்தி முடிந்தார்.

பூந்தி தாதாசாரியரின் மேன்மை

13. பூந்தி தாதாசாரியென்பவர் சில நாட்கள் தர்மகர்த்தக் கூத்தாடினார்; அப்போது அவர் சாவுதீட்டுடனே மணவாள மாமுனிகள் ஸன்னிதியிலேவந்து, மாமுனிகளின் திருமுற்றப் பந்தல் பத்தியுலாத்தல் ஸமயத்தில் தண்டைப்பிடித்துத் தள்ளிச் சில அதர்க்கண சேஷ்டைகள் செய்ய "தெய்வம் நின்றுகொல்லும்" என்கிற பழமொழியும் பழுதாகி அடுத்த நாளிலேயே அவர் "வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ கானோ வொருங்கிற்று" என்ன வேண்டும்படியான சோசநீயஸ்திதிகளை யடைந்த சரிதைகளை ஒருவரும் மறந்திருக்க முடியாது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சோளன் தாதாசாரியரின் சிறப்பு

14. சோணன்தாதாசாரிய ரென்பவரும் சிலகாலம் தர்மகர்த்த ருத்த மாடினர். ஒரு வருஷம் வைசாகோத்ஸவத்தில் த்வாதசாராதனத்தின்னன்று திருவபிஷேக மண்டபத்தின் கீழ் இருநூறு ஸ்வாமிகள் எழுந்தருளி யிருந்து திருவாய்மொழி ஸேவித்துக்கொண்டிருக்கிறார்கள். பெருமாளுக்கு அலங்காரமாகி த்வாதசாராதனம் நடைபெறவேணும். திருத்திரை சேர்த்திருக்கிறது. "இன்று த்வாதசாராதனமும் கிடையாது, த்ரயோதசாராதனமும் கிடையாது; பெருமாளைக் கண்ணுடியறையிலேயிட்டுக் கதவைப்பூட்டும்" என்று மணியகாரருக்கும் அர்ச்சகபரிசாரகர்களுக்கும் கட்டளையிட்டார் ஷெ சோணன் தர்மஹர்த்தா. பெருமாள் உள்ளே போய்ச் சேர்ந்துவிட்டார். பிறகு நடந்த வியாஜ்ஜியத்தில் 200 ரூ. (இருநூறு) அபராதம் செலுத்தவேணுமென்றும் இதை தேவஸ்தானப்பணத்திலிருந்து செலுத்தாமல் கைவிட்டுக் கட்டவேணு மென்றும் கட்டளையாயிற்று. பிக்ஷாடனம்பண்ணிக் கட்டிவிட்டு விலகினர். இந்த தாதாசாரியரே மணவாள மாமுனிகள் ஸன்னிதியில் பந்தல் போடுவதை ஆக்ஷேபித்தும் பலவாயிரக் கணக்கான ரூபாய்களை தேவஸ்தானத்திலிருந்து அநியாயச் செலவு செய்து மூன்று கோர்ட்டுவரை வழக்காடித் தோற்றொழிந்தார். இவையெல்லாம் நான் நேராக அநுபவித்தவை. இங்ஙனே பல.

இந்த தாதாசாரியர்கள் தேவஸ்தானப்பணத்தை இவ்விதமாக அநியாயச் செலவுகள் செய்ததைக் கணக்கிட்டால், உண்மையில் இந்த தேவஸ்தானம்போல் இரண்டு மூன்று தேவாலயங்கள் கட்டுவதற்குப் போதுமான பணம் செலவாகியிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. பலர்க்கோ சிலர்க்கோ பாபப்ராசுர்யத்தாலே பெற்றதாயினிடத்திலேயே நிஷ்காரணமான பகையுண்டாவது போல, இவர்களுக்கு மணவாள மாமுனிகளிடத்திலே பகை தோன்றியதுதான் ஆச்சரியம். மாமுனிகளின் உத்ஸவத் திருமேனியைக் களவாடிப் பொற்றாமரையிலே பலகாலம் எழுந்தருளப்பண்ணிவைத்த மஹாநுபாவர்கள் இவர்கள். இந்த தேவாலயத்தில் அநந்த புஷ்கரிணியொன்றே புண்யதீர்த்தமென்றும், பின்புறத்திலிருக்கிற பொற்றாமரைக்குளம் சில நூற்றாண்டுகட்கு முன்னம் தோண்டப்பட்டதாகையாலே அது ஸாதாரண தடாகமென்றும் எண்ணியிருந்தோம். அதையும் புண்ய தீர்த்தமாக ஒரு அட்வகேட் எழுதியிருப்பது எதனாலேயென்று ஆலோசித்தோம், தன்னுடைய ஆசார்ய குடும்பம் மணவாள மாமுனிகளைப் பலகாலம் இந்த தடாகத்திலே எழுந்தருளப் பண்ணிவைத்ததனால் இதையும் புண்ய தீர்த்தமாகப் பரிகணநம் செய்தாரென்று தத்துவமுணர்ந்தோம்.

திருப்புட் குழியப்பாஸ்வாமியின் பிரபாவம்

15. இவர்களில் தலைவராக எழுந்தருளியிருந்த திருப்புட்குழியப்பாஸ்வாமியே இப்படிப்பட்ட அதிமாநுஷ சேஷ்டிதங்களுக்கு ப்ரவர்த்தகராக விளங்கியருளினாராம். ந்யாயாலயத்தில்சென்று "இந்த தேவஸ்தானத்தில் மணவாள மாமுனிகள் மூலவிக்ரஹம் மாத்திரமுண்டேயல்லது உத்ஸவ விக்ரஹம் கிடையாதென்று அகோரப்ரமாணம் பண்ணுவேன்" என்று அதிகாரிகள் முன்னிலையில் நாற்கரலியில் வீற்றிருந்து திருவாய்மலர்ந்தருளினாராம். பெரும்புளுகரிவரென்று அதிகாரிகளால் அறுதியிடப்பட்டு அவஜ்ஞையுடன் க்ருஹம் திரும்பின மஹான் அவர். அகோரப்ரமாணாசார்யரென்றே விருது பெற்றிருந்தார், மணவாள மாமுனிகள் விஜயஸ்ரீயுடன் ந்யாயஸ்தானத்திலிருந்து யதாஸ்தானமெழுந்தருளின பின்பு இந்த திருப்புட்குழி ஸ்வாமி [விவேகியாகையாலே] மாமுனிகளின் ஸன்னிதிக்குவந்து ஸுக்ருதப்ரணுமமென்று சொல்லிக்கொண்டு பன்னிரண்டுமுறை நமஸ்கரித்து புந: புந: க்ஷமித்தருளவேணுமென்று அஞ்ஜலிமுத்ரையுடன் விஜ்ஞாபித்து மீண்டனராம்.

முக்கியமான விஜ்ஞாபனங்கள்

16. ப்ரக்ருத விஷயத்தை நிகமனம் செய்கிறோம். தேவப்பெருமாள் ஸன்னிதியை ஆண்டுவந்த பழைய டிரஸ்டிகள் ஷெ ஸன்னிதியில் மணவாள மாமுனிகளுக்கும் மற்றுமுள்ள ஆழ்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாராசாரியர்களுக்கும் இழைத்த தீங்குகள் உண்மையாகவே ராமாயணமும் பாரதமும் போன்றது. அவை பல புத்தகங்கள் மூலமாக வெளிவந்துமிருக்கின்றன, கோர்ட்டு ரிகார்டு களிலும் ஏறிக்கிடக்கின்றன. அப்படிப்பட்ட தீங்குகள் அற்றொழிய வேணுமென்றே இந்த தேவஸ்தானத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களல்லாத பிராமணர்கள் அதிகாரம் செலுத்தும் டிரஸ்டி யாக நியமிக்கப்பட்டார்கள். 17—3—41 தேதி முதலாக மேலேகுறித்த பிராமணர்களின் அதிகாரத்திலேயே இந்த தேவஸ்தான நிர்வாஹம் நடைபெற்று வருகின்றது. ஆழ்வாராசார் யர்களின் திருநக்ஷத்திரோத்ஸவ பரிபாலனங்களும் அத்யயனோத்ஸவமும் மணவாள மாமுனி களின் திருநக்ஷத்ரோத்ஸவமும் இந்த தேவஸ்தானத்தில் பல வருஷங்களாகவே நிறுத்தப் பட்டு அதுவே ஒரு மாமூலாக வந்திருந்தபடியால் மத்யஸ்தர்களான புது டிரஸ்டிகள் நிய மிக்கப்பட்டுங்கூட அநாதி மாமூல்படி உத்ஸவாதிகளை நடத்துவிக்க ஸௌகரியமில்லாமற் போகவே அவைகளுக்காகவும் தனி வியாஜ்ஜியங்கள் நடத்தி அநாதி மாமூல்கள் அநேகமாகப் புதுப்பிக்கப்பட்டன; அவை 25 வருஷ காலமாகவே ஒழுங்காக நடந்து வருகின்றன. அவை நடக்க ஆரம்பித்தபிறகுதான் இந்த தேவஸ்தானத்தை விஷ்ணுவாலயமென்று சிறப்பித்துச் சொல்ல அவகாசமுண்டாயிற்று. ப்ரஹ்மஸ்ரீ S. நரஸிம்ஹய்யரவர்களென்பவர் இவ்வாலயத் தில் 4, 5, வருஷங்கள் எக்ஸிகியூடிவ் டிரஸ்டியாயிருந்து நல்ல புகழ் பெற்றார். ஒருதலைக்கு வசப்பட்டிருத்தல் முதலான தியகுணங்கள் அவரிடம் இடம்பெறுமலிருந்தன. ஸகல பக்தர் களும் அவரையே அடிக்கடி நினைக்கிறார்கள். ... ... *

கீழே விவரித்த பல பல விஷயங்களில் முக்கியமான சிலவற்றுக்கு ரிகார்டுகள் காட்டுகிறேன்

* நம்மாழ்வார் ஸந்நிதியும்—தாதாசாரியர்களும். தாதாசாரியர்கள் நம்மாழ்வார் ஸன்னிதியை வடகலையாக்க முயன்றபோது பிரளயமான கிளர்ச்சி ஏற்பட்டது. செங்கற்பட்டு அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டில் O. S. Nos. 6 & 7 of 1912.

M. R. Ry., R. V. கிருஷ்ண ஐயர் M. A., B. L., அவர்கள் 31-8-1914ல் தீர்ப்பு செய் திருக்கிறார். அதில் 106 to 113 பாராக்களில் உள்ள விஷயங்களாவன;-

(சொல்வடிவம் மாறாத மொழிபெயர்ப்பு.)

இந்த ஸந்தர்ப்பத்தில் இந்த வியாஜ்ஜியம் ஏற்பட்டதற்கு முன் நடந்த விஷயங்களைக் கவனிக்கவேண்டியது முக்கியமாகிறது. (தென்கலை) வாதிகளின் வழக்கு என்னவென்றால்:— "கோவிலின் யானைக்கு மதம்பிடித்து கோபுரவாசலின் கதவுகளை மூடியிருந்தபோது வடகலை யார்கள் பலவந்தமாக நம்மாழ்வார் சன்னிதிக்குள் நுழைந்து, திருமண்காப்புகளை மாற்றுவதற் காகவே நம்மாழ்வாருடையவும் அவருடன் சேர்ந்திருந்தவர்களுடையவுமான" (நாதமுனிகள் மதுரகவிகள்) விக்ரஹங்களை அப்புறப்படுத்திக்கொண்டு போய்விட்டார்கள். இதற்கு மாறாக பிரதிவாதிகள் (வடகலையார்) பகல்பத்து உத்ஸவம் நடத்துவதற்கே வழக்கம்போல் ஷை விக்ரஹங்களை எள்ளப்பண்ணிக்கொண்டு போனதாகச் சொல்லுகிறார்கள், இருதரத்தாரும் 27—12—1908ல் நடந்த சம்பவத்தைப்பற்றி அனேக சாக்ஷியங்களையும் ரிகார்டுகளையும் கொடுத்திருக்கிறார்கள். இவைகளால் ருஜுவான விஷயங்கள் கீழ்வருமவை:—அன்றைய தினம் உடனே போலீசாரிடத்திலும் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையிலும் வடகலையாரின் பேரில் பிராதுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சப் இன்ஸ்பெக்டர் நீலகண்டய்யர் உடனே சில போலீஸார்களுடன் கலகம் நேர்ந்தவிடத்திற்குச் சென்றிருக்கிறார். நீலகண்டய்யர் பிரஸ்தாப விக்ரஹங்களை ஷை தேவஸ்தானத்தின் மலைமேல் கண்டு பிடித்தார். உடனே ஒரு மஹஜர் (exibit A.) வடகலை ரெஸீவர் (தோ. ரா.), சில பிரமுகர்கள் முன்பாக தயார் செய்தார். அந்த மஹஜரில் அந்த சமயம் தாற்காலிகமாக பிரஸ்தாப விக்ரஹங்களின் வடகலை நாமம் சாற்றப் பட்டிருந்தாலும் விக்ரஹங்களை அலம்பி பரிசோதித்தபோது தென்கலையென்று சந்தேஹிக்கக் கூடிய சின்னங்களிருந்தனவென்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த கேஸில் அனேக வடகலை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யார்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அப்பீலிலும் காயமானதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், ப்ரஸ்தாப விக்ரஹங்களை ஏள்ளப்பண்ணிக்கொண்டு போவதற்காக உபயோகிக்கப்பட்டதாய்க் காட்டப்பட்ட தோளுக்கினியான் வெகுநாட்களாக உபயோகப்படுத்தாமலிருந்ததாக நிரூபிக்கப்பட்டதும், உடனுக்குடனே பிராது கொடுக்கப்பட்டதும், தென்கலை சின்னங்கள் காணப்பட்டதுமாம். இவைபோன்றவைகளைக் கவனித்தால் பலவந்தமாக ஷை விக்ரஹங்களை அபஹரித்ததாகவே கொள்ளவேண்டியிருக்கிறது. இந்த விஷயங்களோடு இதையும் கவனிக்கவேண்டும். Ezibit L· EE. GG. and RR. இந்த ரிகார்டுகளிலிருந்தும் வாக்குமூலங்களிலிருந்தும் ஆழ்வார் ஆசாரியர்களின் பகல் பத்து உத்ஸவம் அனேக வருஷங்களாக நிறுத்தப்பட்டிருந்தது ஏற்படும்; ப்ரஸ்தாப வருஷத்திலேயும் விக்ரஹங்களைக் கொண்டுபோய் பகல்பத்து உத்ஸவத்தை நடத்தும்படி உததரவிடவில்லையென்றே ரிஸீவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகையால் பகல்பத்து உத்ஸவத்திற்கு இந்த விக்ரஹங்களைக் கொண்டுபோனதாகச் சொல்வது அடியோடு நம்பமுடியாது. காஞ்சீபுரம் ஸ்டேஷனரி சப்மேஜிஸ்ட்ரேட்டின் உத்தரவின்பேரில் 28—12—1908ல் அந்த விக்ரஹங்கள் நம்மாழ்வார் ஸன்னிதிக்கே திருப்பக்கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன; ஷை ஸன்னிதியைப் போலீஸார் 6—1—1909 வரையில் பாராபோட்டு காத்துக்கொண்டிருந்தார்கள். அன்றைய தினம் வாதிகளிடம் ஷை ஸன்னிதி ஒப்புவிக்கப்பட்டபோது ஒரு மஹஜர் தயார் செய்யப்பட்டது. அந்த மஹஜரில் நம்மாழ்வாரின் மூலவருக்குத் தென்கலைத் திருமண்காப்பே வெகு ஸ்பஷ்டமாகப் பார்க்கலாம்படி இடப்பட்டிருந்ததென்றும். மற்றும் பாத்திரங்கள், சாமான்கள் முதலியவற்றில் தென்கலை நாமங்களே இருந்தனவென்றும், ஆழ்வார் ஸன்னிதியிலுள்ள (கருங்கல்) ப்ருந்தாவனத்தில் தென்கலை திருமண்காப்பே யிருந்ததென்றும் கூறப்பட்டிருக்கிறது. இதற்குமேல் இந்த காம விஷயத்தைப்பற்றி விவரிப்பது அனாவசியம்: நடந்த விஷயங்களையும் சூழ்நிலைகளையும் கொண்டு நம்மாழ்வாரும் அவரைச்சேர்ந்தவிக்ரஹங்களும்தொன்றுதொட்டுள்ள ஆசாரப்படி தென்கலையே என்பது முடிவாக நிர்ணயிக்கப்பட்டு விட்டது. இவை வடகலையல்ல. ஆழ்வாராசாரியர்களின் பகல்பத்து உத்ஸவாதிகளையும் புறப்பாட்டு உத்ஸவங்களையும் வடகலை தாதாசார்ய தர்மகர்த்தாக்கள் நிறுத்தியகாரணம் S.A·Nos. *137, 138* and *259* of *1902* (on the file of the High Court)ல் T. M. ஸ்வாமிநாத அய்யர் நிர்ணயம் (finding) பாரா *17*ல் கூறியுள்ளது யாதென்றால், ஆழ்வாராசாரிய விக்ரஹங்களுக்கு புறப்பாடு உத்ஸவம் நடத்தி மணவாள மாமுனிகளுக்கு உத்ஸவம் நடத்தாவிட்டால் விரோதமாகவும் சங்கடமாகவும் இருக்குமே என்ற காரணத்தைக் கொண்டே எல்லா பக்த விக்ரஹங்களுக்குமே ஷை உத்ஸவத்தை இக்கோவிலில் நடத்துவதை நிறுத்திவிட்டார்கள். ("It is also clear that seeing how strange and unsound the theory that Manavala Mahamuni is not entitled to any procession will look when the other Alwars and Acharyas have such processions, The plaintiffs (Vadagalai Thathachar trustees) have evidently thought it best to stop such processions to all for the present" இது ஹைகோர்ட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தேவராஜஸ்வாமி சன்னிதியிலுள்ள தென்கலை பாத்யதைகள் விஷயம்.

In the High Court of Madras

A· S. No· 212 of 1909

JUDGMENT 24-4-1912

by Hon'ble Mr. Justice Abdur Rahim &

" " Sundara Iyer.

ஷை ஜட்ஜ்மெண்டில் பதினோராவது பேஜில் இரண்டாவது பேராவில் கூறியுள்ளவை:—

"We are, however, of opinion that, having regard to the past management of the temple, it is desirable to provide some authority to supervise the administration by

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

the trustees. Several members of the Thengalai community hold offices in the temple, and the Thengalai, as a body, have important interests connected with it. It has been decided that the invocation before the recitation of the Prabandam or Thirvoimozhi in the temple should be addressed to the Thengalai Saint, Manavala Mahamuni. The Thengalais possess the right to the Adhyapakam office. These rights led to long litigation between the Thengalai and Vadagalai communities (see Krishnaswami Thathachariar V. Krishnamachar I. L. R., 5 Madras 318). There is a shrine of

முதலில் தோன்றிய ஸ்கீம்ஸூட்டை முடிவு செய்த ஹை கோர்ட்டு ஜட்ஜுகளான (கனம்) அப்துல் ரஹிம் & ஸுந்தரமையர் இவர்கள் எழுதியிருப்பது-(ஆங்கிலத்தின் நேரான மொழிபெயர்ப்பு)

"தென்கலையாருக்கு அனேக முக்கியமான பாத்யதைகள் ஷை தேவஸ்தானத்தில் இருக்கின்றன. திருவாய்மொழி முதலிய ப்ரபந்தங்கள் தொடங்கும்போது தென்கலை யாசார்யராகிய மணவாள மாமுனிகளின் தனியனைச் சொல்லியே எப்போதும் தொடங்கவேண்டியதென்று கோர்ட்டுகளில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அத்யாபக ஆபீஸ் தென்கலையார்களுடையதே. தேவஸ்தானத்திற்குள்ளேயே தென்கலை ஆசார்யர்களான மணவாள மாமுனிகளின் ஸன்னிதியும் நம்மாழ்வார் ஸ்ரீமன் நாதமுனிகளின் ஸன்னிதியும் இருக்கின்றன. தீர்த்த மிராசு பாத்யதைகளில் ஒரு பெரும்பாகம் தென்கலையார்களுடையதே. ஷை தேவஸ்தானத்திற்குள்ளிருக்கும் திருமண்களில் அனேகம் தென்கலைத் திருமண்காப்புகள் உள்ளன. அனேக தென்கலையாருக்கு ஆசிர்வாத பாத்யதைகளும் உண்டு. மல்ஜிதர்மகர்த்ருத்வம் ஒரு தென்கலை ஸம்ப்ரதாயஸ்தரையே சேர்ந்தது. தென்கலையாருக்கு இவ்வளவு பாத்யதைகள் ஷை தேவஸ்தானத்தில் இருப்பதாலும் தர்மகர்த்தாக்கள் எல்லாரும் வடகலையாயிருப்பதாலும் தென்கலையார்கள் தங்களுடைய பாத்யதைகளைச் சரிவர அனுபவிக்கமுடியாமல் இருக்கும்படி தடை செய்யப்படுகிறார்கள் என்று தகுந்த காரணத்துடன் நிரூபணத்துடன் குறை கூறப்படுகிறது. இது அனேக கிளர்ச்சிகளுக்கும் கோர்ட்டு விவகாரங்களுக்கும் இடம் தந்திருக்கிறது. தென்கலையார்களின் பாத்யதைகளுக்கு விரோதமாக அனேக புதிய ஆசாரங்களை வடகலை தாதாசார்ய தர்மகர்த்தாக்கள் நுழைக்க அடிக்கடி முயற்சி செய்கிறார்களென்று வற்புறுத்தப்படுகிறது. ஒரு தாதாசார்ய விக்ரஹத்தை புதியதாய் கோவிலில் ஸ்தாபிக்கச்செய்த முயற்சி பலிக்கவில்லை. இக்காரணங்களைக்கொண்டு தாதாசார்ய தர்மகர்த்தாக்களுக்குமேல் நாங்கள் ஏற்படுத்தவிருக்கும் Board of Supervision-ல் ஒரு தென்கலை ஸம்ப்ரதாயஸ்தர் இருக்கவேண்டுமென்று கருதி அப்படியே தீர்மானிக்கிறோம்''.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

Manavalamahamuni within the precints of the temple as well as a shrine of Nathamuni, ... The Thengalai own the right to a good proportion of the Thirtam offices. Many of the Namams in the temple are Thengalai namams. The Thengalais have also the right of Asirvadam and a Thengalai is entitled to the office of Mulji Dharmakarta. All these have led to constant disputes and litigation between the communities and it is complained with reason that the fact that all the trustees are Vadagalais has tended to impede the vindication of the rights of the Thengalais and the Thengalai office holders. ... ...

It is also urged that the Thathachar Dharmakartas have repeatedly attempted to introduce innovations contrary to the interests of the Thengalais. They attempted to introduce an idol of Thathachar but the attempt failed. ... ...

We have therefore considered it desirable, in appointing a Board of Supervision, to provide that one of the members of the Board should be a Thengalai gentleman not holding any office in the temple." ... ...

EXHIBIT D (dated *23—2—1799*)

To the Amil (Tahsildar) of Conjeevaram Pargana

I understand that in the Pagoda (temple) of Vedantacharialu near Dipaprakasakala Pagoda, the prayer, "Ramanujadayapatram" has been recited for some days, which was never before done, and which is contrary to religious doctrines. It is therefore very improper that it should be done so. You should therefore put a stop to the same and order the prayer, "Srisailesadayapatram" to be recited as usual. For such improper act of Ragunadacharyulu and Thiruppakuli Krishnamacharyulu among the Thathacharyas, and for their having given me the trouble of going and seeing that, you should levy from them a fine of ten Pagodas each and send the same.

Poonamallee,
23rd Feb. of Fasli 1208.

(Signed) JOHN HODGSON,
Collector.

*** சக்தியென்னு மாயுதத்தைத் துதிக்கும் சுலோகமிது. ஷாட்குண்ய பரிபூர்ணனுக்கு பகவானென்று பெயர். षण्णां भग इतीरणा என்னக்கடவதிறே. ஜ்ஞானம், சக்தி பலம், ஐச்வர்யம், வீரியம், தேஜஸ்ஸு என்கிற ஆறு குணங்களுடைமைபற்றி எம்பெருமானைப் பகவானென்கிறது. இந்த ஆறு திருக்குணங்களும் ஸ்ருஷ்டிகார்யத்திற்கு இன்றியமையாதவை. அவற்றுள் அகடித கடனாஸாமர்த்தியமாகிற சக்தியென்னும் குணம் மிக முக்கியமானது. இந்த ஷாட்குணங்களுக்கும் பட்டர் ஸ்ரீ ரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் லக்ஷணமருளிச் செய்கிறார். "ஸா தே சக்திஸ் ஸுகரயிதாச் சேதி வேலாம் விலங்க்ய" என்றதை இங்கே அநுஸந்திப்பது. இது ஸுகரம் இது துஷ்கரம் என்கிற வாசியின்றிக்கே எதையும் நிர்வஹிக்கக்கூடிய ஆற்றலே சக்தியெனப்படும். அந்த சக்திதான் இந்த ஸுதர்சநாழ்வானுடைய சக்திப்படையாகப் பரிணமித்ததோ? அன்றி இந்த சக்திப்படைதான் அந்த சக்தி குணமாகப் பரிணமித்ததோ! என்று உல்லேகிக்கலாம்படியுள்ளது. இந்தகைய பெருமை வாய்ந்த சக்திப்படையானது உங்களுக்கு அசக்தியைப் போக்கி சக்தியை வளர்க்கக் கடவதென்றதாயிற்று. அநுஷ்டேய க்ருத்யங்களில் அசக்தி தொலையவேணுமென்கை. அக்ருத்யங்களில் அசக்தியும், க்ருத்யங்களில் சக்தியும் ஆவச்யகமென்க. ... (9)

तारत्वं यस्य संस्थाने शब्दे च परिदृश्यते । प्रभोः प्रहरणेन्द्रस्य पाञ्चजन्यः स पातु वः ॥ १० ॥

தாரத்வம் யஸ்ய ஸம்ஸ்தாநே சப்தே ச பரித்ருச்யதே
ப்ரபோ: ப்ரஹரணேந்த்ரஸ்ய பாஞ்சஜந்ய: ஸ பாது வ: (10)

யஸ்ய ஸம்ஸ்தாநே சப்தே ச தாரத்வம் பரித்ருச்யதே, ப்ரஹரணேந்த்ரஸ்ய ப்ரபோ: ஸ: பாஞ்சஜந்ய வ: பாது.

யாதொரு சங்கத்தினுடைய உருவத்திலும் ஒலியிலும் தாரத்வம் காணப்படுகிறதோ, ஹேதிராஜனுடைய அந்த பாஞ்சஜந்யமானது உங்களைக் காத்தருளக்கடவது.

*** ஸ்ரீ பாஞ்சஜந்யமென்னு மாயுதம் உங்களுக்கு க்ஷேமங்கரமாக வேணுமென்கிறாரிதில். [தாரத்வம் பரித்ருச்யதே] இங்கு சிலேடையுள்ளது. தாரமென்று பிரணவத்திற்கும் உச்சத்வனிக்கும் பெயர். ஸம்ஸ்தாநே தாரத்வமென்றபோது ஸ்ரீ பாஞ்சஜந்யம் ப்ரணவாகார முடையதென்னுமிடம் சொல்லிற்றாகிறது. சப்தே தாரத்வமென்றபோது (यस्य नादेन दैत्यानां बलहानिरजायत) ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்" என்றும் "யஸ்ய நாதேந தைத்யாநாம் பலஹாநிர ஜாயத" என்றும் சொல்லுகிறபடியே எதிரிகள் குடல் குழம்புமாறு செய்யும் பெரு முழக்கம் சொல்லப்படுகிறது. [ஸ பாஞ்சஜந்ய: வ: பாது] "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலி—தலைப்பெய்வதென்று கொலோ! "என்று ஆண்டாள் கோலினது உங்களுக்குப் பலிக்கக்கடவதென்றதாயிற்று. ... ... (10)

यं सात्त्विकमहङ्कारम् आमनन्त्यक्षसाधकम् । अव्याद् वश्चक्ररूपस्य तद्धनुः शार्ङ्गधन्वनः ॥ ११ ॥

யம் ஸாத்விகமஹங்காரம் ஆமநந்த்யக்ஷ ஸாதகம்
அவ்யாத் வச் சக்ர ரூபஸ்ய தத்தநு: சார்ங்க தந்வந: (11)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யத் அக்ஷஸாதகம் ஸாத்விகம் அஹங்காரம் ஆமநந்தி, சக்ர ரூபஸ்ய சார்ங்கதந்வந: தத் தநு: வ; அவ்யாத்.	யாதொரு தநுஸ்ஸை இந்திரியங்களுக்குக் காரணமான ஸாத்விகாஹங்காரமாகச் சொல்லுகின்றார்களோ, திருவாழியாழ்வானுகிற பரமபுருஷனுடைய அந்த வில் உங்களைக் காத்திடுக.

*** சார்ங்கமென்னும் வில்லாண்ட பெருமாளே திருவாழியாழ்வானக விளங்கி அவனுடைய திருக்கையிலும் சார்ங்கவில் திகழாநின்றதாயிற்று; அதனுல் நீங்கள் ரக்ஷைபெறுவீராக வென்கிருரிதில். ஆமநந்தி என்னும் க்ரியாபதத்திற்கு பராசராதிமஹர்ஷய: என்னும் கர்த்ரு பதம் வருவித்துக் கொள்ளவேண்டும். பராசரபகவான் ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலே *பூதாதிமிந்த்ரியாதிஞ் ச த்விதா ஹங்காரமீச்வர:, பிபர்த்தி சங்கரூபேண சார்ங்கரூபேண ச ஸ்திதம்:* என்றும், *யாநீந்த்ரியாண்ய சேஷாணி புத்திகர்மாத்மகாநி வை, சரரூபாண்ய சேஷாணி தாநி தத்தே ஜநார்தந:* என்றும் சொல்லிற்றிறே. இதில் பூதாதியென்று தாமஸாஹங்காரமும், இந்த்ரியாதியென்று ஸாத்விகாஹங்காரமும் சொல்லப்படுகிறது. இவ்விரண்டும் அடைவே சங்கரூபமாகவும் சார்ங்கரூபமாகவு மிருப்பதாகச் சொல்லிற்று. ஆக, இந்திரிய காரணபூதமாயும் ஸாத்விகாஹங்கார ரூபமாயு மிருக்கிற சார்ங்கவில் உங்களைக் காக்கக்கடவதென்றாராயிற்று. ... ... (11)

आयुधेन्द्रेण येनैव विश्वसर्गो विरच्यते । स वः सौदर्शनः कुर्यात् पाशः पाशविमोचनम् ॥ १२ ॥

ஆயுதேந்த்ரேண யேநைவ விச்வஸர்கோ விரச்யதே
ஸ வ: ஸௌதர்சந: குர்யாத் பாச: பாச விமோசநம் (12)

ஆயுதேந்த்ரேண யேந ஏவ பாசேந விச்வஸர்க்க: விரச்யதே, ஸ: ஸௌதர்சந: பாச: வ: பாசவிமோசநம் குர்யாத்.	ஆயுதச் ரேஷ்டமான எந்த பாசத்தினுலேயே விச்வஸ்ருஷ்டியானது பண்ணப்படுகிறதோ அந்த ஸுதர்சந பாசாயுதமானது உங்களுக்குப் பாச விமோசனத்தைச் செய்யக்கடவது.

*** திருவாழியாழ்வானுடைய திவ்யாயுதங்களில் ஒன்றான பாசமானது உங்களுக்கு ஸம்ஸாரபந்த விமோசனத்தைச் செய்யக்கடவதென்று ஆசாஸித்தருளுகிறாரிதில். முதல் பாதத்தில் "யேந ஆயுதேந்த்ரேண" என்று ஸமாநாதிகரணமாக அந்வயிக்கும் வழி தவிர வ்யதிகரணாந்வயமும் கொள்ளத்தகாலது. 'ஆயுதேந்த்ரேண' என்பது கர்த்தரி த்ருதீயையாய், 'யேந' என்பது கரணேத்ருதியையாய், ஆயுதச்ரேஷ்டனான திருவாழியாழ்வான் யாதொரு பாசத்தைக் கருவியாகக் கொண்டு ஜகத்ஸர்க்கம் பண்ணுகிறானே—என்றதாகக் கடவது. ஸமாநாதிகரணாந்வயம் கொள்ளுமளவில் ஆயுதச்ரேஷ்டமான பாசமே ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுவதாகச் சொல்லிற்றாகும். வ்யதிகரணாந்வயம் கொள்ளுமளவில் ஸுதர்சநாழ்வானே ஜகத்ஸர்க்கம் பண்ணுவதாகவும், அதற்குப் பாசாயுதம் உபகரணமாக நிற்பதாகவும் சொல்லிற்றாகும். ஸுதர்சநாஷ்டகத்தில் ஐந்தாம் சுலோகத்தில் "अमितविश्वक्रियामय அமிதவிச்வக்ரியாமய!" என்கிற ஸம்போதனம் நோக்கத்தக்கது. திருவாழியாழ்வான் பகவத்ஸங்கல்ப பர்யாய பூதனாகையாலே, ஸங்கல்பத்தினுல் ஜகத்ஸர்க்கம் நடைபெறுகின்றதென்றபோதே திருவாழியாழ்வானுல் அது நடைபெறுகின்றதென்றதாகத் தட்டில்லையே. அவயவியின் காரியத்தை அவயவத்திலே ஏற்றிச் சொல்லவும் குறையில்லையே. [ஸ: ஸௌதர்சந: பாச: வ: பாசவிமோசநம் குர்யாத்.] *आशापाशशतैर्बद्धाः — ஆசாபாச சதைர் பத்தா:* என்று கீதையிற் சொன்னபடியே நாம் ஆசாபாச சத பத்தர்களாயிறே யிருப்பது; இந்த் பந்தத்தினின்றும் நாம் விடுபட்டொழிய வேணுமென்று ஆசாஸித்தபடி. ... (12)

विहारो येन देवस्य विश्व क्षेत्र कृषीवलः । व्यज्यते तेन सीरेण नासीर विजयोऽस्तु वः ॥ १३ ॥

விஹாரோ யேந தேவஸ்ய விச்வ க்ஷேத்ர க்ருஷீவல:
வ்யஜ்யதே தேந ஸீரேண நாஸீர விஜயோஸ்துவ: (13)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யேந தேவஸ்ய விச்வ க்ஷேத்ர க்ருஷீவல: விஹார; வ்யஜ்யதே, தேந ஸீரேண வ: நாஸீர விஜய: அஸ்து.	யாதொரு ஹலாயுதத்தினுலே பத்தியுழவனுன பகவானுடைய ஸகல க்ஷேத்ரங்களையும் பயிரிடும் விஹாரம் விளங்குகின்றதோ. அந்த ஹலாயுதத்தினல் உங்களுக்கு சேனைத் தலையில் வெற்றியுண்டாகக் கடவது.

*** ஹலமென்னும் ஆயுத விசேஷத்தை [அதாவது கலப்பையை] உபச்லோகிக்கிரு ரிதில். திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில் "வித்துமிடவேண்டுங் கொலோவிடையடர்த்த பத்தியுழவன் பழம்புனத்து" என்றருளிச் செய்ததை யடியொற்றி பட்டர் ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்தில் உத்தர சதகத்திலே தசாவதார ஸ்துதி ப்ரகரணத்தில் நம்பி மூத்த பிரானுக்காக இட்டருளின சுலோகத்தில் *तं त्वां क्षेमकृषीवलं हलधरं रङ्गेश! भक्तास्महे—தம் த்வாம் க்ஷேமக்ருஷீவலம் ஹலதரம் ரங்கேச! பக்தாஸ்மஹே* என்றருளிச் செய்தார். அதனை யடியொற்றி இந்த சுலோக மருளிச்செய்கிறபடி. எம்பெருமான் விச்வக்ஷேத்ர க்ருஷீவலன்; ஆசார்ய ஹ்ருதயத்தில் "பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெருஞ்செய்" என்று தொடங்கியுள்ள மிகப் பெரிய சூர்ணையின் பொருள் இங்கே யுணரத்தக்கது. "உழுவதோர் நாஞ்சில்கொண்டு பெருக முயலும் பத்தி யுழவன் க்ருஷிபலமிறே" என்று அந்த சூர்ணை தலைக்கட்டுகிறது. க்ருஷிக்குக் கலப்பை இன்றியமையாதது. எம்பெருமான் செய்தருளும் யோகக்ஷேம க்ருஷிக்கும் அது வேண்டியிராநின்றது போலும். [தேவஸ்ய] திவு தாதுவில் நின்று தோன்றிய பதம்; அந்த தாதுவுக்குள்ள பத்துப் பொருள்களில் க்ரீடை யென்பதே முதற்பொருள். ஆகவே தேவஸ்ய என்றது க்ரீடாபரஸ்ய என்றபடி. இவன்தானே விச்வக்ஷேத்ர க்ருஷீவலனுயிருக்க, இந்த க்ருஷீவலத்வத்தை விஹாரத்தின்மேல் அதிதேசித்தது கவி சமத்காரம். "ஸீரேண நாஸீரவிஜய:" என்றது சப்தாநுப்ராஸம். "सेनामुखं तु नासीरम्" इति कोशः ॥ (13)

आयुधानामहं वज्रं इत्यगीयत यः स वः । अव्याद्देतीश वज्रोऽसावदधीच्यस्थि संभवः ॥ १४ ॥

ஆயுதாநாமஹம் வஜ்ரம் இத்யகீயத ய: ஸ வ:
அவ்யாத்தேதீச வஜ்ரோஸாவததீச்யஸ்தீ ஸம்பவ: (14)

ய: ஆயுதாநாம் அஹம் வஜ்ரம் இதி அகீயத; அததீச்யஸ்தி ஸம்பவ: அஸௌ ஹேதீச வஜ்ர: வ: அவ்யாத்.	யாதொரு வஜ்ராயுதமானது 'ஆயுதங்களுக்குள்ளே நான் வஜ்ராயுதமாகிறேன்' என்று கீதாசார்யனுலே பேசப்பட்டதோ, ததிசி முனிவனுடைய அஸ்தியில் நின்றும் பிறவாததான அந்த ஹேதிராஜனுடைய வஜ்ராயுதமானது உங்களைக் காத்தருள்க.

*** வஜ்ராயுதத்தை உபச்லோகிக்கும் சுலோகமிது. பகவத்கீதையில் பத்தாவது அத்யாயம் விபூத்யத்யாயமென்று ப்ரஸித்தமானது. அதில் கீதாசார்யன் பருப்பருத்தவற்றையெல்லாம் தானுகச் சொல்லிவருமிடத்து (10-28) *ஆயுதாநாமஹம் வஜ்ரம் * என்று பணித்தனுதலால் ஆயுதங்களுக்குள்ளே வஜ்ரம் மிகச் சிறந்ததென்னுமிடம் ஸ்பஷ்டமாகிறது; இவ்விடத்தில் இதை யெடுத்துக் காட்டுவதே போதும் இதன் சிறப்புக்கென்று திருவுள்ளம்பற்றினர் ஆசிரியர். கீதாபாஷ்யத்தின் அவ்விடத்துத் தாத்பர்ய சந்திரிகையில் "आयुधानामिति अर्वाचीनायुधपरम्! सुदर्शनाद्यपेक्षया दधीचेरस्थिसंभवस्य वज्रस्यापि निकृष्टत्वात्." என்று ஸ்வாமி தாமே யருளிச்செய்திருக்கையாலே இங்கு 'ததீச்யஸ்தி ஸமுத்பவ:' என்று காணப்படும் பாடம் ஒவ்வாதென்றும், "அததீச்யஸ்தி ஸம்பவ:" என்கிறபாடமே ஆசிரியர் திருவாய் மலர்ந்தருளியதென்றும் அறுதியிடலாகும். தேவேந்திரனுடைய வஜ்ராயுதமே ததீசியின் எலும்பினின்று தோன்றியது; அவ்வண்ணமாக ச்ருதீதிஹாஸபுராணங்களிற் கூறியிருப்பதுமுண்டு; அதில் வ்யாவ்ருத்தியையே இங்கு அருளிச்செய்தபடி. (14)

विश्व संहृति शक्तिर्या विश्रुता बुद्धि रूपिणी । सा वः सौदर्शनी भूयात् गद प्रशमनी गदा ॥ १५ ॥

விச்வ ஸம்ஹ்ருதி சக்திர்யா விச்ருதா புத்தி ரூபிணீ
ஸா வ: ஸௌதர்சநீ பூயாத் கத ப்ரசமநீ கதா (15)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

புத்திரூபிணீ யா விச்வஸம்ஹ்ருதிசக்தி: விச்ருதா, ஸௌதர்சநீ ஸா கதா வ: கதப்ரசமநீ பூயாத்.	புத்திக்கு அதிஷ்டாந தேவதையானதுபற்றி புத்திஸ்வரூபமாயிருக்கின்ற யாதொரு கதையானது எம்பெருமானுடைய லோகஸம்ஹாரசக்தியாக ப்ரஸித்தி பெற்றிருக்கின்றதோ, திருவாழியாழ்வானுடையதான அந்த கதையானது உங்களுடைய நோய்களைத் தீர்க்கவல்லதாக ஆகக்கடவது.

*** ஹேதிராஜனுடைய கதாயுதத்தை உடச்லோகிக்கிருரிதில். ''புத்திரூபிணீ'' என்றது மஹத்தத்வரூபிணி என்றபடி. ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் ''बुद्धिरास्ते गदारूपेण माधवे- புத்திரத்யாஸ்தே கதாரூபேண மாதவே'' என்ற விடத்தில் ''புத்தி:—மஹத்தத்வம்'' என்று எங்களாழ்வான்வியாக்கியானம். அதை யடியொற்றியே இங்கு புத்திரூபிணீ என்றருளிச் செய்தது. அதுதான் விச்வப்ரபஞ்ச ஸம்ஹார சக்திரூபமாயிருக்கும். அத்தகைய பெருமை வாய்ந்த கதாயுதமானது [वः गदप्रशमनी भूयात्] கதமென்று வியாதிக்கு வாசகம். *கொன்றுயிருண்ணும் விசாதி பகை பசிதீயன வெல்லாவற்றையும் கடிந்திடுகவென்கை. 'பயப்ரசமநீ' என்கிறபாடம் நூதனம். ... ... (15)

यात्यतिक्षोद शालित्वं मुसल्या येन तेन वः । हतीशमुसलेनाशु सिध्यतां मोह मौसलम् ॥ १६ ॥

யாத்யதிக்ஷோத சாலித்வம் முஸலோ யேந தேந வ:
ஹேதீச முஸலேநாசு பித்யதாம் மோஹ மௌஸலம் (16)

யேந முஸல்யா: அதிக்ஷோத சாலித்வம் யாந்தி, தேந ஹேதீச முஸலேந வ: மோஹ மௌஸலம் ஆசு பித்யதாம்.	யாதொரு முஸலாயுதத்தினாலே முஸலஹஸ்தஸ்யர்கள் பொடி பொடியாயொழிகின்றனரோ, அந்த ஸுதர்சந முஸலப்படையினால் உங்களுடைய மோஹமாகிற முஸலயுத்தமானது விரைவில் தொலையட்டும்.

*** திருவாழியாழ்வானுடைய உலக்கையென்னும் படையை வருணிக்குமிந்த சுலோகத்தில் இரண்டு மூன்று வகையான பாட பேதங்கள் காண்கின்றன. அர்த்த நிர்வாஹங்களும் அப்படியே. முஸலனென்று ஓர் அஸுரனிருந்ததாகவும் அவன் முஸலப்படையினால் பொடிபட்டொழிந்ததாகவும், அதை இங்கு ஸாதிப்பதாகவும் சிலர் சொல்லுவர்கள். அப்போது 'யாதி...முஸல:' என்று பாடம். ஆனால் நடந்ததொரு கதையைச் சொல்லுவதாகக் கொள்ளில் யாதி என்கிற வர்த்தமாநக்ரியை ஸ்வரஸமாகாது. முஸல: என்பதற்கு உலக்கையென்றே பொருள்கொண்டு, போர்க்களத்தில் அவ்வோ வீர சூரர்கள் பிரயோகிக்கும் முஸலமானது இந்த முஸலத்தினால் பொடிபட்டொழிகிறதென்று சிலர் சொல்லுவர்கள். ''विष्यो विषेण यो घघ्यो मुसल्यो मुसलेन यः'' என்கிற அமரகோசத்தின்படி முஸல்யபத மொன்றுண்டு; முஸலத்தாலே வதம் செய்யத் தகுந்தவர்கள் முஸல்யர்கள். அதனால் முஸல்யா: என்று பன்மையாகப் பாடங்கொண்டு அதற்குச் சேர க்ரியாபதத்தையும் யாந்தி என்று பன்மையாகக் கொள்ளுவர்கள். இப்பாடம் பொருத்தமாக இருக்கக்கூடும். ... (16)

शूलि दृष्ट मनोर्वाच्यो येन शूलयति द्विषः । भवतां तेन भवतात् त्रिशूलेन विशूलता ॥ १७ ॥

சூலி த்ருஷ்ட மநோர்வாச்யோ யேந சூலயதி த்விஷ:
பவதாம் தேந பவதாத் த்ரிசூலேந விசூலதா (17)

சூலித்ருஷ்டமநோ: வாச்ய: யேந த்விஷ: சூலயதி, தேந த்ரிசூலேந பவதாம் விசூலதா பவதாத்.	சிவனால் காணப்பட்ட மந்த்ரத்திற்குப் பொருளாயிருக்கின்ற திருவாழியாழ்வான் யாதொரு சூலாயுதத்தினால் பகைவர்களை வியாதி பிடித்தவர்களாக ஆக்குகின்றாரோ, அந்தத்ரிசூலாயுதத்தினாலே உங்களுக்குப் பிணியில்லாமையுண்டாகக் கடவது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

*** சூலப்படையை உபச்லோகிப்பதிந்த சுலோகம். சூலத்தை த்ரிசூலமென்றும் வழங்குவதுண்டு. [சூலித்ருஷ்டமநோ: வாச்ய:] சூலியென்று சிவனுக்குப் பெயரென்பது ப்ரஸித்தம். அவன்றனக்கே அஹிர்ப்புத்ந்யனென்றும் ஒரு பெயருண்டு. அவனால் காணப்பட்ட மந்த்ரம் ஸுதர்சந மந்த்ரம். அதற்குப் பொருளாயிருப்பவர் திருவாழியாழ்வான். அவர் தம்முடைய ஆயுதங்களில் அங்யதமமான சூலாயுதத்தைக்கொண்டு சத்ருக்களை அபிபவிக்கிறார். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த சூலப்படை உங்களுக்குப் பிணியொழித்துச் சுகமளிக்கக் கடவதென்றாராயிற்று. ... ... (17)

अस्त्रग्रामस्य कृत्स्नस्य प्रसूतिं यं प्रचक्षते । सोऽव्यात् सुदर्शनो विश्वम् आयुधैः षोडशायुधः ॥ १८ ॥

அஸ்த்ர க்ராமஸ்ய க்ருத்ஸ்நஸ்ய ப்ரஸூதிம் யம் ப்ரசக்ஷதே (18)
ஸோவ்யாத் ஸுதர்சநோ விச்வம் ஆயுதை: ஷோடசாயுத:

க்ருத்ஸ்நஸ்ய அஸ்த்ர க்ராமஸ்ய யம் ப்ரஸூதிம் ப்ரசக்ஷதே, ஷோடசாயுத: ஸ: ஸுதர்சந: ஆயுதை: விச்வம் அவ்யாத்	ஸமஸ்தமான ஆயுத மண்டலங்களுக்கும் யாவரொரு திருவாழியாழ்வானை ஆகரமாகச்சொல்லுகிறார்களோ, பதினாறு படைகளையுடையரான அத் திருவாழியாழ்வான் உலகத்தைக் காத்தருள்க.

*** இச் சுலோகத்தோடு திருவாழியாழ்வானுடைய பதினாறு திவ்யாயுதங்களையும் துதித்துத் தலைக் கட்டினாராயிற்று. அவயவஸ்துதியை நிகமித்து அவயவிஸ்துதியிலே இழிகிறாரிதில். க்ருத்ஸ்நஸ்ய அஸ்த்ரக்ராமஸ்ய என்றது ப்ரஸ்துதங்களான ஷோடசாயுதங்களை மட்டும் விவக்ஷித்தன்று; உலகிலும் நூல்களிலும் எத்தனை அஸ்த்ரங்கள் வழங்கப்படுகின்றனவோ அவையெல்லாவற்றையும் விவக்ஷித்தென்க. ஸர்வாஸ்த்ரங்களும் திருவாழியாழ்வானுடைய ப்ரஸூதிகள் [ஸந்தானங்கள்] என்னத் தட்டில்லை. அவரை ப்ரக்ருதத்தில் ஷோடசாயுத விசிஷ்டராகக்கொண்டு ஒவ்வொரு சுலோகத்தில் ஒவ்வோராயுதத்தைப் புகழ்வதாக வைத்து இட்டருளினபடி. அந்தத் திருவாழியாழ்வான் விச்வ ப்ரபஞ்சரக்ஷகராகக் கடவரென்கை. திருவிருத்தத்தில் " அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும், இருளார் வினை கெடச் செங்கோல் நடாவுதிர் " என்றருளிச்செய்த பாசுரம் இங்கே அநுஸந்தேயம். (18)

श्रीमद्वेङ्कटनाथेन श्रेयसे भूयसे सताम् । कृतेयमायुधेन्द्रस्य षोडशायुध संस्तुतिः ॥ १९ ॥

ஸ்ரீமத்வேங்கடநாதேந ச்ரேயஸே பூயஸே ஸதாம்
க்ருதேயமாயுதேந்த்ரஸ்ய ஷோட சாயுத ஸம்ஸ்துதி: (19)

ஆயுதேந்த்ரஸ்ய இயம் ஷோடசாயுதஸம்ஸ்துதி: ஸதாம் பூயஸே ச்ரேயஸே ஸ்ரீமத் வேங்கடநாதேந க்ருதா.	திவ்யாயுதத் தலைவரான திருவாழியாழ்வானுடைய ஷோடசாயுதங்களைப் பற்றின இந்த ஸ்துதியானது ஸத்துக்களுக்குச் சிறந்த நன்மையின் பொருட்டு ஸ்ரீமத் வேங்கடநாதார்யரால் அருளிச்செய்யப்பட்டது.

*** ஒவ்வொரு ஸ்தோத்ரத்தின் அவஸாநத்திலும் ஸ்வாமி பலச்ருதியாகவொரு சுலோகமருளிச் செய்வதுண்டே. அதுதானிது. ஸ்ரீமத் வேங்கடநாதேந க்ருதா இயம் ஸ்துதி: ஸதாம் பூயஸே ச்ரேயஸே (ஸ்யாத்) என்று அங்வயித்துப் பலனுரைப்பதாகவே கொள்வது மிகப்பொருந்தும். ... ... (19)

काञ्चीवादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यसंकलिता ।

षोडशहेतिस्तुतिवरविवृतिस्सैषा विभातु बुधहृदये ॥

ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசாரியரியற்றிய உரை முற்றிற்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

श्रीहस्तिशैलशिखरोज्ज्वलपारिजाताय नमः ।

अस्मद्गुरुपरम्पराभ्यो नमः ।

श्रीमन्निगमान्तमहागुरुवरकृतिषु

॥ दयाशतकम् ॥

श्रीकाञ्चीप्रतिवादिभयङ्कर—अण्णङ्गराचार्यविरचितया सहृदयहृदयोल्लासिनीव्याख्यया सनाथम् ॥

ஸ்ரீமந்நிகமாந்த மஹாசார்யர் அருளிச் செய்த

தயா சதகம்

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய

ஸஹ்ருதய ஹ்ருதயோல்லாஸிநீ வியாக்கியானத்துடன் கூடியது

श्रीशैलेशरमापतिदयैकपात्रे तदीयघण्टांशे ।
रचितदयाशतककृतौ रमते हृदयं मदीयमाचार्ये ॥ १ ॥
व्याख्यानवाचस्पतिरित्यनन्यसामान्यमाप्तं विरुदं महद्भ्यः ।
येनैष दासः प्रतिवादिभीकृदण्णङ्गरार्यस्सुकृती बुभूषुः ॥ २ ॥
वेङ्कटनाथमहागुरुदयाविशेषध्वजं दयाशतकम् ।
सहृदयहृदयोल्लासिन्यभिधव्याख्यासनाथमातनुते ॥ ३ ॥
कालत्रयेऽपि कतिचित् स्तोत्रस्यैतस्य विवृतिकर्तारः ।
कामं भवन्तु, सैषा विवृतिर्नियतं सतां वतंसस्स्यात् ॥ ४ ॥
देशिकहृदयाभिमतान् स्वादूनर्थान् यथायथं साधु ।
विशदीकृत्य विपश्चिद्धृदयं चिनुयां. कृती च भूयासम् ॥ ५ ॥

(மேலேயுள்ள ஐந்து சுலோகங்களின் கருத்து)

1. திருமலைமால் திருவருளுக்குக் கொள்கலமானவரும், அத்திருமாலின் திருமணியின் அம்சமாகத் தோன்றினவரும், தயாசதகமருளிச்செய்தவருமான ஆசிரியர் என்னுள்ள முகக்க நின்றார்.

2, 3. வியாக்யான வாசஸ்பதி யென்று மஹான்களால் விருதளிக்கப்பெற்ற வடியேன் விலக்ஷணபாக்யசாலியாக வேண்டி, ஸ்ரீ வேங்கடநாதனென திருவேங்கட முடையானுடையவும் அத்திருநாமங்கொண்ட மஹாசார்யனுடையவும் திருவருளுக்கு ப்ரகாசகமான தயாசதகத்திற்கு ஸஹ்ருதய ஹ்ருதயோல்லாஸினியென்னும் வியாக்கியானமிடுகிறேன்.

4. இந்த தயாசதகத்திற்கு ஏற்கெனவே சிலர் உரையிட்டிருக்கலாம்; இப்போதும் சிலர் உரை செய்துகொண்டிருக்கலாம்; மேல்வருங்காலத்திலும் சிலர் உரை யெழுதலாம். எனினும், அடியேனுடைய இந்த வியாக்கியானமொன்றே வித்வான்கள் தலைதுலுக்கிக் கொண்டாட நிற்கும்.

5. ஆசார்ய ஸார்வபௌமரான ஸ்வாமி திருவுள்ள முகந்தருளின இனிய நற்பொருள்களை உள்ளபடி விளக்கி வித்வான்களின் உள்ளத்தை உகப்பிப்பதோடு அடியேனும் க்ருதக்ருத்யனுவேன்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation Kolkata. Digitization: eGangotri.

கவிதார்க்கிக கேஸரியான நம் ஆசார்ய ஸார்வபௌமன் அருளிய ஸ்துதி நூல்கள் ஒவ்வொன்றும் ஸஹ்ருதய ஹ்ருதயங்கமமென்பது ஸகல ஸஹ்ருதய ஹ்ருதயைகஸாக்ஷிகம். ந்யாஸதசக மென்கிற லகுஸ்துதி முதலாகப் பாதுகாஸஹஸ்ரமென்கிற ப்ருஹத்தரஸ்துதியீறாக எந்தஸ்துதியை யெடுத்துக்கொண்டாலும் *எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே யென்னும்படியாக வுள்ளதேயன்றி ஸர்வோத்தமமான ஸ்துதிநூல் இன்னதுதானென்று அறுதியிடப் போகாது. *அதுவிதுவுது என்னலாவனவல்ல என்னையுன் செய்கை நைவிக்கும்* என்று நம்மாழ்வாரும், * इङ्गितं निमिषितं च तावकं रम्यमद्भुतमतिप्रियङ्करम्— இங்கிதம் நிமிஷிதஞ்ச தாவகம் ரம்யமத்புத மதிப்ரியங்கரம்* என்று கூரத் தாழ்வானு மருளிச்செய்த கணக்கிலே 'ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்தி' என்னுமதொன்றே அடியேன் போல்வார் உள்ளமுருகப் பர்யாப்தமாகும். ஆயினும், பாதுகா ஸஹஸ்ரமும் தயாசதகமும் தனிப்பெருமை வாய்ந்தவையென்று அறுதியிடத்தகும். ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனையோ ஸ்ரீ ரங்கநாதனையோ திருவேங்கட முடையானையோ உத்தேசித்து நூறாயிரம் சுலோகங்களும் இயற்றவியலும்; அவயவைகதேசமான பாதுகையைக் குறித்து ஆயிரம் சுலோகங்களும், பல திருக்குணங்களுள் ஒன்றான தயையைமட்டும் குறித்து நூறு ச்லோகங்களும் இயற்றுவது அதிமாநுஷ க்ருத்யமென்றே இயம்பத்தகும். இவ்விரண்டு ஸ்துதிகளிலும் ஸ்வாமியின் மேதாவிலாஸமும் ப்ரதிபாப்ரகர்ஷமும் ப்ரஸரித்திருக்கும் நுட்பத்தைச் சிறிது எடுத்துரைத்து ரஸிகர்களை ரஞ்ஜிப்பிக்க விரும்புகிறேனடியேன்.

முந்துறமுன்னம் பாதுகாஸஹஸ்ரத்தில் இரண்டு ச்லோகங்களைமட்டும் எடுத்துக்கொள்ளுகிறேன். ஸ்ரீபரதாழ்வானுடைய பிரார்த்தனையை ஒருவாறு நிறைவேற்றியருளக் கருதிய பெருமாள் *மரவடியைத் தம்பிக்கு வான்பணயம் வைத்துப்போய்* என்றும் *படியில் குணத்துப் பரத நம்பிக்கு அன்றடி நிலையீந்தான்* என்றும் *பரதனுக்குப் பாதுகமு மரசுமீந்து* என்றும் சொல்லுகிறபடியே தாம் திருவுள்ளமிரங்கி ஸ்ரீபாதுகைகளைத் தந்தருளினதாகவும் பரதனுடைய வேண்டுகோளுக்கிணங்கித் திருவயோத்திக்கு மீண்டருளவில்லையென்பதாகவும் இதிஹாஸமுள்ளது. அதனை வெகு சமத்காரமாக வருளிச்செய்கிறார் ஸ்வாமி. பாதுகையானது முன்னம் பெருமாளுடைய திருவடிகளிலே சில மேன்மைகளைக் கண்டு அநுராகங்கொண்டு அவற்றிலே ப்ராவண்யம் பூண்டிருந்ததாகவும், பின்னை அத்திருவடிகளிலே குற்றங்குறை கண்டு அந்தப் பாதுகை, குற்றமுற்ற இத்திருவடியோட்டைச் சேர்த்தி நமக்கு வேண்டாவென்று வெறுத்து விலகியதாகவும் ஒரு விந்யாஸம் செய்தருளுகிறார். பாதுகை திருவடிகளிலே அநுராகங் கொண்டமையைக் கூறுகின்ற சுலோகமும், வெறுப்புக்கொண்டமையைக் கூறுகின்ற சுலோகமும் ஒரே ஸ்தலத்தில் இல்லை. அது வொருபத்ததியிலும் இது வொருபத்ததியிலுமாக இடம்மாறியேயுள்ளது. ஸ்தலபேத மிருந்தாலும் இரண்டையும் சேரப்பிடித்து அநுபவிக்கவேணுமென்பது ஆசிரியரின் திருவுள்ளம். அப்படியே யநுபவிப்போமிங்கு.

பாதுகைக்குத் திருவடிகளில் அநுராக முண்டானமைக்கு ஹேது கூறுகின்ற ச்லோகமிது காணீர்;—

योषिद्भूतदृषन्त्यपोढशकटस्थेमानि वैमानिकस्रोतस्विन्युपलम्भनानि भसितोदञ्चत्परीक्षिन्ति च ।
दूत्यादिष्वपि दुर्वचानि पदयोः कृत्यानि मत्वेव यद्धत्ते तत्प्रणयं तदेव चरणत्राणं वृणे रङ्गिणः ॥ (३-२)

யோஷித்பூதத்ருஷந்தி அபோடசகடஸ்தேமாநி வைமாநிக
ஸ்ரோதஸ்விந்யுபலம்பநாநி பஸிதோதஞ்சத் பரீக்ஷிந்தி ச.
தூத்யாதிஷ்வபி துர்வசாநி பதயோ: க்ருத்யாநி மத்வேவ யத்
தத்தே தத்ப்ரணயம் ததேவ சரணத்ராணம் வ்ருணே ரங்கிண:.

(இதன் கருத்து வருமாறு.) இத் திருவடிகள் கல்லைப் பெண்ணுக்கியவை, சகடத்தைச் சாடியவை, கங்கைநீர் கான்றவை, கரியாய்ப்போன உத்தரையின் கருவை உய்யக் கொண்

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

டவை. பாண்டவர்களுக்காகத் தூது செல்லவும் துணியுமவை என்று இங்ஙனே சில காரியப் பெருமைகளைக் கணிசித்து பாதுகை இத் திருவடிகளோடு நேசங்கொண்டதாம். பிறகு வெறுப்புண்டாகி விட்டகன்றமைக்குக் காரணம் கூறும் சுலோகமுங் கேளீர்;—

भ्रातुरसहोदरप्रणयभञ्जनस्वैरिणा पदेन किमनेन मे वनमिहावनादिच्छता ।
इतीव परिहाय तन्निववृते स्वयं यत्पुरा पदत्रमिदमाद्रिये धृतजगत्त्रयं रङ्गिणः ॥ (५·२)

ப்ருசாதுரஸஹோதர ப்ரணயபஞ்ஜநஸ்வைரிணா
பதேந கிமநேந மே வநமிஹாவநாதிச்சதா·
இதீவ பரிஹாய தத் நிவவ்ருதே ஸ்வயம் யத் புரா
பதத்ரமிதமாத்ரியே த்ருதஜகத்த்ரயம் ரங்கிண:. (5-2.)

(இதன் கருத்தாவது) * (भ्रातुः) ப்ராதுச் சிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்த்தும் அர்ஹஸி* என்று துடித்துத் துவண்ட பரதாழ்வானுடைய கோரிக்கையை நிறைவேற்ற இல்லாமல் [அவன் பக்கலிலே அன்பு காட்டமாட்டாமல்] வனமேமேவிச் செல்லலுற்ற இத் திருவடியோட்டைச் சேர்த்தி நமக்கேதுக்கு? என்று வெறுத்துவிட்டுத் திரும்பியதாம் பாதுகை.

இவ்விரண்டு உக்தி விந்யாஸங்களிலும் சமத்காராதிசய முள்ளதென்னு மிடத்தில் ஐயமில்லை. ஆனால் சொன்ன சரித்திரங்களெல்லாம் பெருமாள் செய்தவையேயன்றி, தனிப்படத் திருவடி செய்தவையல்ல. கல்லைப் பெண்ணாக்கியவன் திருவடியினால் இராமபிரான். சகடம் சாடியவன் திருவடியினால் கண்ணபிரான்; மருமகன்றன் சந்ததியை உயிர்மீட்டவனும் திருவடியினால் கண்ணபிரான். கங்கைநீர் கான்றவர் திருவடியினின்று உலகளந்த பெருமாள். *கோதில் செங்கோல் குடைமன்னரிடைத் தூது சென்றவன் வாஸுதேவன். பித்ருவாக்ய பரிபாலன ச்ரத்தையினால் அயோத்திக்கு மீளகில்லேனென்று சொல்லி வனமே மேவலுற்றவர் பெருமாள். ஆக இந்தச் சரிதைகள் யாவும் எம்பெருமானை நோக்கி யுரைக்கத் தக்கவை. திருவடிகளுக்கு ஸ்வாதந்த்ர்யேண இவற்றில் ஒரு அந்வயமில்லை. முமுக்ஷுப்படியில் த்வயப்ரகரணத்தில் சரண சப்தார்த்த விவரணத்தில்—"பிராட்டியு மவனும்விடிலும் திருவடிகள் விடாது; திண்கழலாயிருக்கும்" என்று பிள்ளை லோகாசார்ய ரருளிச்செய்த சாயையிலே பகவத்க்ருத்யங்களைத் திருவடிகளின் மீதேற்றி யருளிச்செய்தவித்தனை.

இதுபோலவே இந்த தயாசதகந்தன்னிலும் பரமதயாளுவான எம்பெருமானுடைய செயல்களையே தயையின் மீதேற்றி யருளிச் செய்கிறபடி. இதற்கும் இரண்டு சுலோகங்களை மட்டும் இங்கெடுத்துக் காட்டுவோம்.

अचिदविशिष्टान्प्रलये जन्तूनवलोक्य जातनिर्वेदा ।
करणकलेवरयोगं वितरसि वृषशैलनाथकरुणे ! त्वम् ॥ १७ ॥

அசிதவிசிஷ்டாந் ப்ரலயே ஜந்தூநவலோக்ய ஜாதநிர்வேதா,
கரணகலேபரயோகம் விதரஸி வ்ருஷசைலநாத கருணே! த்வம். (17)

இதன் கருத்து;—பிரளயத்தில் அசித்தோடு வாசியற்றுக்கிடந்த பிராணிகளை நோக்கி நிர்வேதங்கொண்ட ஸ்ரீ வேங்கடநாத பகவத் கருணையே! அவர்களுக்கு நீ கரணகளேபரப்ரதானம் பண்ணுகிறாய் என்கை. இது பரமதயாளுவான எம்பெருமான் செய்தருளுகிற காரியமேயல்லது தயை தனித்துச் செய்யும் காரியமன்று. பட்டர் ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவத்தில்

"अचिदविशेषितान् प्रलयसीमनि संसरतः करणकलेवरैर्घटयितुं दयमानमनाः ।
वरद ! निजेच्छयैव परवानकरोः प्रकृतिं महदभिमानभूतकरणावलिकोरकिणीम् ॥"

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அசிதவிசேஷிதாந் ப்ரலயஸீமநி ஸம்ஸரத:
கரணகலேபரைர் கட்யிதும் தயமாந மநா:
வரத! நிஜேச்சயைவ பரவாநகரோ: ப்ரக்ருதிம்
மஹதபிமாநபூதகரணாவலி கோரகிணீம்.''

என்று விஸ்தரித் தருளிச்செய்த வர்த்தமே*அசிதவிசிஷ்டாந் ப்ரலயே*என்று உபாத்தமான (தயாசதக) ச்லோகத்தில் ஸங்க்ஷிப்தமாகவுள்ளது. அசித்கல்பர்களான ஸம்ஸாரிகளை நோக்கி நிர்வேதங்கொள்ளுவதும், அந்த நிர்வேதத்தாலே அவர்கள் (भोग) போகமோக்ஷ யோக்யராம்படி கரணகலேபரப்ரதானம் பண்ணுவதும் பகவத்க்ருத்யமேயாகும். பட்டருடைய ச்லோகத்தில் இங்ஙனேயாயிற்றுச் சொல்லிற்று. மூலப்ரமாணமும் "एवं संसृतिचक्रस्थे भ्राम्यमाणे स्वकर्मभिः। जीवे दुःखाकुले विष्णोः कृपा काऽप्युपजायते—ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:, ஜீவே து:க்காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே,'' என்றோதிற்று. ஸ்வயம் நிர்வேதரூபமான தயைக்கு நிர்வேதமுண்டானதாக இங்கு ஸ்வாமி யருளிச்செய்வதும், அதுதானே கரணகளேபரப்ரதானம் பண்ணுவதாக வருளிச் செய்வதும் பகவத்க்ருத்யத்தையே தயையின்மீ தேறிட்டுப் பணித்தபடி யென்று பாங்காக வறிய எளிது.

இங்ஙனே மற்றொரு ச்லோகமும் கேளீர்;—

निषादानां नेता कपिकुलपतिः काऽपि शबरी कुचेलः कुब्जा सा व्रजयुवतयो माल्यकृदिति।
अमीषां निम्नत्वं वृषगिरिपतेरुन्नतिमपि प्रभूतैस्स्रोतोभिः प्रसभमनुकम्पे! समयसि॥ (६५)

நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி சபரீ
குசேல: குப்ஜா ஸா வ்ரஜயுவதயோ மால்யக்ருதிதி;
அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகிரிபதே ருந்நதிமபி
ப்ரபூதைஸ் ஸ்ரோதோபி: ப்ரஸபமநுகம்பே! ஸமயஸி. (65)

இதன் கருத்து;—குஹப்பெருமாள் ஸுக்ரீவ மஹாராஜர் ச்ரமணி குசேலர் கூனி ஆய்ப்பெண்கள் மாலாகாரர் என்னுமிவர்களின் தாழ்மையையும் திருவேங்கடமுடையானுடைய மேன்மையையும் ஓ கருணையே! நீ உனது பெருவெள்ளத்தினுல் ஸமநிலைப் படுத்துகிறாய் என்கை. எம்பெருமானே! நீ இருகரையு மழிக்கும் க்ருபாப்ரவாஹ முடையவனாகையாலே தனது மேன்மையைப் பாராமல் குஹப்பெருமாள் முதலான தண்ணியரோடும் கலந்து பரிமாறினாய் என்கிற விவக்ஷிதம் இங்ஙனே பரிணமித்ததாயிற்று. தயாளுவின் காரியத்தைத் தயையின்மீதேற்றி யருளிச்செய்தாரென்கை. ஆகவே, தயாசதக மென்னும் வ்யபதேசம்போலே தயாளுசதக மென்னும் வ்யபதேசமும் இந்த ஸ்துதிதனக்கு ஏற்கும் இதிலுள்ள சப்தாலங்காரங்களும் அர்த்தாலங்காரங்களும் ஸ்வாமியின் திருவுள்ளத்தையும் உளுக்கியவையென்பது முடிவில் இரண்டு ஸூக்திவிந்யாஸங்களினுல் தெரியவரும். (107ல்) * पद्यानामिह . . . धूतचूतनयतः सांपातिकोऽयं क्रमः—பத்யாநாமிஹ யத்விதேய பகவத் ஸங்கல்ப கல்பத்ருமாத் ஜஞ்ஜாமாருத தூத சூதநயதஸ் ஸாம்பாதிகோயம் க்ரம:* என்றருளிச் செய்தார். ஒட்டுமாங்கனிகள் நிறைந்த மாம்பொழிலிலே பெருங்காற்றுப்புக, அக்கனிகள்தானே பலபலவென்று உதிருமாபோலே, கனிந்த பகவத்ஸங்கல்ப கல்ப வ்ருக்ஷத்திலே காருண்ய மாருதம் வீசினவாறெ உதிர்ந்த கனிகளாம் தயாசதக திவ்ய ச்லோகங்கள். இறுதி ச்லோகத்தைத் தலைக்கட்டுகிறார் * निष्प्रत्यूहवृषाद्रिनिर्झरझरत्कारच्छलेनोच्चलन् दीनालम्बनदिव्यदम्पतिदयाकल्लोलकोलाहलः—நிஷ்ப்ரத்யூஹவ்ருஷாத்ரி நிர்ஜ்ஜர ஜரத்காரச்சலேநோச்சலந் தீநாலம்பநதிவ்யதம்பதி தயா கல்லோல கோலாஹல:* என்று. *தெழிகுரலருவித் திருவேங்கடத்தில் தட்டுத் தடங்கவின்றியே பெருகு மருவியேபோன்று ஊற்று மாறாதே பெருகின தயாதரங்க கோலாஹலமே இந்த ஸ்துதிரூபமாகப் பரிணமித்ததென்னத் தட்டில்லை,

த—3

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கூரத்தாழ்வாருளிச் செய்த வரதராஜஸ்தவம் பத்து தசகங்கள் கொண்டதாய் ஒவ்
வொரு தசகமும் ஒவ்வொரு வ்ருத்தத்திலே அமைக்கப்பட்டுள்ளது போலவே இந்த சதகத்தி
லும் தசகந்தோறும் வ்ருத்தபேதம் அமைக்கப்பட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. வரத
ராஜஸ்தவத்தில் அநுஷ்டுப்வ்ருத்தம் அடியோடு கிடையாது. இதில் முதல் தசகம் முழுதும்
அநுஷ்டுப்பாக வமைந்தது. அந்த ஸ்தவத்தில் ஏழாவது தசகம் வ்ருத்த கதம்பகமாக அமைக்
கப்பட்டு அதில் "நரஸிம்ஹ தநுரகௌணீ" என்கிற ச்லோகமொன்றே ஆர்யா வ்ருத்தத்திலா
யிற்று. இதில் இரண்டாவது தசகம் முழுதும் ஆர்யையிலாயிற்று. இங்ஙனே சில வாசிகளுங்
காண்க. இதிலுள்ள வ்ருத்தங்களின் வகைகள் க்ரமேண அந்தந்த தசகங்களின் வியாக்கியா
னத்தில் விளக்கப்படும். முதல் தசகம்'அநுஷ்டுப்பென்று காட்டியாயிற்று.

முக்கியமாக ஒரு விஷயம் விஜ்ஞாபித்து இவ்வவதாரிகை தலைக்கட்டப்படுகிறது. அடி
யேன் ஸங்கிஹித காலத்தில் ஸ்ரீவரவரமுநி சதக வியாக்கியான லேகனத்தைத் தலைக்கட்டி
ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத் வ்யாக்க்யான லேகனத்திலே வ்யாப்ருதனாயிருந்தேன். தயாசதக
வியாக்க்யான விலேகனத்தைப்பற்றி ஸங்கல்ப முண்டாயிருந்ததில்லை. இது க்ரமேண ஸம
யாந்தரே ஆகலாமென்றிருந்தேன். இருக்கையில் ஒரு ஸ்வப்ந ஸம்பவம்;

उत्तिष्ठोत्तिष्ठ तल्पात् निशमय वचनं मामकं प्रेमसान्द्रं
केचिन्मत्सूक्तिरत्नेष्वनघमनुपधि स्वादुमर्थं ग्रहीतुम् ।
शक्त्या रिक्ता अनर्थान् विदधति विवृतिच्छद्मना, तत्त्वसह्यं
दुःखं मे वारयंस्त्वं लिखलिख शतकव्याक्रियां प्राज्ञभोग्याम् ॥

इति वेङ्कटनाथगुरूत्तमवाक् महिता मधुरा ललिताऽधिगता ।
अत एव दयाशतकस्य विवृत्यभिलेखनमाशु तनोमि मुदा ॥

(இவ்விரண்டு சுலோகங்களின் கருத்து.) அடியேன் ஒருநாள் நித்ரையிலிருக்கையில்
ஸ்வாமி கனவிலே காட்சி தந்தருளி 'துயில்விட்டெழுந்திரு; எனது அன்பார்ந்த வார்த்தை
யைக் கேள்; என்னுடைய ஸ்ரீ ஸூக்திகளில் மிகச் சிறந்த அர்த்தங்களை க்ரஹிக்கவில்லாத
சிலர் வியாக்கியான மெழுதுவதாகப் புகுந்து அபார்த்தங்களைப் பொழிந்து வைக்கின்றார்கள்.
என்னுடைய அஸஹ்யமான இந்த துக்கத்தைப் போக்கி மிகச் சிறந்த வியாக்கியானத்தை
தயாசதகத்திற்கு விரைந்தெழுதக்கடவாய்' என்று நியமித்தருளலாயிற்று. அந்தத் திருவாணை
யைச் சிரமேற்கொண்டு இந்த வியாக்கியானத்தை விஜ்ஞாபிக்கின்றேனென்கை.

பகவத்கீதையின் முடிவில் "इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन । नचाशुश्रूषवे वाच्यं नच
मां योऽभ्यसूयति ॥"—இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந, நச அசுச்ரூஷவே வாச்யம்
நச மாம் யோப்யஸூயதி". என்று கீதாசார்யன் கட்டளையிட்டருளினன். அங்கு "ந ச மாம்
யோப்யஸூயதி" என்றவிடத்தில் நம் ஸ்வாமி பாஷ்யம் செய்தருளுகிறார்—"मत्स्वरूपे मदैश्वर्ये
मद्गुणेषु च कथितेषु यो दोषमाविष्करोति, न तस्मै वाच्यम्; असमानविभक्तिनिर्देशः तस्यात्यन्तपरिहर-
णीयत्व ज्ञापनाय "என்று. பகவத் குணங்களைத் தாம் சிந்தித்தாலும் குணாநுபவ நிஷ்ணாதர்கள்
சொல்லக் கேட்டாலும் உள்குழைந்து நைந்து உருகவேண்டியிருக்க அது செய்யாததோடு
அவற்றில் தோஷாவிஷ்கரணம் செய்யப் புகுமவர்களுக்குச் சொல்லாதேயென்கை. தயை
யாவது பரதுக்க துக்கித்வம், வாத்ஸல்யமாவது தோஷபோக்யத்வம் என்றிங்ஙனே ச்ருதப்ரகா
சிகாபட்டர் முதலானோருளிச்செய்தால் ஒருக்ஷணமும் ஸஹித்திருக்கவில்லாதே முஷ்டிபிடித்து
வாதகேளிகளை வளர்க்குமவர்கள் தேசிக திவ்யஸூக்திவைதேசிகர்களென்னுமிடம் மேலே
தத்தத்ப்ரகரணங்களிலே விசதீகரிக்கப்படுமாதலால் அன்னவர்கள் இத்தகைய திவ்யஸூக்தி
களுக்கு நெடுந்தூரத்திலே வர்த்திக்கக் கடவர்களென்றதாயிற்று. ...

வியாக்கியான அவதாரிகை முற்றிற்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

श्रीश्रीनिवासपरब्रह्मणे नमः ॥

श्रीमद्वेङ्कटनाथार्यचरणौ शरणं वृणे ।
यौ ममोत्तंसतामेत्य ममैव शिरसि स्थितौ ॥

॥ दयाशतकप्रारम्भः ॥

தயாசதகம்

प्रपद्ये तं गिरिं प्रायः श्रीनिवासानुकम्पया । इक्षुसारस्रवन्त्येव यन्मूर्त्या शर्करायितम् ॥ १ ॥

ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: ஶ்ரீநிவாஸாநுகம்பயா,
இக்ஷுஸாரஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா சர்க்கராயிதம். (1)

இக்ஷுஸாரஸ்ரவந்த்யா சர்க்கராயிதம் இவ ஶ்ரீநிவாஸாநுகம்பயா யந்மூர்த்யா சர்க்கராயிதம் ப்ராய:, தம் கிரிம் ப்ரபத்யே.	கருப்பஞ்சாறுதானே கற்கண்டாகப் பரிணமிப்பது போலத் திருவேங்கடமுடையானுடைய திருவருளே திருமலையாகப் பரிணமித்ததோ! என்னலாம்படியுள்ள திருவேங்கடமலையைத் தொழுகின்றேன்.

*** இந்த சுலோகத்தில் அந்வயக்ரமம் கொள்ளவேண்டியபடியைப் பலர் மாறுபடுத்தியுள்ளார்கள். ஸ்வாமிக்கு விவக்ஷிதமான அந்வயக்ரமத்தை இங்ஙனே குறிக்கொண்மின்;— [इक्षुसारस्रवन्त्या यथा शर्करायते एवं श्रीनिवासानुकम्पया गिरिमूर्त्या शर्करायितम्—இக்ஷுஸாரஸ்ரவந்த்யா யதா சர்க்கராயதே, ஏவம் ஶ்ரீநிவாஸாநுகம்பயா கிரிமூர்த்யா சர்க்கராயிதம்] என்பது ஸ்வாமியின் திருவுள்ளம்' இந்த ஸ்துதிநூலானது தயாசதகமென்று திருநாமகு. கொண்டதற்குச் சேர "प्रपद्ये श्रीनिवासस्य दयाम्— ப்ரபத்யே ஶ்ரீநிவாஸஸ்ய தயாம்". என்று தொடங்கப்பட வேண்டியது முறை. அம்முறையைவிட்டு "கிரிம் ப்ரபத்யே" [திருமலையைத் தொழுகிறேன்] என்று உபக்ரமம் செய்யலாயிற்று. இது தகுதியோ வென்கிற சங்கை தோன்றித் திரும்; அதற்குப் பரிஹார முணர்த்தும் ப்ரக்ரியையிலே சுலோகம் அற்புதமாக அமைந்துள்ளது. எம்பெருமான்தான் அநேக திவ்ய மங்கள விக்ரஹபரிக்ரஹம் பண்ணுகிருப்போலவும், பெரியபிராட்டியார்தாமும் அங்ஙனே பல திருமேனிகளைப் பரிக்ரஹிப்பது போலவும் தயா தேவியும் விக்ரஹ விசேஷங்களைப் ப'க்ரஹிப்பதுண்டு; முந்துற முன்னம் திருமலையாகிற திருவுருவத்தைப் பரிக்ரஹித்தாளாயிற்று, ஆகவே திருமலையைத் தொழுவதும் தயாதேவியைத் தொழுவதற்குப் பரியாயமேயாம் என்பது ஸ்வாமியின் திருவுள்ளம். இதன்மேல் ஒரு சங்கை தோன்றக்கூடியதுண்டு;– அதிஸரளப்ரக்ருதியான தயாதேவி அதிகர்க்கசமான கல்வடிவத்தைக் கொண்டாளென்றால் இது பொருத்தமாமோவென்று. இந்த சங்கையை த்ருஷ்டாந்த முகேந பரிஹரித் தருளுகிருர் இக்ஷுஸாரஸ்ரவந்த்யா இத்யாதியாலே. ரஸமயமான கருப்பஞ்சாறனது சர்க்கரா கண்டமாகப் பரிணமிப்பது காணு கின்ரேம். இதனால் அதனுடைய ரஸமயத்வத்திற்கும் மாதுர்யத்துக்கும் ஒரு குறையுமில்லையே இதுபோல அதிஸரளப்ரக்ருதியான தயாதேவி மலையே திருவுடம்பாகப் பரிணமித்தாலும் அவ,

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ளுடைய ஸாரஸ்யத்திற்கும் ஸாரஸ்யத்திற்கும் ஒரு குறையுமில்லையென்று காட்டுகிறபடி வடமொழியில் சர்க்கரா என்கிற பதம் நாநார்த்தகம்; சர்க்கரையென்கிற மதுர பதார்த்தத்திற்குப் பெயராயிருப்பதுபோல் கல்லுக்கும் பெயராயிருக்கும். இவ்விருபொருளையும் விவக்ஷித்தே இங்கு சர்க்கராயிதம் என்றருளிச்செய்தது. ஆகவே இதில் ச்லேஷம் [சிலேடை] என்று கொள்ளக்கடவது. இக்ஷுஸாரஸ்ரவந்தியானது சர்க்கரா ரூபத்தையடையாமல் அப்படியே யிருக்குமாகில் அதில் போக்யதை குன்றும்; வேறொரு ரூபத்தைப் பரிக்ரஹித்தே [த்ரவ ரூபத்தை விட்டுக் கடின ரூபத்தையடைந்தே] போக்யதை குன்றப் பெறுமலிருக்குமென்பது ஸர்வாநுபவ ஸாக்ஷிகமாகையாலே தயாதேவிக்கும் ரூபாந்தரபரிக்ரஹம் ப்ராப்தமானது போக்யதாதிசயத்திற்காகவே யென்க.

நம்மாழ்வார் * உலக முண்ட பெருவாயனில் திருமலையை நோக்கியே தம்முடைய ப்ரபத்தியை ப்ரயோகித்திருக்கையாலே அதனையடியொற்றி இவரும் ப்ரபத்யே என்று தொடங்குகிறாராயிற்று. ப்ராய: என்னுமவ்யயம் ப்ரபத்யே என்கிற க்ரியையில் அந்வயிப்பதன்று; சர்க்கராயிதமென்பதில் அந்வயிப்பதாகும். * मन्ये शङ्के ध्रुवं प्रायो नूनमित्येवमादिभिः। उत्प्रेक्षा व्यज्यते शब्दैः इवशब्दोऽपि तादृशः॥ என்பது ஆலங்காரிக காரிகை. இதன்படி உத்ப்ரேக்ஷாலிங்கமாகவே இங்கு ப்ராய: பதம் பிரயோகிக்கப்பட்டது. ஸ்வாமியின் திவ்யக்ரந்தங்களில் இங்ஙனே ப்ரயோகம் பல விடங்களில் காணலாகும். * प्रायः प्रपदने पुंसां पौनःपुन्यं निवारयन् 'प्रायेण देवि! भवतीव्यपदेशयोगात् * இத்யாதிகள் பரச் சதம் காண்க. ... ... (1)

विगाहे तीर्थबहुलां शीतलां गुरुसन्ततिम्। श्रीनिवासदयाम्भोधिपरीवाहपरम्पराम्॥ २॥

விகாஹே தீர்த்தபஹுலாம் சீதலாம் குருஸந்ததிம்.
ஸ்ரீநிவாஸதயாம்போதி பரீவாஹ பரம்பராம். (2)

ஸ்ரீநிவாஸதயா அம்போதி பரீவாஹபரம்பராம் தீர்த்தபஹுலாம் சீதலாம் குருஸந்ததிம் விகாஹே.	திருவேங்கட முடையானுடைய அருள் வெள்ளத்தின் பரீவாஹபரம்பரைபோன்றதாய், தீர்த்தங்களினால் நிறைந்ததாய் (?) ஆசார்ய ப்ரசுரமாய் சீதளமாயிராநின்ற குரு பரம்பரையிற் படிகின்றேன்.

*** ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம் தொடங்கும்போது [*நமோசிந்த்யாத்புதேத்யாதியாலே] ஆசார்ய வந்தன பூர்வகமாகத் தொடங்கினவிடத்து ஸ்தோத்ர பாஷ்யத்தில் ஸ்வாமி "भगवद्वन्दनं स्वाद्यं गुरुवन्दनपूर्वकम्। क्षीरं शर्करया युक्तं स्वदते हि विशेषतः॥" என்றருளிச்செய்தவராகையாலே ஆசார்ய வந்தன பூர்வகமாக ஸ்துதியிலிறங்க வேணுமென்று திருவுள்ளம் பற்றினார். அதை இந்த சுலோகத்தினால் ஒரு சமத்காரமாகச் செய்தருளுகிறார். யதிராஜ ஸப்ததியில் * கமப்யாத்யம் குரும் வந்தே *என்று தொடங்கி பெருமாள் பெரிய பிராட்டியார் சேனையர்கோன் நம்மாழ்வார் ஸ்ரீமந்நாத முனிகள் உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி ஆளவந்தார் பெரிய நம்பி ஆகிய இவ்வாசாரியர்களைத் தனித்தனி ஒவ்வொரு சுலோகத்தினால் உபச்லோகித்தருளினார். இதில் ஆசாரியர்களுக்காக (இந்த) ஒரு சுலோகமும், ஆழ்வார்களுக்காக அடுத்த சுலோகமும், மஹரிஷிகளுக்காக அதற்கடுத்த சுலோகமும் அருளிச்செய்கிறாராயிற்று. குருபரம்பராவகாஹந-ப்ரதிபாதகமான இந்த சுலோகத்திலும் திருவேங்கட முடையானுடைய தயாப்ரஸ்தாவம் இல்லாமலிருக்கத் தகாதென்று திருவுள்ளம் பற்றிய ஸ்வாமி தாம் அவகாஹிக்க நினைக்கும் குருபரம்பரைக்கு ஸ்ரீநிவாஸதயாம்போதி பரீவாஹபரம்பராம் என்று விசேஷணமிட்டருளுகிறார், கீழ் ச்லோகத்தில் ஸ்ரீநிவாஸனுடைய தயை திருமலையாக வடிவெடுத்ததென்றருளிச் செய்தார். இதில் அந்த தயாபயோ நிதியின் பரீவாஹ பரம்பரைதான் ஆசார்ய ஸந்ததியென்கிறார். பவபூதி மஹாகவி உத்தரராம சரிதத்தில் * பூரோத்பீடே தடாகஸ்ய பரீவாஹ: ப்ரதிக்ரியா * என்றான். நீர் நிலை தரிப்பதற்காகக் கலுங்கலெடுத்து விடுவதற்குப் பரீவாஹக்ரியையென்று பெயர். ஏரிகளில் இதை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமத் வரவர முநயே நம:

பிரதிவாதி பயங்கரம் அண்ணா அருளிச்செய்த

ஸ்ரீ வரவரமுநி சதகம்

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய ஸாரார்த்த ப்ரகாசிகா என்னும் வியாக்கியானத்துடன் கூடியது

மாயி மதங்கஜ மஸ்தக கோடீ பாடந பாடல பாணிதலோ ய:
ச்ருத்யடவிகுஹரேஷு ஸமிந்தே ஸ ப்ரதிவாதி பயங்கரஸிம்ஹ:

வியாக்கியான அவதாரிகை

மாஞானிகளால் இருள் தருமா ஞாலமென வழங்கப்படும் இவ் விபூதியில் வகுளபூஷண பாஸ்கர லோக திவாகராதிகளான ஆழ்வார்களும் ஸ்ரீ ராமானுஜ திவாகராதிகளான ஆசாரியர்களும் திருவவதரித்துக் கலியிருளையும் அகவிருளையும் ஸதுபதேச ஸத்க்ரந்த நிர்மாணாதிகளாலே தொலைத்திருக்கச் செய்தேயும், பண்டு ஓர் ஆசார்யராலும் ஆகாத காரியத்தைப் பிள்ளை லோகாசாரியர் மூலமாகச் செய்வித்தருளத் திருவுள்ளம்பற்றிய எம்பெருமான் ஸம்ஸார போகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதுவான அம் மஹாசார்யரையும் அவருடைய திருத்தம்பியாரையும் திருவவதரிப்பித்து அவ் விருவர் முகேந அரிய பெரிய திவ்ய ஸூக்திகளை அவதரிப்பித்தருளினான். வ்யாஸ மஹர்ஷி ப்ரஹ்ம ஸூத்ரமாகிற சாரீரகமீமாம்ஸையை இயற்றியிருந்தும், பாஷ்யமின்றிக்கே அதன் பொருள் அறிவரிதென்று கருதிய கடல்வண்ணன் பகவத் பாஷ்யகாரரான எம்பெருமானாரைத் திருவவதரிப்பித்தருளினாப்போலே, அவரையே மீண்டும் மணவாள மாமுனிகளாகத் திருவவதரிப்பித்து முந்தின திருவவதாரத்தில் சேஷித்த க்ருத்யங்களை மாமுனிகளைக் கொண்டு நிறைவேற்றுவித்தான் ஸத்யஸங்கல்பன்.

மணவாள மாமுனிகளைப் போன்ற ஆசார்யர் முன்பு அவதரித்ததுமில்லை, இனி அவதரிக்கப்போகிறதுமில்லை. "उपमानोपमेयत्वं यदेकस्यैव वस्तुनः—உபமாநோப மேயத்வம் யதேகஸ்யைவ வஸ்துந:" என்னும்படியான அநந்வயாலங்காரத்திற்கு ஆசார்ய வர்க்கத்தில் லக்ஷ்யம் காட்டவேணுமானால் மணவாள மாமுனிகளையன்றி வேறொருவரையும் காட்டவொண்ணாதென்பது ஸ்ரீமத்ஸர விவேகி ஸமுதய ஸம்மதமானதே.

ஸ்வாமிமாமுனிகள் திருவரங்கம் பெரிய கோயிலிலே அழகிய மணவாளனும் அடிபணிந்து அர்த்த விசேஷங்கள் கேட்கும்படி விலக்ஷண சிஷ்யஸம்ருத்தியுடன் வாழ்ந்தருளுங் காலத்திலே, ஸ்ரீ காஞ்சீபுரியிலே திருத்தண்காவில் திருவவதரித்து ஸ்ரீமங்கயன வரதாசார்யர் ஸ்வாமி பக்கலிலே அத்யாத்ம வித்யாக்ரஹணம் பண்ணி ப்ரதிவாதி பயங்கரரென்னும் விருது பெற்ற

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அன்று திருமலையில் எழுந்தருளியிருந்து திருவேங்கடமுடையானுக்குத் திருமஞ்சன கைங்கர்யம் செய்துகொண்டிருக்கையில், நம்பெருமாள் ஸந்நிதியில் நின்றும் யாத்ருச்சிகமாக அங்கு வந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் முகமாகக் கோயிலிலே வாழ்ந்தருளும் மணவாள மாமுனிகளின் அப்ரதிம வைபவங்களைக் கேட்டு அவர் திருவடிகளிலே பணிந்து ஸத் ஸம்ப்ரதாயார்த்த விசேஷங்களை யுணர்ந்து உய்யக் கருதி, அன்றே திருவேங்கடமுடையான் பக்கலில் விடைபெற்றுக் கொண்டு, பயணகதியிலே கோயிலேறவந்து சேர்ந்து மணவாள மாமுனிகள் திருவடிகளிலே ஸகுடும்பமாக ஆச்ரயித்துத் திருவிலச்சினை பெற்று, * वरवरमुनितां याते यतिराजे सकललोकजीवातौ । श्रीवादिभीकरोऽभूत् श्रीमान् श्रीवत्सचिह्नमिश्रोऽपि ॥ வரவரமுநிதாம் யாதே யதிராஜே ஸகலலோகஜீவாதௌ, ஸ்ரீவாதிபீகரோபூத் ஸ்ரீமாந் ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரோபி, * என்கிற படியே எம்பெருமானார்க்குக் கூரத்தாழ்வான்போலே மாமுனிகளுக்கு சிஷ்யாக்ரேஸரராய் உசாத்துணையாயிருந்து வாழுங்காலத்திலே ஆசார்யப்ரேமம் கனத்து வட மொழி தென் மொழிகளிலே மாமுனிகள் விஷயமாகச் சில ஸ்தோத்ர க்ரந்தங்களை விண்ணப்பம் செய்தாரென்று ப்ரஸித்தமாயிருக்கும், அவற்றிலே தலைமை பெற்றதான இந்த சதகம் சப்தபுஷ்டி அர்த்த புஷ்டி முதலானவற்றால் கவிகளுக்கும் வித்வான்களுக்கும் பக்தர்களுக்கும் கர்ணாம்ருதமாய் விளங்கா நிற்கும். இதில் அலங்காரபுஷ்டி அதிசயித்திருக்குமென்பதை அநுபவரஸிகர்கள் அறியக்கடவர்கள். இதுதனக்கு நாதிவிஸ்தரஸம்க்ஷேபமாக வியாக்கியானமொன்றைப் பல மஹான்களின் நியமனமடியாக விஜ்ஞாபித்து ஸத்தைபெற முயல்கின்றேன். குற்றங்குறைகளைந்து குணலேசமுண்டாகிற் கொள்வது பெரியோர் கடமை.

இந்த சதகம் தெலுங்கு லிபியில் இருமுறையும், தேவநாகரலிபியில் இருமுறையும் அச்சேறியிராநின்றது. ப்ரதிவாதி பயங்கர வம்சஸ்தர்களுக்குப் பெரும்பாலும் கண்ட பாடத்திலுமுள்ளது. ஆயினும் ஸ்ரீ ஜகத்குரு காதிஸ்வாமி திருமாளிகையில் ஹயவதந விலாஸதனத்தில் சிதிலமான தாளகோசமொன்றே யிருப்பதனால் பாடஸந்தேஹம் நேருமிடங்களில் துணிந்து நிர்ணயிப்பதற்கு ஸௌகரியமில்லையா யிருக்கின்றது. ஆனாலும் ஒருவாறு நிர்ணயித்தே வியாக்கியானிக்கப்படுகின்றது. எறும்பியப்பா பணித்த சதகம் பெரும்பாலும் மந்தாக்ராந்தாவ்ருத்தத்திலே யமைந்தது. இந்த சதகம் பெரும்பாலும் ஸகல வ்ருத்தங்களும் அமையப்பெற்றுள்ளது. அன்றியும், உபமை ச்லேஷம் [சிலேடை] என்னு மலங்காரங்கள் இதில் அற்புதமாகவும் அநாயாஸஸித்தமாகவும் விளங்குவதால் உத்தமகாவ்யங்களிலே பரிகணநீயமாகவுள்ளது. ஸ்தோத்ரக்ரந்தங்களில் இதுபோன்ற நூல் வேறொன்று புலப்படவில்லையென்று துணிந்து சொல்லலாம்.

திருவல்லிக்கேணியி லெழுந்தருளியிருந்த விமர்சகுசல பண்டிதோத்தமரான ஸ்ரீமத் கவிபூஷண குமார தாதாசார்ய ஸ்வாமியின் திருமுன்பே (ஐம்பதாண்டுகட்குமுன்பு) இந்த சதகத்தை ஒருமுறை விஜ்ஞாபிக்க நேர்ந்தது. அப்போது அந்தஸ்வாமி அனேக ச்லோகங்களை மூன்று நான்குபர்யாயமும் சொல்லச் சொல்லிக் கேட்டு இந்த ரசநாவைகரியில் மிக மிக ஈடுபட்டு, அப்போது தாம் பதிப்பித்த ஸ்தோத்ரார்ணவத்தின் மூன்றாவது ஸம்புடத்தில் இதனைப் பதிப்பித்துள்ளார்.

இந்த உத்தமோத்தம காவ்யத்தை வியாக்கியானிக்கப் பர்யாப்தமான பாண்டித்யம் அடியேன்பால் இல்லையென்பது ஸத்யம். ஆனதுபற்றியே இதுகாறும் இதை வியாக்கியானிக்கப் புகுந்திலேன். கோயிலில் வாழும் ஸஹ்ருதய ரஸிகமணியான திருமலையனந்தாண்பிள்ளை. சதாபிஷேகாசாரியர் ஸமீபகாலத்தில் வற்புறுத்தித் தெரிவித்ததனால் மணவாள மாமுனிகளும் அழகிய மணவாளனும் அவரையிட்டு நியமித்தருள்வதாகக் கொண்டு வியாக்கியானிக்கத் துணிந்தெழுந்தேன். அர்த்தம் ஸ்புரியாத விடங்களிலே மணவாள மாமுனிகளின் திருவடிகளைச் சிந்தனை செய்து ஸ்புரிக்கப்பெற்ற அதிசயம் ஆத்மைகவேத்யம். ... ...

வியாக்கியானாவதாரிகை முற்றிற்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

ஸ்ரீ வரவரமுநி சதகப்ராரம்பம்

मूलेऽवतीर्णमिह मूलमनूदितार्थतत्त्वावबोधसुखितां वसुधां विधातुम् ।
रामानुजार्यचरणाम्बुजचञ्चरीकं रम्योपयन्तृयमिनं शरणं प्रपद्ये ॥ १ ॥

மூலேவதீர்ணமிஹ மூலமநூதிதார்த்த தத்வாவபோதஸுகிதாம் வஸுதாம் விதாதும்,
ராமாநுஜார்ய சரணம்புஜ சஞ்சரீகம் ரம்யோபயந்த்ரு யமிநம் சரணம் ப்ரபத்யே. (1)

வஸுதாம் மூலமநு உதித அர்த்த தத்வ அவபோத ஸுகிதாம் விதாதும் மூலே இஹ அவதீர்ணம் ராமாநுஜார்ய சரணம் புஜ சஞ்சரீகம் ரம்யோபயந்த்ரு யமிநம் சரணம் ப்ரபத்யே.	பூமண்டலத்தை திருவஷ்டாக்ஷரமஹா மந்த்ரத்தில் சொல்லப்பட்ட அர்த்தங்களின் தத்துவத்தை யறிந்து இன்புறச் செய்வதற்காகத் திருமூல நன்னாளில் இந் நிலத்தில் திருவவதரித்தவரும் எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளில் வண்டு போல் ரமிப்பவருமான மணவாள மாமுனிகளைத் தஞ்சமாகப் பற்றுகிறேன்.

*** இந்த ஸ்துதி க்ரந்தம் இடையூறின்றி முடிவதற்காக மங்களா சரணமாக அமைந்தது இந்த ச்லோகம். எம்பெருமானுடைய அவதார ப்ரயோஜனம் கீதையில்* பரித்ராணாய ஸாதூநா மித்யாதியால் சொல்லப்பட்டது. ஆசாரியர்களின் திருவவதாரத்திற்கும் அவையே ப்ரயோஜநமா யிருக்கவடுக்கும். ஆனால், ஸமீசீனமான அர்த்த விசேஷங்களை உபதேசித்தருள்வதனாலும் ஏடுபடுத்தி வைப்பதனாலும் ஸாது பரித்ராணம் செய்ததாகும். புறச்சமயிகள் கூறும் அபார்த்தங்களை நிரஸித் தொழிப்பதனாலே துஷ்க்ருத்விநாசநம் செய்ததாகும். இங்கு [வஸுதாம் மூலமநூதிதார்த்த தத்வாவபோத ஸுகிதாம் விதாதும் மூலே அவதீர்ணம்] என்று திருமந்த்ரார்த்த தத்துவத்தை யுணர்த்தி உலகத்தை வாழ்விப்பதற்காகத் திருவவதரித்தருளினதாய்ச் சொன்னது ரஹஸ்யத்ரயமென்ன, தந்மூலகமான ஸகல சாஸ்த்ரங்களென்ன ஆக எல்லாவற்றினுடையவும் உண்மைப் பொருளை வெளியிட்டருள்வதற்காகவே ஸ்வாமியின் திருவவதாரம் என்று சொன்னபடி. மநு: என்று மந்த்ரத்திற்குப் பெயர்; மூலமநு என்றது மூலமந்த்ர மென்றபடியாய் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தைச் சொன்னபடியாம். "ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவ ஆதர்வணாநி ச, ஸர்வமஷ்டா க்ஷராந்தஸ்ஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம்" என்கிறபடியே ஸகல வேத சாஸ்த்ரங்களும் அஷ்டாக்ஷர அந்தர்க்கத மாகையாலே ஸகலார்த்த தத்துவத்தையு முணர்த்தி லோகோஜ் ஜீவனார்த்தமாகவே ஸ்வாமியின் திருவவதார மென்றதாயிற்று. ராமாநுஜார்யசரணாம்புஜசஞ்சரீகமென்பதனால் யதீந்த்ரப்ரவண திருநாமத்தை விவரித்தபடி. ரம்யோபயந்தா, காந்தோபயந்தா, ரம்யஜாமாதா— இவை பர்யாயம். ... (1)

यदवतरणमूलं मुक्तिमूलं प्रजानां शठरिपुमुनिदृष्टाम्नायसाम्राज्यमूलम् ।
कलिकलुषसमूलोन्मूलने मूलमिन्धे स भवतु वरयोगी नस्समस्तार्थमूलम् ॥ २ ॥

யதவதரணமூலம் முக்திமூலம் ப்ரஜாநாம் சடரிபுமுநித்ருஷ்டாம்நாயஸாம்ராஜ்யமூலம்
கலிகலுஷஸமூலோந்மூலநே மூலமிந்தே ஸ பவது வரயோகீ நஸ் ஸமஸ்தார்த்தமூலம். (2)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யத் அவதரணமூலம் ப்ரஜாநாம் முக்திமூலம், சடரிபு முநீத்ருஷ்ட ஆம்நாய ஸாம்ராஜ்ய மூலம், கலி கலுஷஸமூல உந்மூலநே மூலம் இந்தே, ஸ: வரயோகீ ந: ஸமஸ்தார்த்த மூலம் பவது.	யாவரொரு மணவாள மாமுனிகளின் திருவவதார நன்னாளாகிய திருமூலமானது ஸகல ஜனங்களுக்கும் முக்தி மூலமாகவும், த்ராவிட ப்ரஹ்மஸம்ஹிதையின் ஸர்வதோமுகமான வெற்றிக்கு மூலமாகவும், கலிகல்மஷத்தை வேரறவறுப்பதற்கு மூலமாகவும் விளங்குகின்றதோ, அந்த மணவாள மாமுனிகள் நமக்கு ஸகலார்த்த ஸித்திக்கும் அடியாகக்கடவர்.

*** இந்த ச்லோகத்தினால் மணவாள மாமுனிகளின் *அழகு திகழ்ந்திடு மைப்பசியில் திருமூல நன்னாளின் சிறப்பை யனுபவிக்கிறார். *யந்மூல மாச்வயுஜமாஸ்யவதார மூலம்* என்கிற எறும்பியப்பாவின் சுலோகத்திற் காட்டிலும் மேம்பட்ட முறையில் அவதரித்ததிது. [யதவதரண மூலம்] *செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடவும், சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடவும், மந்த மதிப்புவி மானிடர் தங்களை வானிலுயர்த்திடவும், மாசறு ஞானியர் சேரெதிராசர் தம் வாழ்வு முளைத்திடவும், கந்தமலர்ப் பொழில்சூழ் குருகாதிபர் கலைகள் விளங்கிடவும், *காரமர் மேனியரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடவும் அந்தமில் சீர் மணவாள முனிப்பர னவதாரஞ் செய்த ஐப்பசியில் திருமூல நன்னாளானது. [ப்ரஜாநாம் முக்தி மூலம்] "மந்த மதிப்புவிமானிடர் தங்களை வானிலுயர்த்திடு நாள்" என்கிறபடியே *அலைநீர்க் கடலுளழுந்தும் நாவாய்போல் பிறவிக் கடலுள் நின்று துளங்கும் மக்களுக்கெல்லாம் நற்கதி நண்ணுவதற்கு மூலமாயிருக்கும். எம்பெருமானுடைய *அலம்புரிந்த நெடுந்தடக்கைக்கு மெட்டாதவர்களாய் * நானே நானாவித நரகம் புகும் பாவஞ் செய்தேன்* என்றிருக்குமவர்களான ஸம்ஸாரிகளனைவரும் மாமுனிகளின் திருவடி ஸம்பந்தத்தாலேஉய்ந்து போனார்களிறே. [சடரிபு முநித்ருஷ்ட ஆம்நாய ஸாம்ராஜ்ய மூலம்] "சேற்றுக் கமல வயல்சூழரங்கர்தம் சீர்தழைப்பப், போற்றித் தொழு நல்ல வந்தணர் வாழவிப் பூதலத்தே, மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல், ஆற்றில் கரைத்த புளியல்லவோ தமிழாரணமே" என்று அக்காலத்திலேயே அநுஸந்தித்துப் போந்தார்களிறே. மணவாளமாமுனிகளின் ரஹஸ்ய வ்யாக்யான ஸ்ரீஸூக்திகள் அவதரித்திலவாகில், நம்பிள்ளை ஸ்ரீஸூக்திகளவதரித்திருந்தும் பயனொன்றுமில்லை யாகுமன்றோ. சடரிபு முநித்ருஷ்டாம்நாயமென்று திருவாய்மொழியை மட்டும் சொல்லுகிறதன்று; "நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே" என்கிறபடியே அருளிச்செயலனைத்தும் நம்மாழ்வார் திருவாக்கிலிருந்தே ஆவிர்ப்பூதமாகையாலே ஸகல திவ்ய ப்ரபந்தங்களையுஞ் சொல்லுகிறது. அவை வடமொழி மறையினும் விஞ்சி வீறு பெற்று விளங்குவதற்கு மூலகாரணம் மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளே யாதலால் இங்ஙனே யருளிச்செய்யக் குறையில்லை.

[கலிகலுஷ ஸமூலோந் மூலநே மூலம் இந்தே] "கலியுங்கெடுங் கண்டு கொண்மின்" என்கிற நம்மாழ்வார் திருவாக்கின்படி திருமங்கையாழ்வாரும் எம்பெருமானாரும் திருவவதரித்துக் கலியிருளைக் கடிந்திருக்கச்செய்தேயும் அதில் சேஷம் கிடந்தபடியாலே நிச்சேஷ நிபர்ஹணம் ஸ்வாமி திருவவதாரத்தாலேயாயிற்று. [ஸ: வரயோகீ ந: ஸமஸ்தார்த்த மூலம் பவது] கீழ்ச்சொன்ன பெருமைகளுக்கெல்லாம் நிதியான மாமுனிகளின் திருவருளாலே நமக்கு ஸகலார்த்த ஸித்தியுமுண்டாகுக வென்கை. வேத வேதாந்த வேதாங்கங்களிலுள்ள ஸகலார்த்தங்களும் மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளில் பொதிந்து கிடக்கையாலே அவ்வர்த்த விசேஷங்களெல்லாம் நமக்குக் கை வந்ததாம் படி க்ருபை செய்தருள வேணுமென்றதாயிற்று. ... (2)

जनिविपदपवादौ यस्य पादौ विदन्तः सततमपि महान्तस्स्वान्त एवोद्वहन्ति ।
स जयति भजदन्तर्ध्वान्तकल्पान्तभानुर्निरवधिगुणकान्तो हन्त कान्तोपयन्ता ॥ ३ ॥

ஜநிவிபதபவாதௌ யஸ்ய பாதௌ விதந்தஸ் ஸததமபி மஹாந்தஸ் ஸ்வாந்த ஏவோத்வஹந்தி,
ஸ ஜயதி பஜதந்தர்த்வாந்தகல்பாந்தபாநுர் நிரவதிகுணகாந்தோ ஹந்த ! காந்தோபயந்தா. (3)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மஹாந்த: யஸ்ய பாதெள ஜநிவிபத் அபவாதெள விதந்த: ஸததமபி ஸ்வாந்தே ஏவ உத்வஹந்தி, பஜத் அந்தர் த்வாந்த கல்பாந்த பாநு: குணகாந்த: ஸ: காந்தோபயந்தா ஜயதி.

மேலோர்கள் யாவரொரு மணவாளமாமுனிகளின் திருவடிகளை ஸம்ஸாராநுபந்திகளான ஸகல துக்கங்களையும் போக்கவல்லனவாக அறிந்து அந்தத் திருவடிகளை நிச்சலும் தமது சிந்தையிலேயே தாங்கியிருக்கின்றார்களோ, பக்தர்களின் அகவிருளை அகற்றவல்ல விலக்ஷணஸூர்யனுகவும் ஸகலகுணுபிராமராகவுமுள்ள அந்த மாமுனிகள் ஸர்வோத்கர்ஷசாலியாய் விளங்குகின்றார்.

*** மணவாள மாமுனிகளின் செய்ய தாமரைத் தாளிணையின் சிறப்பைப் பேசுகிறார் பூர்வார்த்தத்தில். சாஸ்த்ரங்களில் விதி சாஸ்த்ரமென்றும் அபவாத சாஸ்த்ரமென்றும் ப்ரதிப்ரஸவ சாஸ்த்ரமென்றும் மூன்றுண்டு. முந்துறவுண்டான விதிக்கு விலக்கானது அபவாத சாஸ்த்ரமெனப்படும்; அந்த விலக்கி விதி சாஸ்த்ரத்தையே ஸ்தாபிக்கவல்லது ப்ரதிப்ரஸவமெனப்படும். "அபவாதாபவாத: ப்ரதிப்ரஸவ:" என்பர் சாஸ்த்ரஜ்ஞர்கள். இங்கு மாமுனிகளின் திருவடிகளை ஜநி விபத்துக்கு அபவாதமென்றது சாஸ்த்ரஜ்ஞஸரணியிலே அவதரித்த திருவாக்கு. "ஜநுர் ஜநந ஜந்மாநி ஜநி ருத்பத்திருத்பவ:" என்ற அமரகோசத்தின்படியே ஜநியாவது பிறப்பு. "புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீஜடரே சயநம்" என்கிற ஸம்ஸரணத்தைச்சொன்னபடி. அதற்கு அநுபந்திகளான விபத்துக்கள் பலவுண்டே "கொன்றுயிருண்ணும் விசாதி பகைபசி தீயனவெல்லாம்" என்றும் "போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பிவை" என்றும் ஆழ்வாரருளிச்செய்தவை; அவற்றுக்கெல்லாம் [யஸ்ய பாதெள அபவாதெள விதந்த:] மணவாள மாமுனிகளின் திருவடிகளே நிவர்த்தகங்களென்று அறிந்தவர்களாய். இவ்வுணர்ச்சி ஸாமான்யர்களுக்கு உண்டாக மாட்டாததலால் [மஹாந்த:] என்கிறார். அவர்கள் தாம் செய்வதென்னென்னில், [ஸ்வாந்த ஏவ உத்வஹந்தி] 'தெள பாதாவேவ ஸ்வாந்தே உத்வஹந்தி' என்று யோஜிப்பது. ஸம்ஸாரபந்தஸ்திதிமோக்ஷ ஹேதுவான ஸ்ரீமந்நாராயண சரணங்களை விட்டு மாமுனிகளின் திருவடிகளையே அநவரதம் சிந்தனை செய்கின்றார்களென்கை. அப்படிப்பட்ட பெருமை பொலிந்த திருவடிகளையுடையரான மாமுனிகளின் பெருமை சொல்லுகிறது உத்தரார்த்தம். தம் அடி பணிந்தவர்களின் அகவிருளை அகற்றும் விஷயத்தில் கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்திருப்பர். அக்காலத்தில் உபதேச ரூபங்களான ஸ்ரீஸூக்திகளாலும், பிற்காலத்தில் ஸ்ரீகோச ரூபங்களான ஸ்ரீஸூக்திகளாலும் அகவிருளை அகற்றவல்லவர். மற்றும் கல்யாண குணங்களென்று பேர் பெற்றவையெல்லாவற்றாலும் ஸ்ப்ருஹணீயராய் விளங்குபவர். ... ... (3)

इन्धे वाक्यविभूषणस्य महितं यद्भाषणं भूषणं यत्पादाम्बुरुहद्वयं सुमनसां मूर्ध्नस्सदा भूषणम् ।
यद्भक्तांघ्रिरजःकणो वितनुते दुःखोदधेश्शोषणं वन्दे कान्तवरं मुनिं तमनघं नित्यं कलेर्भीषणम् ॥ ४ ॥

இந்தே வாக்யவிபூஷணஸ்ய மஹிதம் யத்பாஷணம் பூஷணம்
யத்பாதாம்புருஹத்வயம் ஸுமநஸாம் மூர்த்நஸ் ஸதா பூஷணம்
யத்பக்தாங்க்ரிரஜ:கணோ விதநுதே து:க்கோததேச் சோஷணம்
வந்தே காந்தவரம் முநிம் தமநகம் நித்யம் கலேர் பீஷணம். (4)

வாக்ய விபூஷணஸ்ய யத்பாஷணம் மஹிதம் பூஷணம் இந்தே; யத்பாதாம்புருஹத்வயம் ஸுமநஸாம் மூர்த்ந: ஸதா பூஷணம் இந்தே; யத் பக்த அங்க்ரிரஜ: கண: துக்கஉததே: சோஷணம் விதநுதே; கலே: பீஷணம் அநகம் தம் காந்தவரம் முநிம் நித்யம் வந்தே.

ஸ்ரீவசன பூஷணத்திற்கு யாவரொரு மாமுனிகளின் வியாக்யானமானது சிறந்த பூஷணமாக விளங்காநின்றதோ, யாவரொரு மாமுனிகளின் திருவடித் தாமரையிணையானது வித்வான்களின் முடிக்கு நித்ய பூஷணமாய் விளங்குகின்றதோ, யாவரொரு மாமுனிகளின் அடியார்களின் திருவடித்துகளின் லேசமும் ஸாம்ஸாரிக துக்கக் கடலை வற்றுவிக்கின்றதோ, கலி புருஷனுக்கு பயங்கரரும் ஹேயப்ரதிபடருமான அந்த மணவாள மாமுனிகளை நிச்சலும் தொழுகின்றேன்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

*** மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் ஸ்ரீவசன பூஷணத்தின் பெருமையை ஏழு பாசுரங்களினால் அமோகமாக அருளிச்செய்துள்ளார். "साङ्गाखिलद्रविडसंस्कृतरूपवेदसारार्थसंग्रहमहारसवाक्यजातम्। सर्वज्ञलोकगुरुनिर्मितमार्यभोग्यं वन्दे सदा वचनभूषणदिव्यशास्त्रम्—ஸாங்காகிலத்ரவிட ஸம்ஸ்க்ருத ரூபவேத ஸாரார்த்த ஸங்க்ரஹ மஹாரஸவாக்ய ஜாதம், ஸர்வஜ்ஞலோக குரு நிர்மித மார்ய போக்யம் வந்தே ஸதா வசந பூஷண திவ்ய சாஸ்த்ரம்." என்கிறபடியே திவ்ய சாஸ்த்ரமாக ப்ரஸித்தமான ரஹஸ்யக்ரந்தம் வியாக்கியான மின்றிக்கே பயன் படாதாதலாலும், *சச்சம் பிரதாயம் தாமுடையோர் கேட்டக்கால், மெச்சு வியாக்கியைகளுண்டாகில்—நச்சியதிகரியும்நீர் வசன பூடணத்துக்கற்ற மதியுடையீர்* என்று மாமுனிகள் தாமே யருளிச்செய்தபடி ஸத்ஸம்ப்ரதாய சுத்தியுள்ள வியாக்கியானம் அரிதாகி ஸ்வாமி யருளிச்செய்த வியாக்கியானமே விசதவாக் சிகாமணிகளென்கிற விருதை அந்வர்த்தமாக்க வல்லதாய் விளங்குகையாலும் இது ஸ்ரீவசன பூஷணத்திற்கு மிகச் சிறந்த பூஷணமாய் விளங்கும்படியை யருளிச்செய்கிறார் முதல் பாதத்தாலே. வஸ்துஸ்திதியில் மாமுனிகளின் வியாக்கியானம் அவதரித்ததில்லையாகில் ஸ்ரீவசந பூஷணம் காநநசந்த்ரிகையாகு மத்தனையிறே. திருவாக்கின் பெருமையைப் பேசின வனந்தரம் திருவடிகளின் பெருமையைப் பேசுகிறார் இரண்டாவது பாதத்தால். "கோலமாமென் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே" என்றும் "அடிச்சியோந் தலை மிசை நீயணியாய் ஆழியங் கண்ணாவுன் கோலப்பாதம்" என்றும் மநோரதிக்கை தவிர்ந்து மாமுனிகளின் திருவடிகளையே தம் தம் சென்னிக்கு மலர்ந்த பூவாகக் கொண்டிருப்பர்களாயிற்று மநீஷிணுமக்ரேஸரர்கள். இனி மூன்றாவது பாதத்தால் மாமுனிகளடியார்களின் ஸ்ரீபாத தூளிப்பெருமை சொல்லுகிறது. 'கடல் வற்றிற்று' என்னும் வார்த்தை ஒரு நாளும் கேட்டதில்லை. அது தன்னிலும் ரஜ:கணத்தாலே கடல் வற்றுகை ஸர்வாத்மநா அஸம்பாவிதம். "பறவையேறு பரம் புருடா! நீ யென்னைக் கைக்கொண்ட பின், பிறவியென்னுங் கடலும் வற்றி" என்று பெரியாழ்வாரருளிச்செய்தது அத்யுக்தியென்னலாம்படி ஸ்ரீமத் வரவரமுநி பக்தர்களின் ஸ்ரீ பாத தூளியின் ஏக தேசமே ஸாம்ஸாரிக ஸகல துக்க ஸாகரசோஷண நிபுணமாயிரா நின்றதென்கிறார். அடியார்களின் பாதரஜ: பரமாணு பராக்ரமமிதுவானால் ஸ்வாமியின் திருவடித் துகள் பெருமை கிம்புநர்ந்யாய ஸித்தமிறே. [அநகம்] ஸதாசார்ய லக்ஷண ஸம்பத்தியில் குறையற்றவரென்கை. ... ... (4)

यत्पादाम्बुजसंश्रयेण विमला यल्लब्धबोधोज्वला यत्सेवैकरसास्स्वशिष्यनिवहव्याप्ताखिलाशान्तराः।
प्रख्याता हि वरप्रदप्रभृतयस्ते नित्यसिद्धोपमास्तस्मात्कान्तवरान्मुनेरनुपमाद्दैवं परं नाद्रिये ॥ ५ ॥

யத்பாதாம்புஜஸம்ச்ரயேண விமலா யல்லப்தபோதோஜ்ஜ்வலா:
யத்ஸேவைக்த்யேகரஸாஸ் ஸ்வசிஷ்யநிவஹவ்யாப்தாகிலாசாந்தரா:
ப்ரக்க்யாதா ஹி வரப்ரதப்ரப்ருதயஸ் தே நித்யஸித்தோபமா:
தஸ்மாத் காந்தவராந்முநேரநுபமாத் தைவம் பரம் நாத்ரியே. (5)

நித்யஸித்தோபமா: வரப்ரதப்ரப்ருதய: தே யத் பாதாம்புஜ ஸம்ச்ரயேண விமலா:, யல்லப்த போத உஜ்ஜ்வலா:, யத்ஸேவைக்த்யேக ரஸா:, ஸ்வசிஷ்ய நிவஹ வ்யாப்த அகில ஆசாந்தரா:, தஸ்மாத் அநுபமாத் காந்த வராத் முநே: பரம் தைவம் நாத்ரியே.

நித்ய முக்தர்களையொத்த கோயிலண்ணன் முதலான அப்பெரியார்கள் யாவரொரு மாமுனிகளின் திருவடித் தாமரைகளைப் பற்றியதனால் நிர்மலர்களாயினரோ, யாவரொரு மாமுனிகள் பக்கலில் பெற்ற ஞானத்தினால் விளங்குகின்றார்களோ, யாவரொரு மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளிலேயே ரஸிகர்களாய் தங்கள் சிஷ்ய ஸமூஹங்களாலும் வியாபிக்கப்பட்ட ஸகல திங்மண்டலங்களையு முடையவர்களா யிருக்கின்றனரோ, அப்படிப்பட்ட நிகரற்ற மாமுனிகளிற் காட்டிலும் வேறொரு தெய்வத்தை ஆதரியேன்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

*** கோயிலண்ணன் முதலான சிஷ்யவர்க்கங்கள் பெருமை பெற்றதும் ஸ்வாமி ஸம்பந்தவிசேஷத்தினலேயே யென்கிறது இந்த சுலோகம். கோயிலண்ணனுக்கு வரதநாராயணரென்று திருநாமமாகையாலே தத்தேகதேசத்தையிட்டு வரப்ரதரென்கிறது. மேலே 8,14 சுலோகங்களிலும் வரதகுருவென்பது இவரையே. மற்றும் வானமாமலை ஜீயர் ஸ்வாமி, பட்டர்பிரான்ஜீயர் ஸ்வாமி முதலான உத்தமாச்ரமிகள் மாமுனிகள் திருவடிகளிலே ப்ரவணர்களாயிருக்க அவர்களைவிட்டு இவரையெடுத்தது இவரிடத்துள்ள அஸாதாரணமான பெருமையையிட்டு. அதாகிறதென்னென்னில், இவர் அபிஜந வித்யாவ்ருத்தங்களோடு கூட சிஷ்ய ஸம்பத்தும் மிக்கவராகையாலே தம்முடைய ஆசார்ய பும்ஸ்த்வத்தை ஒன்றாக மதியாதே ஸ்வாமி திருவடிகளில் சிஷ்ய வ்ருத்தியே தமக்கு உஜ்ஜீவநஹேது வென்று அறுதியிட்டு ஆச்ரயித்ததேயாம். நித்யமுக்தர்களையும் ச்வேதத்வீபவாஸிகளையு மொத்திருப்பவர்களான இவர்கள் ஸ்வாமிதிருவடிகளிலே யாச்ரயித்து நிர்மலஜ்ஞாந நிதிகளாகப் பெற்றார்கள். இவர்களுக்கு ஸகலார்த்த விஜ்ஞானமும் மாமுனிகள் பக்கலிலேயாயிற்று. மாமுனிகளுக்குப் பணிவிடை செய்கையொழிய வேறொன்றறியார்கள். தாங்களும் சிஷ்யவர்க்கங்களைத் திசை தோறும் படைத்தவர்கள். இத்தகைய சிஷ்ய ஸம்ருத்தி பொருந்தியவரான மாமுனிகளிற் காட்டிலும் வேறொரு தெய்வமிருப்பதாக மதிக்ககில்லேனென்றாராயிற்று. ... (5)

यत्सूक्त्येकरसा यदङ्घ्रियुगलीसेवैकहेवाकिनो यद्वात्सल्यदयादिसद्गुणगणाकूपारमग्नाशयाः ।
मन्यन्ते न परं विमुक्तिकरणं सन्तो यदालोकनात् तन्यात्स स शुभान्यवेलमहिमा कान्तोपयन्ता मुनिः ॥

யத்ஸூக்த்யேகரஸா யதங்க்ரியுகலீஸேவைகஹேவாகிந:
யத்வாத்ஸல்யதயாதிஸத்குணகணகூபாரமக்நாசயா:
மந்யந்தே ந பரம் விமுக்திகரணம் ஸந்தோ யதாலோகநாத்
தந்யாத்நஸ் ஸ சுபாந்யவேலமஹிமா காந்தோபயந்தா முநி:. (6)

யத்ஸூக்தி ஏக ரஸா: யத் அங்க்ரி யுகளீ ஸேவைக ஹேவாகிந: யத்வாத்ஸல்ய தயாதி ஸத்குண கண அகூபாரமக்நாசயா: ஸந்த: யத்ஆலோகநாத் பரம் விமுக்தி கரணம் ந மந்யந்தே, ஸ: அவேல மஹிமா காந்தோபயந்தா முநி: ந: சுபாநி தந்யாத்.	யாவரொரு மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளிலேயே ரஸிகர்களும், யாவரொருமாமுனிகளின் திருவடியிணைகளில் ஸேவைசெய்வதிலேயே ருசி ஹலங் கொண்டவர்களும்,யாவரொரு மாமுனிகளின் வாத்ஸல்யம் தயை முதலான ஸத்குணஸமூஹஸாகரத்திலே ஆழ்ந்த மனமுடையவர்களுமான ஸத்துக்கள் யாவரொருமாமுனிகளின் கடாக்ஷ வீக்ஷணத்திற்கு மேற்பட்ட முக்திஸாதன மிருப்பதாக நினைக்கின்றிலர்களோ, அப்படிப்பட்ட அளவு கடந்த வைபவம் வாய்ந்த மணவாளமாமுனிகள் நமக்கு நன்மைகளை வளர்த்தருளவேணும்.

*** கீழ் ச்லோகத்தில் கோயிலண்ணன் முதலான ஸச்சிஷ்யவர்க்க ப்ரஸ்தாவமுண்டாகவே அவர்களின் பெருமையைப் பரக்கப்பேசுவதும் ஸ்வாமியின் பெருமையிலே அந்தர்ப்பவிக்குமென்கிற தத்துவமுணர்ந்து இந்த சுலோக மருளிச்செய்கிறார். "ஸ்திதே அரவிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே" என்கிற ந்யாயத்தாலே மாமுனிகளின் திவ்யஸூக்திரஸாநுபவ மொழிய வேறொன்றறியார்கள். எம்பெருமானார் திருவடிகளில் கைங்கர்ய மொழிய வேறொன்றறியாத வடுக நம்பியைப்போலே மாமுனிகளின் திருவடிகளில் கைங்கர்யமல்லது வேறொன்றறியார்கள். பகவத் குணங்களிலும் ஈடுபடாதே மாமுனிகளின் திருக்கல்யாண குணங்களிலே யீடுபட்டிருப்பர்களாயிற்று. மாமுனிகளின் கடைக் கண்ணோக்கம்பட்டவளவிலே பேறு கைபுகுந்ததாக நினைப்பவர்களாயிற்று. இத்தகைய சிஷ்ய ஸம்ருத்தி வாய்ந்த மணவாளமாமுனிகளே நமக்குத் தஞ்சமென்றாராயிற்று. ... ... (6)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

यद्वाणी शठवैरिसूक्तितरुणीमाङ्गल्यदीपावलिः यद्वीक्षा स्वशरव्यसर्वजनतासर्वार्थचिन्तामणिः ।
यन्मूर्तिर्भजदार्तिभञ्जनचणां सूक्तिं विवक्त्यञ्जसा भूयान्नस्सततं स मे हृदि गुरुः कान्तोपयन्ता मुनिः ॥ ७ ॥

யத்வாணீ சடவைரிஸூக்திதருணீமாங்கல்யதீபாவலீ:
யத்வீக்ஷா ஸ்வசரவ்யஸர்வஜநதாஸர்வார்த்தசிந்தாமணி:,
யந்மூர்த்திர் பஜதார்த்திபஞ்ஜநசணும் ஸூக்திம் விவக்த்யஞ்ஜஸா
பூயாந்நஸ் ஸததம் ஸ மே ஹ்ருதி குரு: காந்தோபயந்தா முநி:. (7)

யத்வாணீ சடவைரிஸூக்தி தருணீ மாங்கள்ய தீபாவளீ:, யத்வீக்ஷா ஸ்வசரவ்ய ஸர்வ ஜநதா ஸர்வார்த்த சிந்தாமணி:, யந்மூர்த்தி: பஜத் ஆர்த்தி பஞ்ஜநசணும் ஸூக்திம் அஞ்ஜஸா விவக்தி, ஏஷ: மே குரு: காந்தோபயந்தா முநி: ந: ஹ்ருதி ஸததம் ஜீயாத்.

யாவரொரு மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தியானது திருவாய் மொழியாகிற தருணியின் மங்கலஸூத்ரத்தை விளக்கும் தீபமாலிகை போல் விளங்குகின்றதோ, யாவரொரு மாமுனிகளின் கடாக்ஷமானது தனக்கு இலக்கானு ரெல்லார்க்கும் ஸர்வார்த்த ஸாதகமாகின்றதோ, யாவரொரு மாமுனிகளின் திருமேனியானது பக்தர்களின் விடாயைத் தீர்க்கவல்ல ஸ்ரீஸூக்தி வெளிவரப்போகின்ற தென்பதை நன்கு தெரிவிக்கின்றதோ, அந்த மதாசார்ய ச்ரேஷ்டரான மாமுனிகள் நம்முள்ளத்தில் நிச்சலும் விளங்குக.

*** மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திப் பெருமை, தத்கடாக்ஷவீக்ஷண மஹிமை, திருமேனியின் ஒளிவிளக்கம் ஆகிய இம்மூன்றையும் விலக்ஷணமாக ப்ரசம்ஸிக்கிறார் இதில். திருவாய் மொழிக்குப் பல வியாக்கியானங்கள் அவதரித்திருந்தாலும் மாமுனிகளின் ரஹஸ்ய வ்யாக்கியான திவ்யஸூக்திகள் அவதரித்திலவாகில் அவை நிஷ்ப்பலமே யாகுமென்பதை முதல்பாதம் மூதலிக்கின்றது. மாமுனிகளின் கடாக்ஷத்திற்கு இலக்கானவாறே அவரவர்கள் ஸர்வார்த்த தத்வ வித்துக்களாவர் என்னுமிடத்தை இரண்டாம்பாதம் மூதலிக்கின்றது. அவருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவித்தவாறே *ரூபமேவாஸ்யைதந் மஹிமாநம் வ்யாசஷ்டே* என்று வேதமோதின கணக்கிலே திருவுள்ளத்திலே அபரிமிதங்களான அர்த்த விசேஷங்கள் பொதிந்து கிடக்கின்றன வென்னுமிடம் தெரியவருமென்கிறார் மூன்றாவது பாதத்தாலே. இத்தகைய வைபவம் வாய்ந்த ஆசார்ய ஸார்வபௌமர் தம்முடைய உள்ளத்துள்ளே உறைந்தருள வேணுமென்கிற பிரார்த்தனையோடே தலைக்கட்டினபடி. ... (7)

अवाग्भूषाजुष्टैरभुवनगुरुप्रेमभरितैरमूलक्षोद्भूतैरवरदगुरूपासितपदैः ।
कृतं तैस्तैस्सर्वैर्गुरुभिरमहायोगिभिरिति व्यवस्यन्तस्सन्तो हृदि मम लसन्तु प्रतिकलम् ॥ ८ ॥

அவாக்பூஷாஜுஷ்டை: அபுவநகுருப்ரேமபரிதை:
அமூலர்க்ஷோத்பூதை: அவரதகுருபாஸிதபதை:
க்ருதம் தைஸ் தைஸ் ஸர்வைர் குருபிரமஹாயோகிபிரிதி
வ்யவஸ்யந்தஸ் ஸந்தோ ஹ்ருதி மம லஸந்து ப்ரதிகலம். (8)

அவாக்பூஷாஜுஷ்டை: அபுவந குருப்ரேம பரிதை: அமூலர்க்ஷ உத்பூதை: அவரதகுரு உபாஸித பதை: அமஹாயோகிபி: தைஸ் தை: ஸர்வை: குருபி: க்ருதம் இதி வ்யவஸ்யந்த: ஸந்த: மம ஹ்ருதி ப்ரதிகலம் லஸந்து.

ஸ்ரீவசன பூஷணத்தில் அன்வயமில்லாதவர்களும், பிள்ளையுலகாசிரியர் பக்கலிலே பக்தியற்றவர்களும் திருமூலத் திருநாளில் அவதரியாதவர்களும் கோயிலண்ணன் வழிபாடு செய்யப் பெறாதவர்களும் பெரிய ஜீயரென்று திருநாமம் பெறாதவர்களுமான அவ்வோ ஆசாரியர்களால் பயனொன்று மில்லையென்று அத்யவஸாயங் கொண்டிருக்கின்ற பெரியார்கள் என்னுள்ளத்தில் அநுக்ஷணமும் விளங்குவார்களாக.

*** இதுவொரு விலக்ஷணபக்தி விசேஷ ப்ரகாசகமான ச்லோகரத்னம். திருமங்கையாழ்வார் "கடன்மல்லைத் தலசயனத் துறைவாரை எண்ணாதே யிருப்பாரை இறைப்பொழுது

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மெண்ணேமே'' என்றும், "கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் கழல்சூடி அவனை யுள்ளத்தெண்ணாத மானிடத்தை யெண்ணாத போதெல்லாமினியவாறே" என்றும், "ஆன்விடை யேழன் றடர்த்தாற்கு ஆளானார் அல்லாதார் மானிடவரல்ல ரென்று என்மனத்தே வைத்தேனே" என்றும் அருளிச்செய்த கட்டளையிலே வ்யதிரேகோக்தியாலே அருளிச்செய்கிறவிது பக்தியின் கனத்தைக்காட்டும். ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்திரத்தில் ப்ரதிபத்தியற்ற ஆசாரியர்களைப் பணிந்து பயனென்கொல? பிள்ளை லோகாசாரியர் பக்கலிலே பக்தியற்ற குரவர்களைப்பேணி ப்ரயோஜனமென்? "ஆண்மூலம் அரசாளும்'' என்னும் பெருமைவாய்ந்த திருமூல நன்னாளில் தோன்றுதவர்களைத் தொழுது பெறும்பலனென்? கோயிலண்ணனென்னும் மஹாசாரியர் அபிஜநவித்யா வ்ருத்தாவலேபதுரஸ்தராய்த் தொழுது வழிபாடு செய்யப்பெறாத ஆசிரியரை ஆச்ரயிப்பதனால் என்னாகும்? பெரிய ஜீயரென்று பெருமைப் பெயர் பெறாதாரைப் பணிந்துபெறும் பேறு என்கொல்? என்று இங்ஙனே துணிந்து இதராசார்ய ஸேவையில் விரக்திகொண்டு மணவாள மாமுனிகளையே தஞ்சமாகக் கொண்டிருக்கும் பரமபாக்யசாலிகள் என்னுள்ளத்துள்ளே உறைய வேணுமென்றாயிற்று. க்ருதம் என்பது 'அலம்' என்பதற்குப் பர்யாயமான ஓர் அவ்யயம். ... ... (8)

न खल्ववरयोगिनां भजनतः फलस्योद्भवः तदन्यविमुखास्सदा वरमुनिं भजध्वं जनाः! ।
तदङ्घ्रिभजनं सकृत्कृतमशेषतो दुष्कृतं निवारयति भूयसीं श्रियमनुत्तमां पुष्यति ॥ ९ ॥

ந கல்வவரயோகிநாம் பஜநத: பலஸ்யோத்பவ:
ததந்யவிமுகாஸ் ஸதா வரமுநிம் பஜத்வம் ஜநா:!,
ததங்க்ரிபஜநம் ஸக்ருத் க்ருதமசேஷதோ துஷ்க்ருதம்
நிவாரயதி பூயஸீம் ச்ரிய மநுத்தமாம் புஷ்யதி. (9)

அவரயோகிநாம் பஜநத: பலஸ்ய உத்பவ: ந கலு; ஹே ஜநா:! தத் அந்யவிமுகா: வரமுநிம் ஸதா பஜத்வம்; ததங்க்ரி பஜநம் ஸக்ருத் க்ருதம் (ஸத்) துஷ்க்ருதம் அசேஷத: நிவாரயதி; அநுத்தமாம் பூயஸீம் ச்ரியம் புஷ்யதி.

மணவாள மாமுனிகளல்லாதாரைத் தொழுவதனால் பெறலாகும் பேறு ஒன்றுமில்லை கிடீர்! ஓ உலகர்களே! பிறரைப் பணியாதே மாமுனிகளையே நிச்சலும்பணிமின்; அந்த மணவாள மாமுனிகளின் ஸேவை ஒருகால் செய்யப்பட்டவளவில் பாபத்தை யெல்லாம் நிச்சேஷமாகப் போக்கி, மிகச் சிறந்த அளவற்ற நன்மையைத் தரவல்லது.

*** அவரயோகிநாம் என்பதற்கு இரண்டு பொருள். வரயோகிநோ ந பவந்தீதி அவரயோகிந:; வரவரமுனி யல்லாதார் என்றபடி. (மற்றொரு பொருளாவது) அவர சப்தம் தாழ்ந்ததென்கிற பொருளைக்கொண்டது. கீதையில் நான்காமத்யாயத்தில் "அவரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத:'' என்றது காண்க. உயர்த்தியற்ற யோகிகளைப் பணிவதால் பயனொன்றுமில்லையென்கிற பொருளும் தொனிக்கும். அன்னவர்களைப் பணிவதை விட்டு ஸ்ரீவரயோகியையே பணிமின் என்றதாயிற்று. மாமுனிகளைப் பணிவதால் பெறும் பேறு சொல்லுகிறது உத்தரார்த்தத்தால். அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வகமான இஷ்ட ப்ராபணம் பெறலாகுமென்கிறார். "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி'' என்ற அவனுடைய வார்த்தை ப்ரதிஜ்ஞாமாத்ரமாய் நிற்கும். இங்கு அங்ஙனன்றிக்கே பேறு கைமேலே காணலாகும். [அநுத்தமாம்.] 'ந வித்யதே உத்தமா யஸ்யாஸ் ஸா' என்கிற வ்யுத்பத்திகாண்க. மிகச் சிறந்ததென்கை. [பூயஸீம்] அத்யந்தம் பஹ்வீ—பூயஸீ. இங்கு ஸ்ரீசப்தத்தாலே விவக்ஷிதம் "ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்'' என்பதாகும். ஐஹிகாமுஷ்மிகங்களான ஸகலைச்வர்யங்களையும் சொல்லக்கடவதாயினும் ஆமுஷ்மிகைச்வர்யமே இங்கு முக்கியமாக விவக்ஷிதம். ... (9)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

सुधाहारासारीकरणचणयत्सूक्तिलहरीगरीयस्तां स्तोतुं प्रभवति न वाचस्पतिरपि ।
स नस्तन्यादन्यादृशमहिमशाली वरवरो मुनीन्द्रो निस्तन्द्रः कुशलमनुवेलं गुरुवरः ॥ १० ॥

ஸுதாஹாராஸாரீகரணசணயத்ஸூக்திலஹரீ-
கரீயஸ்தாம் ஸ்தோதும் ப்ரபவதி ந வாசஸ்பதிரபி,
ஸ நஸ் தந்யாத் அந்யாத்ருசமஹிமசாலீ வரவரோ
முநீந்த்ரோ நிஸ்தந்த்ர: குசலமநுவேலம் குருவர: (10)

ஸுதா ஆஹார அஸாரீ கரண சண யத்ஸூக்திலஹரீ கரீயஸ்தாம் ஸ்தோதும் வாசஸ்பதிரபி ந ப்ரபவதி; ஸ: அந்யாத்ருச மஹிமசாலீ குருவர: நிஸ்தந்த்ர: வரவரோ முநீந்த்ர: அநுவேலம் ந: குசலம் தந்யாத்.

தேவர்களுக்கு உணவான அமுதத்தை அஸார மாக்கவல்லதான யாவரொரு மாமுனிகளின் ஸ்ரீஸூக்திப்ரவாஹத்தின்காம்பீர்யத்தைப் புகழ்வதற்கு ப்ருஹஸ்பதியும் அஸமர்த்தரோ, அத்தகைய ஒப்பில்லாப் பெருமை வாய்ந்த ஆசார்ய ச்ரேஷ்டரும் சோர்வு சோம்பலில்லாதவருமான மணவாள மாமுனிகள் அநுக்ஷணமும் நமக்கு நன்மை பயந்தருள வேணும்.

*** இந்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்தில் அருளிச்செய்யும் அர்த்தத்தில் அதிசயோக்திலேசமும் கிடையாதென்பதை அநுபவ ரஸிகர்கள் தாம் அறியக்கடவர்கள். ஆசிரியர் தாம் அநுபவித்த ரீதியை அந்யூநாதிரிக்தமாகப் பேசி வைத்தபடி. ஸுதாஹாரமென்று தேவபோக்யமான அம்ருதத்தைச்சொல்லுகிறது. அதையும் அஸாரமென்று தள்ளும்படியாகச்செய்வது மாமுனிகளின் திவ்யஸூக்தி கங்காப்ரவாஹம். அதன் பெருமையைப் பற்றிப் பேசவேணுமானல் வாசஸ்பதியென்று பேர் பெற்ற ப்ருஹஸ்பதியும் வல்லவனல்லன். இந்நிலவுலகத்தாரைப் பற்றிச் சொல்லவேணுமோ? சொல்லில், "மஹாகஜா: பலாயந்தே மசகாநாம் து கா கதி:" என்னலாமத்தனை. [கரீயஸ்தாம்] அத்யந்தம் குர்வீ - கரீயஸீ; தஸ்யா: பாவ:- கரீயஸ்தா. மிக்க பெருமையென்றபடி. அநந்வயாலங்காரமொன்றுக்கே லக்ஷ்யமானதென்று சொல்லி நிற்கவேண்டுமத்தனை. [அந்யாத்ருச மஹிமசாலீ] அந்யாத்ருசம், அத்யத்புதம், அதிவிலக்ஷணம் என்பதெல்லாம் வாசாமகோசர மென்கைக்குப் பர்யாயமென்க. [நிஸ்தந்த்ர:] ஸுதர்சநசதகத்தில் பலச்ருதியில்லாத சுலோகமே கிடையாது; ஒவ்வொரு சுலோகத்திலும் ஒவ்வொரு விதமான பலன் கூறப்படுகிறது. அதில் (சுலோ.95) "ஸ தநுஜவிஜயீ ஹந்து தந்த்ராலுதாம் வ:" என்றுள்ளது. 'உங்களுடைய சோம்பலைத் தவிர்க்கவேணும்' என்று ஆசாஸிக்கிறபடி, வஸ்து ஸ்திதியில் சோம்பலை வெல்லுவதென்பது ஒரு தேவதாப்ரஸாதமடியாகவே விளையவேண்டிய பேறு என்னுமிடம் இதனால் தெரிவித்ததாகிறது. யாரும் உபதேசத்தில் மிகமிக வல்லவர்களாயிருக்கலாம்; ஸ்வாநுஷ்டானத்தில் தந்த்ரையே இடையூறாகி நிற்கும். மாமுனிகள் பக்கலிலே உபதேசம் போலே அனுஷ்டானமும், அனுஷ்டானம் போலே உபதேசமும் ஒருங்கே விளங்குமென்று சொல்லிற்றாயிற்று. அநுவேலம்—அநுக்ஷணமென்றபடி.. ... ... (10)

कलानिधिशिरोमणिर्जितमनोभवस्सद्वचस्सुधाशनतरङ्गिणीं दधदनारतं मूर्धनि ।
शिवोऽपि यदुपाश्रितो विषमदृष्टितादूरगस्स मे दिशतु मङ्गलं वरवरो मुनीनां वरः ॥ ११ ॥

கலாநிதிசிரோமணிர் ஜிதமநோபவஸ் ஸத்வசஸ்-
ஸுதாசநதரங்கிணீம் ததததநாரதம் மூர்த்தநி,
சிவோபி யதுபாச்ரிதோ விஷமத்ருஷ்டிதாதூரக:
ஸ மே திசது மங்கலம் வரவரோ முநீநாம் வர:. (11)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யத் உபாச்ரித: கலாநிதி சிரோமணி: ஜிதமநோபவ: ஸத்வசஸ் ஸுதாசந தரங்கிணீம் அநாரதம் மூர்த்நி ததத் சிவோபி விஷமத்ருஷ்டிதாதூரக: (பவதி) ஸ: முநீநாம் வர: வரவர: மே மங்கலம் திசது.

யாவரொரு மாமுனிகளை யாச்ரயித்த சிஷ்யவர்க்கம் சந்திரனை சிரோபூஷணமாக வுடைத்தாயும் (2) வித்வான்களுக்குள்ளே தலைமை பெற்றதாயும், மன்மதனை ஜயித்ததாயும் (2) காமவேதனைக்கு வசப்படாததாயும், ஸ்ரீஸூக்தியாகிற தேவகங்கையை எப்போதும் தலையில் தாங்கியிருப்பதாயும், சிவனுயிருக்கச்செய்தேயும் விஷமத்ருஷ்டி வைதேசிகமாயுமுள்ளதோ, அந்த மணவாள மாமுனிகள் அடியேனுக்கு நன்மை பயக்கவேணும்.

*** மணவாள மாமுனிகளின் சிஷ்ய வர்க்கத்திற்குச் சில வகைகளாலே சிவ ஸாதர்மியமும், ஒரு வகையாலே சிவ வைதர்மியமும் ஆலங்காரிக ஸஹ்ருதய ஹ்ருதய ஹாரியாக வருளிச்செய்கிறுரிதில். [கலாநிதி சிரோமணி:] 'கலாநிதி: சிரோமணி: யஸ்ய ஸ:' என்கிற பஹுவ்ரீஹியாலே சந்த்ரசேகரனுன சிவனைச்சொல்லுகிறது. மாமுனிகளின் சிஷ்ய வர்க்கம் கலாநிதீநாம் [வித்யாநிதீநாம்] சிரோமணியாயிருக்கிறபடி. ஏவஞ்ச கலாநிதி சிரோமணித்வத்தாலே ஸாதர்மியம். [ஜிதமநோபவ:] சிவன் மன்மதனை வென்றவனென்பது ப்ரஸித்தம். சிஷ்யவர்க்கம் காமக்ரோதாதி துர்க்குணங்களை வென்றிருப்பதாம். * காமாதி தோஷ ஹரமாத்மபதாச்ரிதாநாம் * மதாஸதைர் ந க்லிச்யந்தே யதிச்வரஸம்ச்ரயா: * இத்யாதிகளை நினைப்பது. [ஸத்வசஸ் ஸுதாசந தரங்கிணீமித்யாதி.] ஸுதாசநாநாம் தேவாநாம் தரங்கிணீ— நதீ. (அதாவது) தேவகங்கை. அதைத் தன்சடைமுடியில் தரிப்பவன் சிவபிரான். சிஷ்யவர்க்கமோ வென்னில் மாமுனிகள் ஸாதித்தருளும் ஸ்ரீஸூக்தி ப்ரவாஹமாகிற கங்கையை " அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொண்டதே " என்னும்படி கொள்ளவல்லதென்கை. ஆக இவ்வளவும் ஸாதர்மியம் சொன்னபடி. இனி வைதர்ம்யமொன்று சொல்லுகிறது. [சிவோபி விஷமத்ருஷ்டிதாதூரக:] சிவன் முக்கண்ணனுகையாலே விஷமத்ருஷ்டியாயிருப்பன். ஸமமல்லாதது விஷமம்; ஒற்றைப்பட்ட கண்ணையுடையவனென்கை. ஸ்வாமி சிஷ்யவர்க்கம் விஷமத்ருஷ்டிவைதேசிகம். வ்யதிகரண ஜ்ஞானமின்றிக்கே ஸமாநாதிகரண ஜ்ஞாந நிதியென்கை. சிவ: என்பது ருத்ரனிடத்திலே நாமமாத்ரம்; ப்ரக்ருதே மங்களஸநாமாகர மென்றபடி. இப்படிப்பட்ட சிஷ்ய ஸம்ருத்திவாய்ந்த மணவாள மாமுனிகள் அடியேனுக்கு நன்மைகளை நல்கியருளவேணும். ... ... (11)

कल्याणाचलधर्मभागसमगुर्यत्संश्रितो भूतिमान् बिभ्रच्छुभ्रकलानिधेरविकलां मूर्ध्ना गिरीशः कलाम् ।
क्लृप्ताहीनविभूषण स्स्मरजितस्सायुज्यमाटीकते सोऽव्यान्नस्सततं मुनिर्वरवरोऽनन्यार्हतेजोनिधिः ॥ १२ ॥

கல்யாணசலதர்மபாக்அஸமகுர் யத்ஸம்ச்ரிதோ பூதிமாந்
பிப்ரச் சுப்ரகலாநிதேரவிகலாம் மூர்த்நா கிரீச: கலாம்
க்லுப்தாஹீநவிபூஷணஸ் ஸ்மரஜிதஸ் ஸாயுஜ்யமாடீகதே
ஸோவ்யாந்நஸ் ஸததம் முநிர்வரவரோநந்யார்ஹதேஜோநிதி: (12)

யத்ஸம்ச்ரித: கல்யாணசல தர்மபாக் அஸமகு: பூதிமாக் க்லுப்த அஹீநவிபூஷண: சுப்ரகலாநிதே: அவிகலாம் கலாம் மூர்த்நா பிப்ரத் கிரீச: ஸ்மரஜித: ஸாயுஜ்யம் ஆடீகதே, அநந்யார்ஹதேஜோநிதி: ஸ: வரவர: முநி: ந: ஸததம் அவ்யாத்.

யாவரொரு மாமுனிகளைப் பணிந்த சிஷ்யவர்க்கமானது மேருமலையோடொத்த நிறத்தை யுடைத்தாய், (2) ஸத்யாதிகளிலே சலியாத நிஷ்டையை யுடைத்தாய், ஒப்பற்ற எருதை யுடைத்தாய், (2) ஒப்பற்ற திருவாக்கை யுடைத்தாய், நீறணிந்ததாய் (2) ஐச்வர்ய முடைத்தாய், நாகபூஷண பூஷிதமாய், (2) சிறந்த ஆத்மாலங்கார பூஷிதமாய், கலாநிதியின் விமலமான கலையைத் தலையால் தாங்குமதாய், கைலாஸபதியாய், (2) வாக்கில் வல்லமை பெற்றதாய், சிவனுேடு ஒப்புமையை யடைந்துள்ளதோ, தமக்கே உரியதான தேஜஸ்ஸுக்கு நிதியான அம் மணவாளமா முனிகள் நம்மை எப்போதும் காத்தருள்க.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

*** இந்த ச்லோகத்தினுல் மணவாள மாமுனிகளின் சிஷ்யவர்க்கத்திற்கு சிவபெருமானோடு ஸாம்யம் ச்லேஷபங்கியாலே பேசப்படுகிறது. ஆறு விசேஷணங்களினுல் சிலேடை அமைக்கப்பட்டுள்ளது. [கல்யாணசலதர்மபாக்] கல்யாணமென்று ஸுவர்ணத்திற்கும் பெயராகையாலே கல்யாணசலமென்று மேரு பர்வதத்தைச்சொல்லுகிறது; அதனுடைய தர்மமாவது ஸாதர்மியம்; அதை யடைந்தவன் சிவபெருமான். * பொன் திகழுமேனிப்புரி சடையம் புண்ணியன் *என்கிற பொய்கையார் பாசுரப்படியும், * நின்கூறு கொண்ட தழல்நிறவண்ணன் *என்கிற திருமங்கையாழ்வார் பாசுரப்படியும் மேருமலையின் நிறம்போன்ற நிறத்தையுடையனுகையாலே சிவனைக் கல்யாணசல தர்மபாக்காகச் சொல்லிற்று. இனி வரவரமுநி சிஷ்யவர்க்க பக்ஷத்தில், பக்திஸாதனங்களாகச் சொல்லப்பட்ட விவேக விமோகாப்யாஸக்ரியா கல்யாணநவஸாதாநுத்தர்ஷங்களாகிற ஏழில் 'ஸத்யார்ஜவ தயாதாந அஹிம்ஸா அநபித்யா: ஷட் கல்யாணி'' என்கிறபடியே ஸத்யம் ஆர்ஜவம் தயை தானம் அஹிம்ஸை அநபித்யை என்கிற ஆறு நலங்களும் கல்யாண சப்தவாச்யமாகையாலே அந்த கல்யாணத்தையும், சலியாத தர்மநிஷ்டையையும் உடையதென்கை. असमः गौः यस्य सः— असमगुः। ஒப்பற்ற வாஹனமான ரிஷபத்தையுடையவன் சிவன். நாநார்த்தகமான गो (கோ) சப்தத்திற்குக் கண்ணும் பொருளாகையாலே விஷமவிலோசனன் என்றதாகவுமாம். சிஷ்யப்ருந்த பக்ஷத்தில் கோசப்தத்திற்கு வாக்கென்று பொருளாய், ஒப்பற்ற வாக்கென்று பொருளாய் ஒப்பற்ற வாக் வைபவமுடையதென்கை. [பூதிமாந்] பூதியென்று பஸ்மத்திற்கும் ஐச்வர்யத்திற்கும் பெயராகையாலே, சிவன் பஸ்மதாரி, சிஷ்யவர்க்கம் ஐச்வர்யசாலி என்றதாகிறது. [சுப்ர கலாநிதே: அவிகலாம் கலாம் மூர்த்நா பிப்ரத்] சிவன் பிறை தங்கு சடையானுகையாலே கலாநிதியான சந்திரனுடைய கலையைத் தலையால் சுமப்பவன். சிஷ்யவர்க்கமோ வென்னில்; விசுத்த ஸகலகலா வல்லபரான மாமுனிகளின் நிரவத்யமான ஸ்ரீஸூக்தியை சிரஸா வஹிப்பதாம். [கிரீச:] "கிரீசோ கிரிசோ ம்ருட:" என்கிற அமரகோசத்தின்படியே கைலாஸபதித்வத்தாலே கிரிசனுயிருப்பன் சிவன். ஸ்வாமியின் சிஷ்ய ஸங்கமோவென்னில், [கிரி ஈச:] ரேபாந்தமான கிர் சப்தம் வாக்கென்னும் பொருளுடையது. கிரி என்று ஸப்தமியாய், வாக்கிலே என்றபடி. வாக்கில் வல்லவர்களென்கை. [க்லுப்தஅஹீநவிபூஷண:] சிவன் நாகபூஷணனுகையாலே க்லுப்தமான அஹீநவிபூஷணத்தையுடையவன். அஹி-ஸர்ப்பம்; இந-ச்ரேஷ்டம். சிஷ்யப்ருந்த பக்ஷத்தில் அஹீந—ஹீநமல்லாத [உயர்ந்த] பூஷணம்—சமதமாதி ஆத்மகுணங்களையே பூஷணமாகக்கொண்டதென்கை. ஆக இவ்வகைகளாலே [ஸ்மரஜிதஸ் ஸாயுஜ்யம் ஆடிகதே] காமனைவென்ற சிவனையொத்திரா நின்றது. இத்தகைய சிஷ்யவர்க்க ஸமந்விதரும், தமக்கேயுரித்தான தேஜஸ்ஸையுடையவருமான மணவாள மாமுனிகள் நம்மை எஞ்ஞான்றும் காத்தருளவேணுமென்றதாயிற்று. ... ... (12)

यद्भक्तो नाभिभूतो मदनमथनकृद्वाग्विलासैकभूमिः नालीकस्थोऽकृतोक्तिव्यवहृतिचतुरास्यत्वसंप्राप्तभूमा संप्राप्यानन्यलभ्यां कमलभवतुलामेधते सत्यधामा सोऽव्यान्नः क्षान्तिसिन्धुर्निरवधिमहिमा सौम्यजामातृयोगी ॥ १३ ॥

யந்பக்தோ நாபிபூதோ மதநமதநக்ருத் வாக்விலாஸைகபூமி:
நாலிகஸ்தோக்ருதோக்திவ்யவஹ்ருதிசதுராஸ்யத்வஸம்ப்ராப்தபூமா
ஸம்ப்ராப்யாநந்யலப்யாம் கமலபவதுலாமேததே ஸத்யதாமா
ஸோவ்யாந்ந: க்ஷாந்திஸிந்துர் நிரவதிமஹிமா ஸௌம்யஜாமாத்ருயோகீ. (13)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யத்பக்த: நாபி பூத: மதநமதநக்ருத்
வாக்விலாஸ ஏகபூமி: நாலீகஸ்த:
அக்ருதஉக்தி வ்யவஹ்ருதி சது
ராஸ்யத்வ ஸம்ப்ராப்தபூமா
ஸத்யதாமா (ஸந்) அநந்யலப்
யாம் கமலபவதுலாம் ஸம்
ப்ராப்ய ஏததே, க்ஷாந்தி ஸிந்து:
நிரவதிமஹிமா ஸ: ஸௌம்ய
ஜாமாத்ருயோகீ ந: அவ்யாத்.

யாவரொரு மாமுனிகளின் சிஷ்யவர்க்கமானது திருநாபியிலி ருந்து தோன்றினதாய் (2) எங்கும் அபிபவ மடையாததாய், மன்மத ஹந்தாவான ருத்ரனை யுண்டுபண்ணுமதாய் (2) காமாதி தோஷ ஹாரியாய், ஸரஸ்வதீ விலாஸத்திற்கு முக்ய யாஸ்பதமாய், தாமரை மலரிலிருப்பதாய் (2)பொய்ம்மொழி யொன்றில்லாததாய், நான்கு வேதங்களையும் உச்சரிப்பதற் காக நான்கு முகங்களை யுடைத்தாய், (2) வேதவ்யவஹார சதுரமான திருமுக மண்டலத்தை யுடைத்தாய்; ஸத்ய லோகத்தை இருப்பிடமாகவுடைத்தாய் (2) ஸத்யமான பெரு மையை யுடைத்தாய்க்கொண்டு(இவ்வகைகளாலே) பிறர்க்கு அரிதான பிரமனுடைய ஸாம்யத்தையடைந்து விளங்கு கின்றதோ, பொறுமைக் கடலாய் எல்லை கடந்த வைபவ முடையரான அந்த மணவாள மாமுனிகள் நம்மைக் காத் தருள்க.

*** மணவாள மாமுனிகளின் சிஷ்யவர்க்கம் நான்முகனை யொத்திருப்பதாக அதிம னோஹரச்லேஷ பங்கியாலே யருளிச்செய்கிறார். இந்த சதுர்முக ஸாம்யத்தை ஆறு விசேஷ ணங்களாலே மூதலிக்கிற அழகு வித்வான்கள் ரஸிக்கவே நிலமானது. [நாபி பூத:] திசை முகன் கொப்பூழ்ச் செந்தாமரைமேல் தோன்றினவனென்பது ப்ரஸித்தம். மாமுனிகளின் பக்தவர்க்கம் [ந அபிபூத:] नैकशब्दवत् नशब्देन समासः। *லாபஸ் தேஷாம் ஜயஸ் தேஷாம் குதஸ் தேஷாம் பராபவ:*என்னுமாபோலே எங்கும் என்றும் திரஸ்காரமடையகில்லாதது. அபிபூத:—திரஸ்க்ருத:- [மதந மதந க்ருத்] मदनं मथ्नातीति मदनमथनः— காமனுடலெரித்த சிவனைச் சொல்லுகிறது. तं करोतीति मदनमथनकृत्— *நான் முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான் *என்கிறபடியே சிவனைப் படைத்தவன் சதுமுகனிறே. பக்த வர்க்கமோவென்னில் मदनस्य मथनकृत्— காமாதி தோஷங்களைத் தொலைக்கவல்ல தென்கை. [வாக் விலாஸைகபூமி:] பிரமன் ஸரஸ்வதீவல்லபனாகையாலே தன் மனைவியான அவளுடைய விப்ரமங்களுக்கு ஆஸ்பதமாயிருப்பன். பக்தவர்க்கம் திருநாவீறுடைத்தாயிருக்கும்படியைச் சொன்னதாகிறது. [நாலீகஸ்த:] நாளீகமென்று தாமரைக்குப் பெயர். அதிலேயிருப்பவன் பிரமன். பக்தவர்க்கமோவென்னில்; [ந அலீகஸ்த:] *अलीकं त्वप्रियेऽनृतम्— அலிகம் த்வப்ரி யேந்ருதம்*என்கிற அமரகோசத்தின்படியே அஸத்யோக்தியையும் அப்ரியோக்தியையும் அறியாதது. *ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம்* என்கிற நிஷ்டை யையுடைத்தென்கை. [அக்ருதோக்தி வ்யவஹ்ருதி சதுராஸ்யத்வ ஸம்ப்ராப்த பூமா] பிரமன் நான் முகனென்னும் பெயரையுடையவனாகையாலே சதுராஸ்யன், சதுராநநன்—நான்கு முகங் களையுடையவனென்றபடி. எதற்காக நான்கு முகங்கள் பெற்றனனென்னில், அக்ருதோக் திவ்யவஹ்ருதயே— அக்ருதோக்தியென்று நித்யாபௌருஷேயமான வேதத்தைச்சொல்லுகிறது. நான்கு வேதங்களையும் ஸ்வரவிபர்யய மின்றிக்கே உச்சரிப்பதற்குப் பாங்காக நான்கு முகங் களைப்பெற்று அதனால் பெருமை படைத்தவன் பிரமன். பக்த வர்க்கமோ வென்னில், [சது ராஸ்ய] என்பதிலே 'சதுர ஆஸ்ய' என்று விபாகம் கொள்வது. வேதவ்யவஹார சதுரமான திருமுகமண்டல முடைமையாலே பெருமை பெற்றதென்கை. [ஸத்ய தாமா] ஸத்ய பதத் தாலே ஸத்யலோகம் விவக்ஷிதம். அதனை யிருப்பிடமாகவுடையவன் பிரமன். பக்தவர்க்கமோ வென்னில், * गृहदेहत्विट्प्रभावा धामानि * என்கிற அமரகோசத்தின்படியே தாம சப்தம் ப்ரபாவபரமாய் சொன்ன சொன்ன ஏற்றமெல்லாம் ஸத்யமாயிருக்கப் பெற்றதென்கை. * அப்கதமதம்ாநை ரந்திமோபாய நிஷ்டை; * இத்யாதி ச்லோக ரத்னப்ரஸித்தமான பெருமைகள் அதிசயோக்தியன்றிக்கே யதாபூதார்த்த கதனமாயிருக்கை. இத்தகைய பெருமை வாய்ந்த சிஷ்யர்களாலே ஸேவிதரான மாமுனிகள் நம்மைக் காத்தருள வேணுமென்றாராயிற்று. (13)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

शिरसि वहतां यत्पादाम्भः कलानिधिमौलिता जयति वरदाचार्यादीनामनन्यसमाश्रया ।
स हि वरमुनिस्साक्षान्नारायणस्तत एव तच्चरणशरणास्सर्वेऽप्युर्व्यां तरन्ति भवार्णवम् ॥ १४ ॥

சிரஸி வஹதாம் யத்பாதாம்ப: கலாநிதிமௌலிதா
ஜயதி வரதாசார்யாதீநாம் அநந்யஸ்மாச்ரயா,
ஸஹிவரமுநிஸ் ஸாக்ஷாந்நாராயணஸ் ததஏவ தச்
சரணசரணஸ் ஸர்வேப்யுர்வ்யாம் தரந்தி பவார்ணவம். (14)

யத்பாத அம்ப: சிரஸி வஹதாம் வரதாசார்ய ஆதீநாம் அநந்ய ஸமாச்ரயா கலாநிதி மௌலிதா ஜயதி, ஸஹிவரமுநி: ஸாக்ஷாத் நாராயண: தத: ஏவ உர்வ்யாம் தச்சரணசரணா: ஸர்வே அபி பவஅர்ணவம் தரந்தி.

யாவரொரு மாமுனிகளின் ஸ்ரீபாத தீர்த்தத்தை மிகவும் கௌரவிக்கின்ற கோயிலண்ணன்முதலானோர்க்கு, பிறர்க்கு அரிதான கலாநிதிமௌலியென்னும் பெருமை விளங்குகின்றதோ, அந்த மணவாள மாமுனிகள் ஸாக்ஷாத் நாராயணனே யாவர், ஆகவேதான் இந்நிலவுலகில் அந்த மாமுனிகளின் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றினவர்களெல்லாரும் பிறவிக் கடலைக் கடக்கின்றனர்.

*** மணவாள மாமுனிகளினடியார்களுக்கு சிவஸாம்யமும் சதுர்முகஸாம்யமும் சொல்லிற்றிலே. மாமுனிகளுக்கு ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயண தாதாத்ம்யம் சொல்லுகிறது இதில். பரமஸாத்விகரான மாமுனிகளினடியார்களுக்கும் பரமஸத்வநிதியான ஸ்ரீமந்நாராயணனுடைய ஸாம்யம் சொல்லலாமாயிருக்க, ராஜஸதாமஸர்களான ப்ரஹ்மருத்ரர்களின் ஸாம்யம் எதுக்காகச்சொல்லிற்றென்று சிலர் சங்கிக்கக்கூடும்; திவ்ய தேசங்களை வருணிக்கின்ற திருமங்கையாழ்வார் அங்குவாழும் ஸ்ரீவைஷ்ணவர்களை ப்ரஹ்மருத்ரஸமர்களாகவருளிச் செய்திருப்பது காண்கிறோமிறே. *சிவனயனே போல்வார்மன்னு திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே * (2—10—9) என்ற பெரிய திருமொழிப் பாசுரங்காண்க. இந்த ச்லோகத்தில் மாமுனிகளுக்கு ஸாக்ஷாந் நாராயணத்வ மருளிச்செய்யப்படுவது எங்ஙனேயென்னில்; நாராயணன் தன்னுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தை [கங்கையை] சிரஸா தாங்கினவனுக்குக் கலாநிதிமௌலித்வத்தைக்கொடுத்தார்; कलानिधिः (चन्द्रः) मौलौ यस्य सः, तस्य भावः— कलानिधिमौलिता । चन्द्रशेखरत्वमिति यावत् । ப்ரக்ருதே, ஸ்வாமியின் திநசர்யையிலே * ததஸ்ஸ்வ சரணாம்போஜ ஸ்பர்ச ஸம்பந்நஸௌரபை:, பாவநை ரர்த்திநஸ் தீர்த்தைர் பாவயந்தம் பஜாமி தம் * என்று பணித்தபடியே ஸ்வாமி ஸமயவிசேஷங்களிலே ஸ்ரீபாத தீர்த்தம் ப்ரஸாதித்தருள, அதை நிதி பெற்றாற்போலே பெற்றுவருகின்ற கோயிலண்ணன் முதலானோர் கலாநிதி மௌலிகளாக விளங்கா நின்றார்கள். கலாநிதிகளென்று ஸகலகலாவல்லபர்களைச் சொல்லுகிறது; அவர்களுக்குள்ளே தலைவர்களாயிருக்கும்படியைச் சொல்லுகிறது. இன்னமும் நாராயணன் ஸ்ரீராமாவதாரத்திலே தன் திருவடியைப் பற்றி வாழ்ந்து திருவடியென்றே நிருபகமாயிருந்தவன் * உல்லங்க்ய ஸிந்தோஸ் ஸலிலம் ஸலீலம் * என்றும் * கோஷ்பதீக்ருத வாராசிம் * என்றும் சொல்லுகிறபடியே கடலைக் கடந்தானென்று ப்ரஸித்தமாயிருக்கும். இங்கும் * மணவாள மாமுனிவன் பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை உன்னிச் சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக் கரத்தாலே தீண்டல் கடன்* என்கிறபடியே, மாமுனிகளின் திருவடிகளைத் தஞ்சமாகக்கொண்டவர்கள் அந்த மாருதியாலும் கடக்கவரிதான ஸம்ஸாரக் கடலைக் கடக்கின்றார்கள். இப்படிகளாலே மாமுனிகள் ஸாக்ஷாந் நாராயணனேயாவார் என்றதாயிற்று. ... ... (14)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

जलंजनिलयैकान्तोऽनन्तद्विजोत्तमसेवितो जलंजविलसत्पाणिर्नित्यं करस्थसुदर्शनः।
सकलसुमनोवैरिव्रातावलेपविलोपकृत् मधुरिपुतुलाकान्तः कान्तोपयन्तृमुनीश्वरः ॥१५॥

ஜலஜநிலயைகாந்தோநந்தத்விஜோத்தமஸேவித:
ஜலஜவிலஸத் பாணிர் நித்யம் கரஸ்தஸுதர்சந:
ஸகலஸுமநோவைரிவ்ராதாவலேபவிலோபக்ருத்
மதுரிபுதுலாகாந்த: காந்தோபயந்த்ருமுநீச்வர: 15

ஜலஜநிலயாஏகாந்த: அநந்தத்விஜோத்தமஸேவித: ஜலஜவிலஸத்பாணி: நித்யம் கரஸ்தஸுதர்சந: ஸகலஸுமநோ வைரிவ்ராத அவலேப விலோபக்ருத் காந்தோபயந்த்ருமுநீச்வர: மதுரிபுதுலாகாந்த:

ஜலஜ நிலயா ஏகாந்த:, மலர்மகளுக்கு அஸாதாரணனாய், (2) ஜட ஜநி லய ஏகாந்த:- மூட ஜன்மத்தைப் போக்குவதில் மிக வல்லவராய், திருவனந்தாழ்வானும் பக்ஷிராஜனும் ஸேவிதனாய், (2) அளவுகடந்த ப்ராஹ்மணோத்தமர்களாலேஸேவிதராய், ஸ்ரீபாஞ்ச ஜந்யம் விளங்கும் திருக்கையை யுடையனாய் (2) தாமரைபோல் விளங்கும் திருக்கையை யுடையராய், எப்போதும் கைகழலாநேமியானாய் (2) எம்பெருமானார் தர்சனார்த்தங்கள் கைப்பட்டவராய், ஸகல அஸுரராக்ஷஸ வர்க்கங்களின் செருக்கையடக்கினவனாய் (2) ஆஸுரப்ரக்ருதிகளானாரெல்லாரையும் செருக்கொழித்தவரான மணவாள மாமுனிகள் எம்பெருமானோடு ஸாம்யத்தாலே ஸ்ப்ருஹணீயராவர்.

*** இந்த ச்லோகத்தினால் மணவாள மாமுனிகளுக்கு ஸ்ரீமந்நாராயணனோடு ஸாம்யம் நிர்வஹிக்கப்படுகின்றது. [ஜலஜ நிலயைகாந்த:] எம்பெருமான் லக்ஷ்மிக்குப் பதியென்னுமிடம் விவரண நிரபேக்ஷம். மாமுனிகள் திறத்தில் [ஜலஜநி-லய-ஏகாந்த:] 'लडयोरभेदः லடயோரபேத;' என்கிற மர்யாதையாலே (ஜல) என்றது ஜடமென்றபடியாம். ஜநி என்பது (கீழ் மூன்றாம் ச்லோகத்திற்போலே) பிறப்பைச்சொல்லுகிறது. ஜடமான பிறப்புக்கு லயம் செய்வதில் வல்லவர் என்கை. யதாஜாதர்களையும் திருத்திப் பணிகொள்ள வல்லவரென்றதாயிற்று. [அநந்தத்விஜோத்தம ஸேவித:] திருவனந்தாழ்வானையும் பெரிய திருவடியையும் கொண்டு ஸ்ரீமந்நாராயண பக்ஷத்தில் நிர்வஹிப்பது. மாமுனிகள் பக்ஷத்தில் அனந்தர்களான [அபரிமிதர்களான] த்விஜோத்தமர்களாலே—த்விஜர்களில் உத்தமர்களான ஸ்ரீவைஷ்ணவர்களாலே ஸேவிதரென்கை. [ஜலஜவிலஸத்பாணி:] ஸ்ரீபாஞ்சஜந்யம் கடலிற் பிறந்ததாகையாலே ஜலஜமென்னும் பெயர் அதற்கு முண்டு. பாஞ்சஜந்யாலங்க்ருதமான இடத்திருக்கையை யுடையவன் எம்பெருமான். மாமுனிகள் ஜலஜம்போலே [தாமரைபோலே] விளங்குகின்ற திருக்கைத் தலத்தையுடையவர். [நித்யம் கரஸ்தஸுதர்சந:] * எப்போதும் கைகழலாநேமியான் எம்பெருமான். மாமுனிகள் பக்ஷத்தில் ஸுதர்சநமென்றது ஸத்தர்சனமென்றபடியாய் எம்பெருமானார் தர்சனார்த்தங்களெல்லாம் கைப்பட்டிருப்பவரென்கை. அன்றிக்கே ஜலஜேத்யாதியான விரண்டாலும் திருக்கைத்தலத்திலே உத்தம புருஷ லக்ஷணமான சங்க சக்ரரேகைகள் விளங்கப்பெற்றவரென்னவுமாம். [ஸகலஸுமநோவைரிவ்ராதாவலேப விலோபக்ருத்] ஆஸுரப்ரக்ருதிகளின் செருக்கை யடக்கவல்ல ஸாமர்த்தியம் உபய ஸாதாரணம். * அசுரரிராக்கதரை யிண்டக்குலத்தையெடுத்துக்களைந்த விருடீகேசன் அவன். மாமுனிகளோவென்னில்; *பொலிக பொலிகவிலே "ஐயமொன்றில்லை அரக்கரசுரர் பிறந்திருள்ளீரேல், உய்யும் வகையில்லை தொண்டீர்" என்றருளிச்செய்தது ஸபலமானபடி. ஆக இவ்வகைகளாலே [மதுரிபுதுலாகாந்த:] மதுகைடப ஸம்ஹாரகனான எம்பெருமானோடு ஸாம்யம் பெற்றவரென்று ஸபங்கச்லேஷத்தாலும் அபங்க ச்லேஷத்தாலும் மூதலித்தபடி. ... ... (15)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

यद्वाग्जालं मधुजिदतनुच्छेदिनालीकवासोत्कृत्तोद्वृत्तासुरसमुदयैस्साम्यमासेवमानम् ।
पद्मावासाक्षितिधरसुतावाक्छचीकान्तरूपैः कान्त्या कान्तस्स जयतु महायोगिकान्तोपयन्ता ॥ १६ ॥

யத்வாக்ஜாலம் மதுஜிததநுச்சேதிநாலிகவாஸோத்
க்ருத்தோத்வ்ருத்தாஸூர ஸமுதயைஸ் ஸாம்யமாஸேவமாநம்
பத்மாவாஸாக்ஷிதிதரஸூதாவாக்சசீகாந்தரூபை:
காந்த்யா காந்த: ஸ ஜயது மஹாயோகிகாந்தோபயந்தா 16

யத்வாக்ஜாலம் பத்மாவாஸா க்ஷிதிதரஸூதா வாக் சசி காந்தரூபை: மதுஜித் அதநுச்சேதி நாலிகவாஸ உத்க்ருத்த உத்வ்ருத்த அஸூரஸமுதயை: ஸாம்யம் ஆஸேவமாநம்; ஸ: காந்த்யா காந்த: மஹாயோகிகாந்தோபயந்தா ஜயது.

யாவரொரு மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி ப்ருந்தமானது, மலர்மகள் மலைமகள் ஸரஸ்வதி இந்திராணி ஆகிய இவர்களுக்கு நாயகர்களாயிருக்கின்ற ஸ்ரீ மஹாவிஷ்ணு சிவன் பிரமன் இந்திரன் என்னுமிவர்களோடே (மேல்விவரிக்கப் படுகிறபடியே) ஸாம்யத்தை யடைந்ததாகவுள்ளதோ, அந்த அழகிய மணவாள மாமுனிகள் ஸர்வோத்கர்ஷசாலியாய் விளங்குக.

*** இந்த ச்லோகத்தில், மணவாள மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகள் ஸ்ரீமந் நாராயணனோடும் சிவபெருமானோடும் நான்முகனோடும் இந்திரனோடும் ஸாம்யம் பெற்றுவிளங்கும்படியை அதிவிலக்ஷண ச்லேஷபங்கியாலே அருளிச்செய்கிறார். உத்தரார்த்தத்தில் [பத்மாவாஸே த்யாதி] பத்மாவாஸா காந்த:, க்ஷிதிதரஸூதாகாந்த:, வாக்காந்த:, சசிகாந்த: என்று யோஜிக்கக்கடவது. முறையே த்ரிமூர்த்திகளையும் இந்திரனையும் சொல்லிற்றுகிறது. பூர்வார்த்தத்தில் மதுஜித்இத்யாதி சப்தங்களில்தான் சிலேடை. இந்த சப்தங்கள் ஸ்ரீவரவரமுநிஸூக்திஸ்வபாவத்தையும் சொல்லும், ஸ்ரீமந்நாராயணாதிகளின் தன்மையையும் சொல்லும். எங்ஙனேயென்னில்; [மதுஜித்] பத்மாவாஸா காந்தனை நாராயணன் (கைடபஸஹசரிதனை) மதுவென்னு மசுரனை வென்றவன். ஸ்வாமியின் வாக்ஜாலமானது, மதுவை வென்றது; தேனைக் காட்டிலும் பரமபோக்யமென்றபடி. [அதநுச்சேதி] க்ஷிதிதரஸூதா காந்தனை ருத்ரன் அதநுவை–அநங்கனென்னும் மன்மதனையொழித்தவன். ஸ்வாமியின் வாக்ஜாலமானது காமக்ரோதாதிகளைத் தொலைப்பது. [நாலிகவாஸ] வாக்காந்தனை நான்முகன் நாலீகத்தை [தாமரையை] வாஸஸ்தானமாகவுடையவன். ஸ்வாமியின் வாக்ஜாலமோவென்னில் [ந-அலீகவாஸ] மாமுனிகள் பொய்ம்மொழியொன்றில்லாத மெய்ம்மையாளராகையாலே அவருடைய திருவாக்கு அலீகஸம்பந்த மற்றதென்கை. கீழ்ப் பதின்மூன்றும் சுலோகத்தில் நாலீகஸ்த: என்றவிடமும் காண்க. [உத்க்ருத்த-உத்வ்ருத்த அஸூரஸமுதய,] சசிகாந்தனை இந்திரன் துர்மார்க்கஸ்தர்களான அசுரர் குழாங்களைத் தொலைத்தவன். மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி ஜாலமானது *நண்ணுவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த* என்னுங்கணக்கிலே ஆஸூரப்ர க்ருதிகளின் அவலேபங்களை யடியறுப்பது, ஆக இவ்வகைகளாலே திரிமூர்த்திகளோடும் இந்திரனோடும் ஸாம்யம் பெற்ற ஸ்ரீஸூக்திகளை யருளிச்செய்தவரான மணவாள மாமுனிகள் நித்யஸ்ரீர் நித்யமங்களமாக விளங்கவேணுமென்றாராயிற்று. ... (16)

ह्यद्या यस्य सरस्वती सुविमला तापानशेषानपि द्रागुन्मूलयति श्रुताऽपि भविनां शुद्धिं विधत्ते पराम् ।
भङ्गं नैति कदाऽपि कुत्रचिदपि प्राप्ताऽपि गम्भीरतां सोऽव्यान्मामतिवेलवैभवनिधिः कान्तोपयन्तामुनिः ॥

ஹ்ருத்யா யஸ்ய ஸரஸ்வதீ ஸூவிமலா தாபாந்சேஷாநபி
த்ராகுந்மூலயதி ச்ருதாபி பவிநாம் சுத்திம் விதத்தே பராம்
பங்கம் நைதி கதாபி குத்ரசிதபி ப்ராப்தாபி கம்பீரதாம்
ஸோவ்யாந்மாம் அதிவேலவைபவநிதி: காந்தோபயந்தா முநி: 17

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பச்சைப் பசும்பொய்யைப்பற்றிப் பதினறு.

(அல்லது தஞ்சாவூர் புளுகு.)

—⁂—

தஞ்சை மாமணிக்கோயிலுக்குப் பல பெருமைகளை யெழுதி வெளியிடுமொரு பண்டிதர் "தேசிகன் தமது திருமாளிகைக்குக் கதவிலக்கம் (டோர் நம்பர்) 24. என்றிருந்ததுபற்றி இருபத்து நான்கு பிரபந்தங்கள் கொண்ட ஸ்ரீதேசிகப் பிரபந்தம் சாதித்தார்" என்றும், அது முதன் முதலாகத் தஞ்சை மாமணிக்கோயிலிலேயே அநுஸந்தானம் தொடங்கப்பெற்று பின்பே மற்ற திவ்யதேசங்களிலும் அவ்வநுஸந்தானம் தொடர்ந்ததாகவும் எழுதுகிறார். திருவாரூர் புளுகென்றும், தஞ்சாவூர் புளுகென்றும் நெடு நாளாகவே ஒரு வழக்கச்சொல் வருவதுண்டு. திருவாரூர் புளுகு சைவர்திரளில் பிரசித்தமென்றும், தஞ்சாவூர் புளுகு ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிகளில் பிரசித்தமென்றும் சொல்லுவர். பிரகிருதம் தஞ்சாவூர் புளுகைப்பற்றியே விவரிக்க அவசியமேற்பட்டது. அலங்கார சாஸ்திரத்தில் இப்படியுமொரு அலங்காரமுள்ளது. இதற்கு மித்த்யாத்யவஸிதி யென்று பெயரிட்டார்கள். किञ्चिन्मिथ्यात्वसिद्ध्यर्थम् मिथ्यार्थान्तर कल्पनम्-मिथ्याध्यवसितिः [கிஞ்சிந்மித்த்யாத்வஸித்த்யர்த்தம். மித்த்யார்த்தாந்தர கல்பநம், -மித்த்யாத்யவஸிதி:] என்று லக்ஷணம் கூறினார்கள். वेश्यां वशीचकाराश्वः खपुष्पकृतशेखरः (வேச்யாம் வசீசகாராச்வ: கபுஷ்பக்ருத சேகர:) என்று இதற்கு லக்ஷ்யமும் காட்டினார்கள். 'குதிரையானது ஆகாசமலரைச் சூடிக்கொண்டு தாஸியை வசப்படுத்திக் கொண்டது' என்பது இதன்பொருள். தாஸி ஒருவர்க்கும் வசப்படுபவளல்லள், குதிரைக்கு தாஸியை வசப்படுத்தி ஆகவேண்டியதுமில்லை; அது இதை நெஞ்சாலும் நினைக்கவல்லதுமன்று. ஆகாச மலரென்கிற வஸ்துவும் கிடையாது. அதனைக் குதிரை சூடிக்கொண்டதென்பதும் அஸம்பாவிதம். ஆக அக்ஷரந்தோறும் பொய்யான விஷயங்களையே பெய்து பேசுவதும் ஒரு அலங்காரமாகப் பரிகணிதமாய்விட்டது. "இருபத்து நான்கு பிரபந்தங்கள்கொண்ட ஸ்ரீதேசிகப் பிரபந்தம்.... இத்யாதியாக நாம் எடுத்துக்காட்டிய ப்ரக்ருதவிஷயமும் இவ்வலங்காரத்திற்கே லக்ஷியமாமத்தனை. இனி வரிசையாக விவரிப்போமிதனை.

1. வேதாந்தவாசிரியர் ஸம்ப்ரதாயபரிசுத்தி முதலாக, ரஹஸ்யத்ரயஸாரம் நடுவாக, முநிவாஹநபோகமீறாக முப்பத்திரண்டு ரஹஸ்யங்கள் பணித்துள்ளாரென்பது ப்ரஸித்தமானது. இவற்றில், ப்ரகரணவிச்சேதமில்லாத சிறிய ரஹஸ்யங்களுக்கு ஆதியிலும் அந்தத்திலும், ப்ரகரணவிச்சேதமுள்ள பெரிய ரஹஸ்யங்களுக்கு ஒவ்வொரு பிரகரணத்திலும் ஆதியந்தங்களிலும் பெரும்பாலும் சிறிய் பெரிய சுலோகங்களை யியற்றிச் சேர்த்துள்ளாரென்பதை அனைவரும் காண்கிறோம்.

2. இவ்வண்ணமாகவே, அந்த ஸம்ஸ்கிருத சுலோகங்களோடு கூடவே வெவ்வேறு வகைப்பட்ட யாப்பமைந்த தமிழ்ச்செய்யுள்களையும் இயற்றிச் சேர்த்துள்ளாரென்பதையுங் காணுநின்றோம். ஸம்ஸ்கிருத சுலோகங்களை ஆதியந்தங்களில் மட்டுமன்றிக்கே இடையிடையிலும் சிலவற்றை யெழுதிச் சேர்த்திருப்பதுண்டு. அவை காரிகைகளெனப்படும். இந்த ப்ரக்ரியையானது தமிழ்ச் செய்யுள்களுக்கு கிடையாது. இடையிடையே தமிழ்ப்பாட்டுகளைச் செய்து சேர்த்திருப்பது கிடையாதென்றபடி. ஆதியந்தங்களில் மட்டுமே தமிழ்ச் செய்யுள்களைச் செய்து சேர்த்திருக்கிறாரென்கை.

3. ஆகவிப்படி ஆதிமத்யாந்தங்களில் சேர்க்கப்பட்டுள்ள ஸம்ஸ்க்ருத சுலோகங்களைத் தனியே பிரித்தெடுத்துச் சில நூல்களாக்கி இன்ன நூல் இன்ன நூலென்று வியவஹரிப்பதுமில்லை, அவற்றைத் தனிப்பட அநுஸந்தானத்தில் ஒருவரும் ஓரிடத்திலும் கொண்டுவந்ததுமில்லை, கொண்டுவர முயன்றதுமில்லை. அந்த சுலோகங்களெல்லாம் ரஹஸ்யநூல்களிலேயே அந்தர்க்கதங்களாய்த் தனிப்பட வ்யபதேசம் பெறுமையினாலே ரஹஸ்யாநுஸந்தான காலங்களிலே மட்டும் அந்த சுலோகங்களுக்கும் அநுஸந்தானம் ப்ராப்தமாகி வந்திருக்கின்றது. அவற்றுக்கு வேறுவிதமான அநுஸந்தானம் எங்குமே கண்டதில்லையென்பது புநருக்தம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

4. தத்ஸஹபடிதங்களான தமிழ்ப்பாட்டுகளுக்கும் இதே நியாயந்தான். அமிருதரஞ்சனியென்றோ அம்ருதாஸ்வாதினியென்றோ அதிகாரசங்கிரகமென்றோ ஸ்வாமி தாம் பெயரிட்டதாக ஒரு பிரபந்தமும் தோன்றிற்றிலது. பின்புள்ளவர்கள் கோவில்களிலே ஸம்பந்தத்தை ஏறிட்டுக்கொண்டு புகுந்தபோது அந்த ராமாயணத்தின் தொடக்கமே யுத்தகாண்டமாக அமைந்தபடியால் ஸ்பர்த்தை முற்றினகாலத்திலே பாத்ரத்தனியனென்றும் வாழிதிருநாமமென்றும் நாள்பாட்டென்றும் ப்ரதிகல்பனைகள் பலவற்றைப் பண்ணினதுபோல தேசிகப் பிரபந்த ஸ்ருஷ்டியும் பண்ணினார்கள். உண்மையில் தேசிகர் ஸாதித்த பாட்டுக்களையே [அதாவது கீழே நாம் விவரித்தபடி ரஹஸ்யநூல்களில் ஸ்வாமி இட்டுவைத்த பாட்டுக்களையே] சில பிரபந்தங்களாக்கியும், வேறு சிலர் இயற்றிவைத்திருந்த பிரபந்தங்களையும் சேர்த்துக்கொண்டும், பிரபந்தசாரம் முதலான ஒன்றிரண்டு பிரபந்தங்களைப் புதிதாகவே யியற்றியும் இவற்றுக்கு தேசிகப் பிரபந்தமென்று பெயரிட்டுச்சில கோவில்களில் கத்தத்தொடங்கினார்கள்.

5. ஆக, கீழ் நான்கு பாராக்களில் தெரிவித்த விஷயங்கள் இனிப் பன்னிரண்டு பாராக்களில் அசைக்கமுடியாதபடி ப்ரதிஷ்டாபனம் செய்யப்படுகின்றன. 'பலவாண்டுகளாக ஒரு பெரிய வகுப்பினர் சொல்லிப் போரும் விஷயங்களை இன்றாக நீயொருவன் நவீன கற்பனையாக எழுதிவிட்டதனாலே அஸூயையினாலும் ஆக்ரஹத்தினாலும் எழுதியதாகத் தேறுமேயல்லது லவலேசமும் ப்ராமாணிகமாகத் தேறுவதற்கு வழியில்லை'யென்று சிலர் சொல்லவும் எழுதவும்கூடும். தாராளமாகச் சொல்லுக வெழுதுக. 'இவன் ஆக்ரஹத்தாலே சொல்லுகிறான், அஸூயையினாலே யெழுதுகிறான்' என்றிவ்வளவே சொல்லக் கூடுமேயல்லது நாம் உப பாதிக்கும் விஷயங்களில் ஏகதேசமும் வாய்திறக்க வழியில்லையென்பது பிரளயத்திலும் அழியகில்லாத வார்த்தையேயாகும். தேசிகப் பிரபந்தமென வழங்கப்படும் நூல்தொகுதி உண்மையாகவே தேசிகரால் இயற்றப்பட்டு இருந்ததென்றே வைத்துக்கொள்வோம். துஷ்யதுந்யாயேநவன்றிக்கே முழுமனமாகவே கொள்வோம். இவற்றின் அநுஸந்தானம் தஞ்சை மாமணிக்கோயிலில் தொடங்கப்பட்டதென்று சொல்லப்படுகிறதே, இதனை ஆர அமர ஆராய்வோம். முதலில் தஞ்சையில் தொடங்கப்பட்டுப் பிறகு இதர தேவாலயங்களில் அநுஸந்தான பரம்பரை நிகழ்ந்து வருவதாக எழுதப்படுகிறது இந்த நமது வியாஸத்திற்கு இலக்கான வ்யக்தியால். இப்போது எழுபத்து நான்காம் பிராயத்திலிருக்கிற நான் தஞ்சை மாமணிக்கோயிலை முதன் முதலாகப் பதினாறு பதினேழு பிராயத்தில் ஸேவிக்கப்பெற்றவன். அப்போது ஒரு நாள் காலையில் தஞ்சையையும் மாலையில் திருக்கண்டியூரையும் ஏழெட்டு வயஸ்யர்களுடன் ஸேவிக்கப்ராப்தமாயிற்று. இவ்விரண்டு திருப்பதிகளும் அப்போது தென்கலைத் திருமண்காப்புடன் விளங்கியவை. ஆனால் பக்கத்திலேயே காவியாலும் திருமண்கட்டியாலும் வேறொரு திருமண்ரேகையும் போடப்பட்டிருந்த தப்போதே. இவ்விரண்டிடங்களிலும் தென்கலைஸம்பிரதாயஸ்தர்கள் மிக்ச்சிலரும், வடகலைஸம்பிரதாயஸ்தர்கள் மிகப்பலருமாயிருந்ததனால் ஆக்ரமணம் மிகவெளிதாக ஏற்பட்டது. அடியேன் இருபத்தைந்தாவது பிராயத்தில் மறுபடியும் அத்தலங்களுக்குச் செல்ல நேர்ந்தபோது கலை பரிஷ்காரமாகவே மாறுபாடடைந்ததைக் கண்டேன். திருக்குடந்தை, திருவிண்ணகர், தேரழுந்தூர்....என்னும் சிற்சில திருப்பதிகள் கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் புண்ட்ரம் மாறப்பெற்றவை; மேலே ப்ரஸ்தாவித்த இரு தலங்க்ள் நிகழும் (கி. பி.) இருபதாம் நூற்றாண்டில் மாறப்பெற்றவை. என்னுமிவ்வளவே வாசி.

6. கபிஸ்தலம், திருமெய்யம், திருநாங்கை, திருக்கண்ணங்குடி., அப்பக்குடத்தான் ஸன்னிதி யென்கிற திருப்பேர்நகர் முதலான பத்திருபது திவ்யதேசங்களில் தென்னாசார்ய ஸம்பிரதாயஸ்தர்கள் அடியோடு இல்லையென்று சொல்லவேண்டும்படியான நிலைமை ஏற்பட்டிருந்தாலுங்கூட இவ்விடங்களில் பிறர் மலிந்திராமையினாலும், (இவற்றில் சில தலங்களில்) சேஷ்டைபண்ணமுடியாதபடி அரசாங்க மூலமாகக் கனமான காப்பு [ரக்ஷை] ஏற்பட்டுவிட்டபடியாலும் மாறுபாடு தோன்றப் பெறாமலிருக்கின்றது. ப்ராஸங்கிகமான இவ்விஷயமிருக்கட்டும். தேசிகர் ஜீவித்திருந்த

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

காலத்திலும், அவர் பரமபதித்த பிறகு நெடுநாள் வரையிலும் ஸ்ரீவைஷ்ணவர்களுள் எவ்விதமான பிளவும் ஏற்பட்டிருக்கவில்லை. ஏற்பட்டிருந்தால், தென்னுசார்ய ஸம்பிரதாயத்திற்கே திலகமான திவ்யதேசங்களில் தேசிகவிக்ரஹம் ப்ரவேசித்திருக்க ப்ரஸக்தியே யிராது. அன்றியும், தென்னுசார்ய ஸம்பிரதாயஸ்தர்களான வாதிகேஸரி ஜீயர், மணவாள மாமுனிகள் முதலான பல ஆசாரியர்கள் தேசிக ஸூக்திகளைத் தங்கள் கிரந்தங்களில் கையாளவும் ப்ரஸக்தியிராது. ஆகவே அக்காலத்தில் தேசிகரும் பிறிகதிர்ப்பட்டவரன்றிக்கே ஒத்துவாழ்ந்தவரென்பது யாவர்க்கு முடன்பாடு,

7. அவருடைய பிரபந்தங்களை யநுஸந்திக்க ப்ரமேய மேற்பட்டால், கோவிலைக் காத்தவர்களென்று இற்றைக்கும் ப்ரஸித்தவ்யபதேசபாகிகளான தென்னுசார்ய ஸம்பிரதாயஸ்தர்கள்தாம் ஓதியிருக்கவேண்டும். மற்றையோர் வாய்திறக்க ப்ரஸக்தியே கிடையாது. ஸ்ரீபெரும்பூதூரில் யதிராஜஸப்ததி ஓதுவது, திருக்கோவலூரில் தேஹளீச ஸ்துதி யோதுவது, ஸ்ரீவில்லிபுத்தூரில் கோதாஸ்துதி யோதுவது இத்தகைய ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ராநுஸந்தானமே இற்றைக்கும் தென்னுசார்ய ஸம்பிரதாயஸ்தர்களுக்கு உரித்தாயிருக்கும்போது, நாளைக்கும் த்ராவிடபாஷா தூஷணமும் திவ்யஸூரி நிந்தையும் திவ்யதேச உபாலம்பமுமே போதுபோக்காயிருக்கின்ற வகுப்பினர் பிரபந்தஞ் சொல்லத் தொடங்கினுர்களென்று எழுதினவர் எப்படித்தான் வெட்கமற்று எழுதினுரோ அறியோம். (வெள்கிப்போ யென்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே) என்று தொண்டரடிப்பொடியாழ்வாரருளிச் செய்தபடி, தமக்குள் தாம் விலவறச் சிரித்துக்கொண்டேதாம் எழுதியிருக்கவேண்டும்.

8. தேசிகப் பிரபந்தமென்கிற ககநாரவிந்தத்தை முதன் முதலாகச் சொல்லத் தொடங்கினவர்கள் நால்வர் ஐவர் அறுவராக இருக்கமுடியாது; ஒரு பெருந்திரளாகத்தானிருக்கவேண்டும். அவர்களது ப்ரம்பரை இப்போது உள்ளதா? இல்லையாவென்று கேட்டால் (திசி திசி விலோலநயநம்) என்கிறபடியே திசைதொறும் விழிக்கவேண்டியது தவிர வேறுண்டோ? கோயில் திருமலை பெருமாள் கோயிலென்று ப்ரக்யாதமான திவ்ய தேசத்ரயத்தில் தலைகாட்ட வகையில்லாதவர்கள் வண்ணுத்தங்கரையிலே தோன்றி அவ்வாற்றிலேயே அன்றே அமிழ்ந்துபோனுர்களென்று சொல்லித் தீரவேண்டியது தவிர வேறில்லையே. தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டில் திருவெவ்வுளூரென்கிற ஒரு திருப்பதியைப் பற்றிக்கொண்டு இவர்கள் மன்ருடலாம். இத்தலத்தைப்பற்றி நீதிமன்றத்து வியவஹார இதிஹாஸ புராணங்கள் இன்னமும் ஓய்ந்தபாடில்லை. இத்தகைய நவீநாக்ரமண விஷயீபூதங்களாய் அங்குலிகணநீயங்களாயுள்ள சில திவ்யதேசங்களில் நேற்று காலையிலும் இன்று மாலையிலுமாகத் தோன்றி ஸர்வஜநமநஸ்ஸாக்ஷிகங்களாகவுள்ள க்ஷேபங்களை விட்டொழித்து நெஞ்சை நடுநிலையிலே வைத்து உண்மை காணப்புக்கால் பொய்யும் புளுகுந்தவிர வேறொன்றும் தேருது.

9. நெடுநாளாக நம்து கேள்வியொன்று பிரபலமாகவுள்ளது. அதில் இவர்கள் அதுஷ்டியை அபிநயிப்பது தவிர வேறொன்றும் செய்யப்போகாது. தேசிகன் அவதரித்த காலமும் திருநாட்டுக்கெழுந்தருளின காலமும் ஸர்வஜநவிதிதமாகவுள்ளது. அன்று தொடங்கி இன்றளவாக அவிச்சிந்நபரம்பரையில் வருமவர்கள் ப்ரதிவாதி பயங்கராசார்ய வம்சஸ்தர்களேயல்லது வேறெவருமிலர். இவ்வம்சஸ்தர்கள் இன்றைக்கும் தங்கள் பரம்பரையில் வேதாந்தாசார்யரென்றும் நயனுராசாரியரென்றும் நாமகரணம் செய்து வருகிருர்கள். இவர்களை அசலாக்கி வேறுசிலர் தங்களை தேசிகாநுபந்திகளாகச் சொல்லிக்கொள்ளவாரம்பித்தது எந்தவாண்டிலென்பதை எளிதாக அறிந்துகொள்ள இயலும். தேசிகனுடைய பரச்சதக்ரந்தரத்னங்களில் ஏதேனுமொன்றுக்காவது இந்த நவீனர்களின் முன்னேர்கள் வியாக்கியானமியற்றியதுண்டோ? இவர்களுக்கு ப்ரவசநபரம்பரையில் கிடைத்த தேசிகக்ரந்தம் ஒன்ருவது உண்டோ? கி. பி. ஹு 1860க்கு மேலல்லவோ இவர்களில் சிலர் ரஹஸ்யவியாக்கியானமெழுதவும், சிலர் ஸ்தோத்ரவ்யாக்கியானமெழுதவும், சிலர் (தேசிகப்) பிரபந்தவியாக்கியானமெழுதவும் புகுந்திருக்கிருர்கள். இதை நாம் எத்தனை தடவையெடுத்துக்காட்டியிருக்கிறேம். "இது சர்விதசர்வணம், பிஷ்டபேஷணம்" என்று தோஷம்கூறலாமிவர்கள். இதுவும் ஒரு தூஷணமேயாதலால் இந்தவகையில் நம்மைக் கண்டித்துவிட்டதாக இவர்கள் த்ருப்தியடையலாமத்தனை.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

10. தேசிகன் அவதரித்துப் பரச்சதப்ரபந்தங்களை யருளிச்செய்து திருநாட்டுக் கெழுந்தருளியபின் நானூறு ஸம்வத்ஸரகாலம் இவர்கள் எங்கிருந்தார்கள்? என்ன செய்துகொண்டிருந்தார்கள்? என்கிற நம்முடைய கேள்வி நாற்பது வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வருகின்றது. தேசிகனைப்பற்றியோ ஸ்ரீராமாநுஜரைப்பற்றியோ மற்றுமுள்ள நாதயாமுநாதிகளைப்பற்றியோ ஆழ்வார்களைப்பற்றியோ இவர்களில் ஒருவராவது ஓரெழுத்தாவது எழுதியிருப்பதுண்டோவென்று நாம் கேட்கிற கேள்வியை இவர்கள் உபேக்ஷிக்க முடியாது. இக்கேள்வியை இவர்கள் நம்மைநோக்கிக் கேட்கிறபக்ஷத்தில் நாம் தாராளமாக விடையிறுக்கவல்லோம். ஸ்ரீவசநபூஷண மீமாம்ஸாபாஷ்யம், ரஹஸ்யத்ரயமீமாம்ஸாபாஷ்யம், தாத்பர்யதீபிகை முதலாக விளங்கிவரும் வடமொழி நூல்களும், பெரிய வாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளுக்கும் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளுக்கும் அரும்பதவிளக்கங்களாகவும் காப்பாகவும் அவதரித்துள்ள தென்மொழி நூல்களும் ஸமீபகாலத்தில் (அதாவது இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குள்) தோன்றியவையல்ல.

11. பூருவாசாரியர்களுள் பெரும்பான்மையோர்க்கு ஸந்நதி அநுஸ்யூதமாய் இடையூறுவந்துகொண்டிருக்கிறது. உடையவர்காலத்து ஆசார்ய புருஷர்களோ, மணவாளமாமுனிகளின்காலத்து ஆச்சார்யபுருஷர்களோ [அஷ்டதிக்கஜாசாரியர்கள்] இவர்களின் ஸந்நதிபரம்பரையார்கள் ஆங்காங்கு திவ்யதேசங்களில் ப்ரதிஷ்டிதர்களாக விளங்குவதொன்றே போதுமானது.

12. பெரியநம்பிஸந்ததியார் நாங்கள் என்றோ, திருமாலையாண்டான் வம்சஸ்தர்கள் நாங்கள் என்றோ, திருக்கோட்டியூர் நம்பி பரம்பரையினர் நாங்கள் என்றோ, அனந்தாழ்வான்திருவம்சத்தவர்கள் நாங்கள் என்றோ, எம்பார் ஆழ்வான் முதலியாண்டான் வம்சத்தவர்கள் நாங்கள் என்றோ, பிரதிவாதிபயங்கரவம்சியர்கள் நாங்கள் என்றோ, சோளஸிம்ஹபுரம் தொட்டயாசாரியர்ஸ்வாமி குலத்தவர் நாங்கள் என்றோ, கிம்பஹுநா? வேதாந்தாசார்யவம்சஸ்தர்கள் நாங்கள் என்றோ சொல்லிக்கொண்டு திவ்யதேசங்களில் தலைகாட்டுவதற்கு எதிர்வகுப்பில் ஒருவருளரோ?

13. ஸ்ரீவைஷ்ணவஸம்பிரநாயஸ்தர்களுக்கு உபயவேதாந்த ப்ரவர்த்தகத்வம் சிறப்புப்பெயராகக் கிடைத்தது. அது தன்னிலும் ஸம்ஸ்க்ருதவேதாந்தத்தை இடக் கண்ணாகவும், த்ராவிடவேதாந்தத்தை வலக் கண்ணாகவும் கொள்பவர்களே உத்தம ஸ்ரீவைஷ்ணவர்களென்கிற அத்யவஸாயமும் அநபாயமாகவுள்ளது. இதனால் ஸம்ஸ்க்ருதவேதாந்தத்திற்குக் குறை கூறினதாக ஆகாது. ஸ்ரீமந்நாதமுனிகள் கோரமாதவஞ்செய்து திராவிட வேதாந்தத்தை ஆர்ஜித்தருளினபடியால் " நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் - இதமகிலதம: கர்சநம் தர்சநம் ந: " என்று தேசிகன் கொண்டாடின நம் தரிசனத்தில் திராவிட் வேதாந்த் ப்ரவர்த்தகர்களுக்கே ப்ரசஸ்தி விளைந்தது. அந்த ப்ரசஸ்தியைப்பெற்றவர்கள் தென்னாசார்யஸம்பிரதாயஸ்தர்களே யென்பது ஊர்ஜிதம். எங்கும் திவ்யதேசபரிபாலகர்கள் இவர்களேயன்றோ. தேசிகப்பிரபந்தங்களை ஓதியிருக்கவேண்டுமானாலும் இவர்களைத் தவிர்த்து வேறுயாரிடம் அவ்வதிகாரம் செல்லும்? இதைப்பற்றி ஒரு பாரதமெழுதினாலும் போராது.

14. அருளாளப்பெருமாளெம் பெருமானார் பணித்த ஞானஸாரப்ரமேயஸாரங்களுக்கோ, பிள்ளைப்பெருமாளையங்கார்பணித்த அஷ்டப்பிரபந்தங்களுக்கோ ஒரு கோவிலிலும் பரிக்ரஹமேற்படவில்லை. அவற்றில் என்ன குறைகூறமுடியும்? பகவந்நியமனம் ஏற்படவில்லையென்பதே குறை. மற்றுள்ள ஆசாரியர்களின் தனியன்களிற்காட்டிலும் மணவாளமாமுனிகளின் தனியனுக்குச் சிறப்பு ஏற்பட்டதுபோல மணவாளமாமுனிகளின் திவ்யப்பிரபந்தங்களுக்கும் அப்ரத்ருஷ்யமான சிறப்பு ஏற்பட்டதென்றால் இதற்குப்பொறாமைப்பட்டுப் பயனென்கொல்? விச்வாமித்ரஸ்ருஷ்டிகள் ஒருகாலும் ஓரிடத்திலும் விலைச்செல்லமாட்டா.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

15. ''தேசிகன் தஞ்சை மாமணிக்கோயிலிலிருந்துகொண்டு தத்வமுக்தர்கலாபம் ஸாதித்தார்; திருக்கண்டியூரிலிருந்துகொண்டு ஸர்வார்த்தஸித்தியெழுதினுர்; உப்பிலியப்பன் ஸன்னிதியிலிருந்துகொண்டு நியாயஸித்தாஞ்ஜநம் பணித்தார்; தேரழுந்தூரிலிருந்துகொண்டு நியாய பரிசுத்தியெழுதினுர்'' என்றிப்படி இவர்கள் எழுதிவைத்துப் பெருமைபெறலாம், பெறுவிக்கலாம். அஸம்பாவிதங்களையெழுதி அவஜ்ஞைபெறவேணுமென்பதே இவர்களது ஸங்கல்பமர்தலாலும், மூலமுடுக்குகளில் எழுதிவைத்திருந்தால் இதைப்பார்த்துச்சில பாமரர்களாவது வஞ்சிக்கப்படமாட்டார்களா? என்னுமெண்ணத்தினுலும் ஒருவர்மாறியொருவராக இத்தகைய அஸம்பத்தங்களை யெழுதிவைப்பதே போது போக்காக இருந்துவருகிருர்கள்.

16. செங்கற்பட்டு, ஸப் ஜட்ஜ்கோர்ட்டு O. S. No. 7, (ஞூ 1945) காஞ்சீபுரம் R. வரததாதாசாரி யென்பவர் -- ''தமிழ்ப்பிரபந்தங்கள் வேதத்தில் பிரவேசமில்லாத ஸ்திரீ சூத்ரர்களுக்காகவே ஏற்பட்டவை. ஆகையால் வடகலை தாதாசாரிகள் இது நமக்குவேண்டாமென்று தென்கலை ஆத்தான்ஜீயருக்கு விட்டுக்கொடுத்துவிட்டார்கள்'' என்று ஸ்டேட்மெண்டு போட்டிருக்கிருர். அந்த ஜட்ஜ் இதையெடுத்துக்காட்டி எழுதியிருப்பதாவது :-

> ''இதனுல் வடகலையாருக்குப் பிரபந்தங்கள் விஷயத்தில் எவ்வளவு அலக்ஷியம் இருக்கிறதென்பதை நன்கு உணரலாம்; இப்படியிருந்தும் இவர்கள் தாங்களும் தமிழ்ப்பிரபந்தம் சொல்லவேணுமென்று ஆக்ரஹம் கொள்வதுதர்ன் மிகவும் வேடிக்கையாயிருக்கிறது'' --- என்று.

''தேவராஜஸ்வர்மி தேவஸ்தானமும் தாதாசார்ய குடும்பமும்'' என்கிற அடுத்த வியாஸம் இதற்கு அநுபந்தமாகவே வாசிக்கத்தக்கது....

முடிவாக வொரு வார்த்தை.

அடியேனுடைய கண்டனங்களுக்கு இலக்காகநூல்களையோ வியாஸங்களையோ எழுதிவருகின்ற வகுப்பினருடைய திரளில் வித்வான்களும் விவேகிகளும் இல்லாமற்போகவில்லை. தாங்கள் சொல்லிவருவதும் எழுதிவருவதும் அபத்தம் அஸம்பந்தம் அத்புதம் என்பதை யுணரமாட்டாதவர்கள் அந்த வகுப்பில் ஒருவர்கூட இருக்கமுடியாது. உண்மையைத் தாங்களே தெரிந்துகொள்ள முடியாமற்போனுலும் அலசியலசி அடியேனெடுத்துக்காட்டியபின்பும் உண்மை தெரிந்துகொள்ளாமலிருக்க முடியவே முடியாது. பெண்களும் பேதையருங்கூடவன்ருே தெரிந்துகொண்டிருக்கிருர்கள். உள்ளது உள்ளபடியே தெரிந்துகொண்டிருந்துங்கூட, படித்தவர் படியாதவர் என்கிற வாசியின்றியும், விவேகிகள் அவிவேகிகள் என்கிற வாசியின்றியும் அஸம்பத்தப்ரலாப பரம்பரையை இடையருது நடத்திக்கொண்டு போகுவதுண்டே, இது வியப்பினும் வியப்பே...

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பெரிய காஞ்சீபுரம் சுக்லயஜுர்வேத பாடசாலையில் நடந்த யாஜ்ஞவல்க்ய ஜயந்தி மஹோத்ஸவத்தில் 17-11-64 இரவில் P. B. A. ஸ்வாமியின் வைதிகோபந்யாஸ கோஷ்டி

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.